
ALKI 2.10.2005
ரூ. 7.00
96 பக்கங்கள்
கல்கி
குடும்பத்துடன் களிக்க...
விஜய் டீ.வியை
விலைபேசும்
விஜயகாந்த்?
பா.ஜ.க. -
தலைவர் ரேஸ்!



Parry's®
Pure
Refined Sugar
தூய்மையை விரும்பும்
உங்களுக்கு!
நீங்கள் எப்பொழுதும் உபயோகிப்பது
ரீஃபைண்ட் ஆயில், பாக்கெட் பால்
மற்றும் மினரல் வாட்டர் போன்ற
சுத்திகரிக்கப்பட்ட பொருட்களையே,
உங்களுக்காக வழங்குகிறோம் பாரீஸ்
பியூர் ரீஃபைண்ட் சர்க்கரை. சர்க்கரை-
களிலேயே மிக அதிகமாக சுத்திகரிக்கப்-
பட்ட பாரீஸ் பியூர் ரீஃபைண்ட் சர்க்கரையை
உபயோகித்து உணர்வீர் அதன் தரத்தை.
Parry's®
Pure
Refined Sugar
Pure Sugar!
Pure Sweetness!!
தூய்மை! இனிமை!!
JWT 7021 2005

“தமிழ்ப் பெண்ணாவே மாறிட்டேன்!”



ஜோதிகா, சோனியா அகர்வால், ரீமாசென்– இவர்களுக்கெல்லாம் தமிழ் கட்டுப் போட்டாலும் வராது. சரி, இவர்களாவது வட மாநிலத்திலிருந்து இறக்குமதியானவர்கள். நம்மூர் த்ரிஷா, இன்றைக்கும் மேடையில் ஏறினால், ஆங்கிலம் தான் அவரது நாக்கில் நர்த்தனமாடும். பெங்களூர்ப் பெண்ணான பூஜா இந்த விஷயத்தில் சமர்த்து. தமிழ், தமிழ், தமிழ் என்று உருகுகிறார்.

''அப்பா கன்னடம், அம்மா சிங்களம், வளர்ந்தது பெங்களூர். இதனால எனக்கு தமிழ் பரிச்சயமில்லாத மொழிதான்'' என்று கொஞ்சம் டான்ஸ் ஆடினாலும் தூய தமிழிலேயே பேச முயற்சிக்கிறார் பூஜா.

''மாடலிங் கோ - ஆர்டினேட்டரா இருந்த என்னைப் போய் 'நடிக்க வந்துரு'ன்னு ஒளிப்பதிவாளர் ஜீவா சார் சொன்னபோது, தூக்கி வாரிப் போட்டுச்சு. தமிழ்ல 'அ'ன்னா 'ஆ'வன்னா கூடத் தெரியாது. நடுங்கிட்டுதான் தமிழ் சினிமாவுக்குள்ளே நுழைந்தேன்.

'ப்ராம்டிங்'ன்னு ஒரு நடைமுறை இருக்கு. நடிகைக்குப் பின்னாடியிருந்து டயலாக் சொல்லித் தருவாங்க. அதுக்கு நாம வாயசைச்சா போதும். மொழி தெரியாத நடிகைகளுக்கு இது வரப் பிரசாதம். ஆனா நடிகர் மாதவன்தான் எனக்கு சரியான ஆலோசனை கொடுத்தார். ''பூஜா, இப்படிப் பேசினா, ஜென்மத்துக்கும் தமிழ் கத்துக்க மாட்டே. யார்கிட்டயும் மறந்தும்கூட இங்கிலிஷ்ல பேசாதே''ன்னார்.

கேட்க நல்லாதான் இருந்தது. ஆனா ரொம்...பக் கஷ்டப்பட்டுட்டம்பா. 'உள்ளம் கேட்குமே', 'ஜேஜே' படப்பிடிப்புல எல்லாரும் கிண்டல் பண்ணுவாங்க. ஆனா இப்போ அப்படி யாராவது பண்ணினா, தமிழ்லேயே திட்டித் தீர்த்திடுவேன்.

'தம்பி' பட இயக்குனர் சீமான், தமிழ் மொழியோட அருமைப் பெருமைகளை நிறைய எடுத்துச் சொல்வார். அவர் கொடுத்த தைரியத்துல, இன்னைக்கு மேடையிலகூட தமிழ்ல பேசப் பழகிட்டேன். (த்ரிஷா கவனிக்க!) தமிழ்நாட்டுல நல்ல பையன் கிடைச்சா இங்கேயே செட்டிலாயிடலாம்னு இருக்கேன்...'' என்று தமிழ் மணத்தோடு பேசுகிறார் பேசுகிறார்... பேசிக் கொண்டேயிருக்கிறார் பூஜா.

- ச.ந. கண்ணன்

அட்டை, படம்: ஆண்டனி ஸ்ரீதர்

வட்டமேஜை

✉ அச்சம், மடம், (நாணம்) இல்லை. அது கனிமொழி ஓவியம் பேசும் உன்னதக் கவிதை. மருதுவின் கைவண்ணம் கவி பாடும் ஓவியம்... பாராட்டு!

- க. பொன்னிலா சேகர், பெங்களூர் 53.

✉ 'ஃபிரிஞ்ச் பெனிஃபிட்' பற்றிய விரிவான விளக்கம் அருமை. 'சிதம்பரம் சிந்திக்கத் தெரியாதவரல்ல... ஆனால், இந்த விஷயத்தில் சிந்திக்க மறுத்திருக்கிறார்' என்ற வரிகள் நம்மையும் சிந்திக்க வைக்கிறதே!

- 'வானவில்' மூர்த்தி, கடலூர்-2.









✉ 'கூடுதல் ஆதாயங்கள் மீதான வரிகள்' (FBT) பற்றிய தங்கள் தலையங்கத்தில் இடம் பெற்றிருந்த ஒவ்வொரு கருத்தும் அட்சரலட்சம் பெறும். மிகக் கொடூரமான இந்த வரிகள், என் போன்ற சராசரித் தொழிலதிபர்களைச் சித்திரவதை செய்து, தொழில் செய்ய முடியாமல் முடக்கி, விரக்தியின் உச்சக் கட்டத்துக்குக் கொண்டு போய் விடும் என்பது உண்மை. எங்கள் உள்ளக் குமுறலை அப்படியே பிரதிபலித்த 'ஃபிரிஞ்ச் பெனிபிட் வரி', இல்லையில்லை 'ஃபிரிஞ்ச் பெனிபிட் டார்ச்சர்' பற்றிய இந்தத் தலையங்கத்தை கொட்டை எழுத்துகளில் நிதி அமைச்சர் ப. சிதம்பரத்துக்கு அனுப்புங்கள்.

என்.ஆர். ராஜேந்திரன், சென்னை -96.

✉ குரு பெயர்ச்சிப் பலன்களை பன்னிரண்டு ராசிக்காரர்களுக்கும் இவ்வளவு 'பக்(கா)குவமா' எடுத்துச் சொல்லியது தஞ்சாவூர் கதம்பம் மாதிரி மணக்க வைத்தது.

- சிம்மவாஹினி, சென்னை - 39.

✉ ராகுல்காந்தியிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகளில் 'சோனியாவை 'அம்மா'ன்னு கூப்பிடுவீர்களா, 'அன்னை'ன்னு கூப்பிடுவீர்களா' என்ற கேள்வி டாப் பரமு.

டி. முருகேசன், திருவாரூர்.

✉ 'இளமை கல்கி' இரண்டு பக்கமும் செம ஹாட்டு மச்சி! வாரம் ஏழு ரூபாய்க்கு நான் செய்யும் உருப்படியான செலவு கல்கி வாங்குவது தான்!

- பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

✉ 'சன்டேன்னா சைபர்' எனும் தலைப்பில் இந்த வாரம் வெளிவந்த ஜோக்குகள் அனைத்தும் அருமை. மொத்தத்தில் தித்திப்பான ஒன்டே மேட்ச் பார்த்த திருப்தி!

- எம். ஜோதிகுமார், சென்னை - 106.

✉ 'ஒரு கல்லூரியின் கதை' திரைப்பட விமர்சனம் 'நச்'சுனு இருந்ததுங்கண்ணா!

- ராமு அர்விந்த், கோவை.

✉ சமையல் எரிவாயு விலை உயராதது குறித்து ஏற்பட்ட அல்ப சந்தோஷம், வேறு வகையில் பறி போவதை விளக்கிய கார்ட்டூன் அற்புதம்!

- குடந்தை எஸ். வெங்கடேசன், ஆரணி.

✉ 'இந்த வாரம் என்ன ஆச்சு தெரியுமா?' என்று துறு துறு பார்வையுடன் படபடவெனப் பேசியபடி வரும் தம்பி

ஓடி வரும் ஓட்டம்!

சூர்யா, 'என்னம்மா, எப்படி இருக்கிறாய்?' என்று பார்வையாலேயே வருடி, உலக விஷயங்கள் பலவற்றை பரிவுடன் சொல்லிச் செல்லும் சுதாம்மா, 'உன் நல்லதுக்குத்தான் சொல்கிறேன்' என்று செல்லமாகக் காதைத் திருகி என் கவனத்தைக் கவரும் தீதி சுனந்தாஜி, இவர்களோடு லாஸ்ட் பட் நாட் தி லீஸ்ட் 'குழந்தே... நீ என்ன பண்ணணுமென்றால்...' என தங்லீஷில் புன்னகை தவழ சர்ரென்று சத் விஷயங்களை எனக்குள் ஏற்றும் தாத்தா பரமாச்சாரியார். இப்படி தனியாக வசிக்கும் என்னைத் தேடி வரும் கல்கி குடும்பத்தோடு, நான் களித்து குதூகலிக்கிறேன்.

- ஸ்ரீனிவாஸன் கோதை, ராஜபாளையம்.

33-ம் பக்கம் வெளியாகியுள்ள
"சொன்னதைச் செய்யப்பா!"
கதையை எழுதியவர்: பானு

✉ 'அன்று டிரைவர், இன்று ஒரு தொழில் அதிபர்' படித்தேன். முப்பது வருடமாக, தான் சுற்றுலா ஓட்டுநராக இருந்து, இன்று கன்னியா குமரியில் ஓட்டல் வரை உழைப்பால் உயர்ந்த கதையைச் சொன்ன மணி 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்ற குறளை மெய்ப்பித்துவிட்டார்.

- எல். சங்கரமூர்த்தி, வள்ளியூர்.

✉ ஜெயந்தி சங்கரின் 'சேவை' சிறுகதையைக் கற்பனையாக நினைக்க முடியவில்லை, நடந்த நிகழ்வாகவே நெஞ்சைக் கனக்க வைத்தது. எதார்த்தத்தில் இப்படித்தானே போய்க் கொண்டுள்ளது மானுடகுலம்!

- காட்டூர் எஸ். அருள்மொழி, சேலம்.

வாரம் ஒரு வாசகர்

'வட்டமேஜை', 'அருள்வாக்கு', 'நீங்கள் கேட்டவை' போன்ற பகுதிகள் எங்கள் மனம் கவரும், திகட்டாத தித்திக்கும் பக்கங்கள்.

- பட்டு கணபதி, எல்.வி. கணபதி,
சென்னை - 28



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு



பக்தி மயமாகும் கோலிவுட்!

'தமிழ் சினிமாக்களின் பெயர்கள் தமிழிலேயே வைக்கப்பட வேண்டும்' என்று ராமதாசும், திருமாவளவனும் உறுமிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், கோலிவுட் சத்தமின்றி பக்தி மயமாகி வருகிறது...

முன்பெல்லாம் தமிழ்ப்படங்களுக்கு பராசக்தி, கந்தன் கருணை, சரஸ்வதி சபதம் என்று சுவாமி பெயர்கள் வைக்கப்பட்டன. காலப்போக்கில் அவை குறைந்து, பின்னர் திடீரென ரஜினிகாந்தின் நூறாவது படமான 'ஸ்ரீராகவேந்திரா' உள்ளிட்ட சில படங்களுக்கு, அவ்வப்போது பக்தி மயமாக வைக்கப்பட்டன. உதாரணமாக 'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா', 'கந்தா கடம்பா கதிர்வேலா' போன்றவற்றைச் சொல்லலாம்.

இன்று தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோக்கள் பலரும், தங்களது படங்களின் பெயரில் கடவுள் பெயர் வருவது போன்றே வைத்துக் கொள்கின்றனர். சூப்பர் ஸ்டாரின் சந்திரமுகிக்கு முன்பு வந்த படங்களான 'பாபா', 'படையப்பா', 'அருணாச்சலம்' மூன்றுமே ஆண்டவன் பெயர்கள். கமல்ஹாசனின் 'அன்பே சிவம்', 'விருமாண்டி' போன்றவையும் தெய்வீகப் பெயர்களே...

இயக்குனர் ஹரி தமது படங்களுக்கு சாமி பெயரை வைப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளார். விக்ரம் நடித்த 'சாமி', 'அருள்', சிம்பு நடித்த 'கோவில்', சூர்யா நடிக்கும் 'வேல்' ஆகியன சுவாமி பெயர்கள். இன்னொரு இளம் நாயகனான அஜீத் நடித்து வெளிவர இருக்கும் நான்கு படங்களிலுமே சுவாமி பெயர்கள் இருக்கிறன. அவை 'காட்ஃபாதர்', 'நான் கடவுள்', 'திருப்பதி', 'பரமசிவன்'.

இதில் என்ன ரகசியம் என்று தெரிந்து கொள்ள, சம்பந்தப்பட்டவர்களிடம் பேசினால், ஒருசிலர் இதை 'சென்டிமெண்ட் மேட்டர்' என்கிறார்கள். அதற்காக 'சாமி' பெயர் வைத்த எல்லாப் படங்களும் பெரிய அளவில் ஓடவில்லை 'சாமி' அளவுக்கு. இன்னும் சிலரோ 'கதைக்கு ஏற்றவாறு அப்படி அமைந்து விடுகிறது' என்கிறார்கள். இன்னும் சிலரோ, 'நாயகன் கடவுள் பெயரை தமது கதாபாத்திரத்துக்கு வைக்க விரும்புகிறார்... நாங்கள் அதனை டைட்டிலாக்கி விடுகிறோம்' என்கிறார்கள். எப்படியோ இதை எதிர்த்து கடவுள் மறுப்பு இயக்க ஆசாமிகள் முண்டா தட்டாமல் இருந்தால் சரி!

• கலை



• ஜோஷ்னா - அஞ்சன் சின்னப்பா



• பாஞ்சா

"இவருக்கா விருது?"

சர்வதேச அளவில் மிகச் சிறந்த வீரர்களை உருவாக்கும் பயிற்சியாளர்களுக்கென்று மத்திய அரசு ஆண்டுதோறும் 'துரோணாச்சாரியார்' விருது வழங்கி வருகிறது. இந்த வருடமும் மூன்று பேருக்கு இவ்விருது அளிக்கப்பட்டது. மூன்று பயிற்சியாளர்களில் ஸ்குவாஷ் பயிற்சியாளரான இருபத்தொன்பது வயது சைரஸ் பாஞ்சாவும் ஒருவர். இவருக்கு விருது தரப்பட்டதுதான் பலதரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற உலகக் கோப்பை ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த சாதனைப்பெண் ஜோஷ்னா சின்னப்பா, பாஞ்சாவுக்கு எதிராக வெகுண்டெழுந்து அறிக்கை வெளியிட்டிருப்பதோடு, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு உடனடியாக புகார்க் கடிதங்களை அனுப்பிவிட்டார்.

"சிறுவயதில் கோச்சிங் கேம்ப் நடந்த பொழுது, வேறு வழியின்றி அவரிடம் ஓரிரு பயிற்சிகள் பெற்றிருக்கிறேன். மற்றபடி என் கேரியர் கிராஃப் உயர்ந்ததற்கு அவர் சிறுதுரும்பையும் கிள்ளிப் போடவில்லை. என்னுடைய துரோணாச்சாரியார் என்றால், அது என் தந்தை அஞ்சன் சின்னப்பாதான். அவரளித்த கடுமையான பயிற்சிகளால் மட்டுமே நான் உலக அளவில் ரேங்கிங் பெற்றுள்ளேன்" என்கிறார் ஜோஷ்னா.

"19 வயதில் ஸ்குவாஷ் விளையாட்டிலிருந்து விலகியவர் பாஞ்சா. இரவு பகலாக என் பெண்ணை பார்த்துப் பார்த்து உருவாக்கியவன் நான். அஞ்சு ஜார்ஜின் கணவருக்கு எப்படி சரியாக துரோணாச்சரியார் விருது கிடைத்ததோ, அது போல்தானே ஜோஷ்னா சின்னப்பா விஷயத்திலும் நடந்திருக்க வேண்டும்?" என்று நம்மிடம் கொதித்தார் ஜோஷ்னாவின் தந்தையான அஞ்சன் சின்னப்பா.

கிரிக்கெட்டுக்கு பி.சி.சி.ஐ (BCCI) மாதிரி ஸ்குவாஷ் விளையாட்டுக்கென்று இருக்கும் அமைப்பு SRFI (Squash Racket Federation Of India) இந்த அமைப்பின் பரிந்துரையின் பேரில்தான், சைரஸ் பாஞ்சாவுக்கு துரோணாச்சாரியார் விருது அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இதன் பொதுச் செயலாளர் ராமச்சந்திரன், "நாங்கள் ஜூனியர் மற்றும் சீனியர் வீரர்களின் முன்னேற்றப் பாதையில் பாஞ்சாவின் பங்களிப்பு என்ன என்பதைப் பற்றித்தான் அரசிடம் எடுத்துரைத்தோம்" என்று தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்.

ஸ்குவாஷ் வட்டாரத்தில் விசாரித்த போது, 'அமிதாஜ் இந்தர் சிங்கிற்குதான் முறைப்படி இந்த விளையாட்டுக்கான துரோணாச்சாரியார் விருது அளித்திருக்க வேண்டும்' என்கிறார்கள்.

இது குறித்து பாஞ்சா என்ன சொல்கிறார்?

தன்மீது எழுந்துள்ள சர்ச்சைகளுக்கெல்லாம் அவர் பிடிகொடுப்பதாக இல்லை. சமர்த்தாக, புதுதில்லியில் நடைபெற்ற கோலாகல விழாவில், ஜனாதிபதியிடமிருந்து விருதை வாங்கி வந்து விட்டார்.

- ச.ந.கண்ணன்

உங்கள் உயிருக்குக் காப்பீடு... குடும்பத்தின் வளமைக்குப் பாதுகாப்பு!



உங்கள் குடும்பத்தினரிடம் நீங்கள் கொண்டுள்ள அன்புக்கும் பாசத்திற்கும் விலை மதிப்பு ஏது? உங்கள் குடும்பத்தினரின் நலன் கருதி, பொன்விழாச் சீட்டு விழாவாகக் கொண்டாடப்படும் இந்த விஜயதசமி சீட்டு விழாவின் போது புதிய சீட்டில் சேரும் சந்தாதாரர்களுக்கு அன்பளிப்பாக ஆயுள் இன்சூரன்ஸ் காப்பீடு* வழங்குகிறது ஸ்ரீராம் சிட்ஸ்.

வளமை - பாதுகாப்பு - ஆரோக்கியம்

காலத்தை வென்று, என்றும் புதுமையுடன் திகழும் அற்புதமான வளமை வழிகாட்டி - ஸ்ரீராம் சிட்ஸ் சீட்டுத் திட்டம். சேமிக்கவும், அதிலிருந்தே நிதியுதவி பெறவும் வகை செய்யும் வளமைத் திட்டம். உங்கள் வாழ்க்கையின் பொருளை இரட்டிப்பாக்க ஆயுள் இன்சூரன்ஸ் பாதுகாப்பு. இன்சூரன்ஸ் திட்டத்தில் இணைந்தவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்களது குடும்பங்களும் மனதளவிலும், பொருளாதார நிலையிலும் ஆரோக்கியமாகத் திகழ்கின்றன.

இன்சூரன்ஸ் துறையில் ஸ்ரீராம் குரூப்

கடந்த சில ஆண்டுகளில் 2,60,000 குடும்பங்கள் ரூ.5,700 கோடிக்கு மேல் இன்சூரன்ஸ் காப்பீடு பெற ஸ்ரீராம் குரூப் உதவி செய்துள்ளது. ஆயுள் இன்சூரன்ஸ் துறையில் ஸ்ரீராம் குரூப் பெரிய அளவில் பங்கேற்க வருகிறது.

எதிர்காலப் பாதுகாப்புக்குக் காப்பீடு!

உங்களது குடும்பத்தின் எதிர்காலப் பாதுகாப்புக்காகவே ஸ்ரீராம் சிட்ஸ், ஆயுள் இன்சூரன்ஸ் காப்பீடு அன்பளிப்பாக வழங்குகிறது. முதல் மூன்று மாத பிரிமியமாக, சிறு தொகையை நீங்கள் செலுத்தி விட்டால், அடுத்த ஆறு மாத பிரிமியத்தை ஸ்ரீராம் சிட்ஸ் செலுத்தி விடும்.

உங்கள் குடும்பத்தினரிடம் நீங்கள் கொண்டுள்ள பாசத்தையும் அவர்களது எதிர்கால வளமையில் நீங்கள் கொண்டுள்ள அக்கறையையும் உணர்த்த நல்ல வாய்ப்பு இது.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: ♦30 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி ♦நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமானவர்க்கு வேலை வாய்ப்பு ♦இதுவரை ரூ.16,500 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா ♦தினந்தோறும் ரூ.10 கோடி பட்டுவாடா ♦தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிராவில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பொன் விழா சீட்டுத் திருவிழா

ஸ்ரீராம் சிட்ஸ்

தமிழ்நாடு பிரைவேட் லிமிடெட்

கிரீம்ஸ் துவார், 149 கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006. போன்: 52236000

WORDCRAFTS

பா.ஜ.க – சூடு பிடிக்கும் தலைவர் ரேஸ்!

பாரதிய ஜனதா கட்சியை, அடுத்து வழிநடத்த இருப்பது யார்? _ இதுதான் பா.ஜ.கவினர் மத்தியிலும், அரசியல் பார்வையாளர்கள் மத்தியிலும்...ஏன்... எதிர்கட்சிகளாலும் கூட பரபரப்புடன் விவாதிக்கப்பட்டு வரும் விஷயம். இதற்கு வித்திட்டது, அதன் தேசியத் தலைவர் எல்.கே.அத்வானி தமது ராஜினமாவுக்கு நாள் குறித்து, சென்னையில் கூடிய தேசிய செயற்குழு கூட்டத்தில் பேசியதுதான்.



• மஹாஜன்



• சுஷ்மா



• ஜேட்லி

துவங்கியது ரேஸ்

அத்வானியின் இந்த அறிவிப்பு, ஏற்கெனவே உச்சத்தில் இருந்த தலைமைப் போட்டியை தற்பொழுது கொழுந்துவிட்டு எரிய வைத்துள்ளது. பாரதிய ஜனதாவில் வாஜ்பாய், அத்வானி போன்ற பெருந் தலைவாகளை விடுத்துப் பார்த்தால், ஏகப்பட்ட இரண்டாம் கட்டத் தலைவர்கள் உள்ளனர். இதுவரை பாரதிய ஜனதா தனது பலமாகக் கூறிக் கொண்டிருந்த 'அதிக அளவிலான இரண்டாம் கட்டத் தலைவர்கள்' தற்பொழுது மிகப்பெரிய பலவீனமாக உருவெடுத்துள்ளது என்றே சொல்லலாம். ஆம்... சம அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ள பலர் அக்கட்சியில் இருப்பது, தலைமைப் பதவிக்கான நபரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

யுவநேதா

தற்போது 'யுவநேதா' என்ற சொல் ஆர்.எஸ்.எஸ்ஸால் பா.ஜ.கவில் வலியுறுத்தப்படுகிறது. அதாவது கட்சிக்கு 'இளம் தலைவர்' நியமிக்கப்பட வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ்ஸின் எண்ணம்...

இந்துத்வாவே மூச்சு

ரேஸில் இருக்கும் தலைவர்களின் தகுதிகளை ஆராயுமுன், பொதுவாக பா.ஜ.கவின் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் நினைக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்...

தகுதி - 1: இந்துத்வாவை சுவாசிப்பவர், அதன் சித்தாந்தங்கள் மீது உள்ளார்ந்த பற்று கொண்டவர்.


தகுதி - 2: மதம் சார்ந்த ஒவ்வொரு விஷயத்துக்கும் தங்களது வழிகாட்டுதலின்படி நடப்பவர்.

தகுதி - 3: எந்தவொரு நடவடிக்கையை எடுத்தாலும், அதில் இந்துக்களின் நலனே மேலோங்கி இருக்கும் வகையில் எடுப்பவர்.

ரேஸில் இவர்கள்:

முரளி மனோகர் ஜோஷி

இவர் பாரதிய ஜனதாவின் நெம்பர் 3. இவருக்கு சங் பரிவாரின் சித்தாந்தங்கள் அனைத்தும் அத்துபடி. பத்து வயதில் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு வந்த இவர், ஏற்கெனவே தேசியத் தலைவராகப்





• ஜோஷி



• வெங்கையா



• ஜஸ்வந்த் சிங்

பணியாற்றியவர். 'ஏக்தா யாத்திரை' என்ற பெயரில், கன்யாகுமரி முதல் ஸ்ரீ நகர் வரை ரத யாத்திரை நடத்திய இவருக்கு ஆர்.எஸ்.எஸ்ஸின் அருட்பார்வை சற்று அளவுக்கு மீறியே இருக்கிறது. பழுத்த அனுபவஸ்தரான இவருக்கு, நாடு தழுவிய அளவில் செல்வாக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறிதான். அடிமட்டத்திலிருந்து, மேல் மட்டம் வரை பல கட்சிப் பதவிகளை அனுபவித்துள்ளதால், இக்கட்டான சூழ்நிலையில், இவர் தலைவராகும் வாய்ப்பு சற்றுக் கூடுதலாகவே உள்ளது. 'யுவநேதா'வை ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்துமானால், இவரது பாடு திண்டாட்டம்தான்!



ஜஸ்வந்த் சிங்

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான இவர், வாஜ்பாய், அத்வானி இருவரது அன்பிற்கும் பாத்திரமானவர். இவருக்கு, கட்சிக்குள் 'மிஸ்டர் க்ளீன்' என்ற பட்டமே உண்டு. திட்டக் குழு, நிதித் துறை, வெளியுறவுத் துறையில் நல்ல அனுபவம் கொண்ட இவருக்கு, தொண்டர்களிடம் பெரிய அளவில் ஆதரவு இல்லை என்கிறார்கள். வாஜ்பாயின் சாய்ஸ் நெ:1 என்று சொல்லப்படும் இவர் மீது ஏனோ ஆ.எஸ்.எஸ்ஸின் கடைக்கண் பார்வை விழவில்லை.

வெங்கையா நாயுடு

ஜனதாக் கட்சியின் இளைஞர் பிரிவு தலைவராகத் தமது பணியைத் துவக்கிய இவருக்கு, ஏற்கெனவே பா.ஜ.க. தேசியத் தலைவராகத் திறம்படப் பணியாற்றி, பலரது நன்மதிப்பைப் பெற்றது மிகப்பெரிய பலம். நாடு தழுவிய அளவில் சுற்றுப் பயணம் செய்து, தொண்டர்களிடம் நன்கு அறிமுகமாகிவிட்ட இவருக்கு மீண்டும் வாய்ப்புக் கிட்டலாம் என்பது பலரது எதிர்பார்ப்பு. அத்வானியின் ஆதரவாளர் என்கிற இமேஜ் தான், ஆர்.எஸ்.எஸ்.-ஐ உறுத்துகிறது.

ராஜ்நாத் சிங்

ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்ஷனின் பரிபூரண கருணைப் பார்வையே இவரது பலம். உ.பி.மாநில முன்னாள் முதல்வரான இவர் ஒரு தேர்ந்த நிர்வாகி. மாநில அளவில் பலமான செல்வாக்கினைக் கொண்டுள்ள இவருக்கு 'எந்த சர்ச்சையிலும் சிக்காதவர்' என்ற நற்பெயரும் உள்ளது. கட்சியின் பல அந்தரங்கமான முடிவுகளில், ராஜபுத்திர இனத்தவர்களின் தாக்கம் இருக்கும் என்

முந்தப்போவது யார்?



• சுதர்ஷன்

பது நிதர்சனம். அந்த வகையில் ராஜநாத்சிங் ராஜபுத்திர இனத்தவர்... ஆர்.எஸ். எஸ்ஸின் சாய்ஸ் நெ.2வான இவருக்கு அதிர்ஷ்டம் அடித்தாலும் அடிக்கலாம்.

பால் அப்தே

பால் அப்தே தற்போது பாரதிய ஜனதாவின் துணைத் தலைவர்களுள் ஒருவர். இவரது பணிகள் மெச்சத் தகுந்த வகையில் உள்ளதாகக் கூறுகின்றனர் இவரது ஆதரவாளர்கள். இந்த அறுபத்தாறு வயது வழக்கறிஞருக்கு, ஆர்.எஸ்.எஸ் தலைவர்களின் ஆதரவு நிறையவே இருக்கிறது. இந்துத்வா கொள்கைகளில் தீவிர நாட்டம் கொண்ட இவர், நீண்ட நாட்களுக்கு இல்லாவிட்டாலும் கூட, தற்போதைய இக்கட்டான நிலையில் தாற்காலிக ஏற்பாடாகவாவது தலைவராக வேண்டும் என்பது சில ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் எதிர்பார்ப்பு. நாடு தழுவிய அளவில் செல்வாக்கு இல்லாத போதும், பரிவார் அமைப்புகளின் மரியாதைக்குரியவராக இவர் இருப்பதால், இவர் பக்கமும் காற்று வீசலாம்.

சுஷ்மா சுவராஜ்

தமது வசீகர முகத்தாலும், தேர்ந்த பேச்சுத் திறமையாலும் பலரது கவனத்தையும் ஈர்த்தவர். மீடியாவின் முன்பு சாமர்த்தியமாகப் பேசி, கட்சியின் இமேஜை உயர்த்துபவர்... இவருக்கு வாய்ப்பளித்து, பெண்கள் இட ஒதுக்கீடு விஷயத்தில் பா.ஜ.க இழந்ததாகக் கூறப்படும் இமேஜை ஈடுகட்டிவிடலாம் என்கிறார்கள் இவருக்கு ஆதரவளிப்பவர்கள். தமது இருபத்தைந்தாவது வயதிலேயே மாநில அமைச்சராகப் பொறுப்பேற்ற இவருக்கு, கட்சியின் உயர்மட்ட நடவடிக்கைகளில் தேர்ந்த அனுபவம் உண்டு. 'யுவநேதா' நிபந்தனைகூட இவருக்கு சாதகமாகவே உள்ளது. இவரது போட்டியாளரான உமா பாரதி, தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கிக்கொள்வது சுஷ்மாவுக்கு மிகப் பெரிய ப்ளஸ்.... சர்வநிச்சயமாய் அடுத்த தலைவர் பெண்தான் என்றால், இவர்தான் கட்சியின் ஒரே சாய்ஸ். இவர்மீது ஆர்.எஸ்.எஸ் எவ்வித ஆர்வமும் இதுவரை காட்டவில்லை. இதுதான் இவரது மிகப் பெரிய மைனஸ்.

பிரமோத் மஹாஜன்


பா.ஜ.கவின் நவீன முகங்களுள் ஒருவர். கட்சியினுடைய வளர்ச்சிக்காக தாம் வகித்த அமைச்சர் பதவியைத் துறந்து, கட்சிப் பணியாற்றச் சென்று, கட்சியின் மூத்த தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அத்வானியின் செல்லப்பிள்ளை எனப்படும் இவருக்கு, மாநில அளவில் மெச்சத் தகுந்த அளவில் செல்வாக்கு இல்லை. ஆயினும் நாடு தழுவிய அளவில் ஓரளவிற்கு இவரது முகம் பரிச்சயமாகிவிட்டது. அரசியல், பத்திரிகையியல் என்று இரு துறைகளிலும் பட்டம் பெற்றுள்ளார். 1998ல் பிரதமரின் அரசியல் ஆலோசகராகப் பணியாற்றிய இவருக்கு மகுடம் சூட்டப்படும் வாய்ப்பு, ஆர்.எஸ். எஸ்ஸின் நிலைப்பாட்டைப் பொறுத்தே அமையும்.

அருண்ஜேட்லி

கட்சியின் ஹைடெக் முகம். சட்ட அமைச்சராகப் பணியாற்றிய இவருக்கு 'நேர்மையான அரசியல்வாதி' என்ற பட்டமே உண்டு. அத்வானியின் மற்றொரு செல்லப் பிள்ளையான இவருக்கும் மாநில அளவில் வலுவான அடித்தளம் இல்லை. நல்ல நிர்வாகத் திறன் கொண்ட இவரது மிகப் பெரிய பலவீனம், இவர் சமீபத்தில் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டார் என்பதுதான்.

எத்தனை பலம் - பலவீனம் இருந்தாலும் கட்சியின் தலைவர் என்று வரும்போது, கட்சியின் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியவராக, குறிப்பாக, பிரச்னைகளை உருவாக்காதவராக, கட்சியில் தொலைந்து போனதாகக் கூறப்படும் 'கட்டுப்பாட்டை' மீட்டுக் கொண்டு வருபவராக, மீண்டும் வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்பவராக,

• பால் அப்தே



• ராஜ்நாத் சிங்



J.C. முதியோர் இல்லம்



(A Unit of Janakiammal Trust) Regd.

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு

(I.T. Act 80G excemption) உண்டு.

இயற்கை சூழ்நிலை, படுக்கை வசதிகள், சுவையான சைவ உணவு, இலவச மருத்துவம், தூய்மையான பராமரிப்பு, குறைந்த கட்டணம், அன்பான கவனிப்பு, மனம் குளிரும் சேவை.

ஊனமுற்றவர்களுக்கும், படுத்தபடுக்கையில் உள்ளவர்களுக்கும் சேவை செய்ய எங்கள் இல்லம் காத்திருக்கிறது!

ENJOY YOUR SECOND CHILDHOOD DAYS AT :

Plot No.30 & 31, D.No.4, Murugan Kovil First Street, (Near Jain Temple) Vivekananda Nagar, Kolathur, Chennai - 99. Phone : 55171667, 26208400 Mobile : 9282173089

Donations accepted for Home under Public Charitable Trust

Opening Shortly at MADURAI

ஜாதகமே தேவையில்லை! உங்களை அதிர்ஷ்டசாலியாக்குகிறார்!

விஜய் டிவியில் திங்கட்கிழமை தோறும், காலை 9.45 மணிக்கும், ராஜ் டிவியில் தினமும் காலை 7.00 மணிக்கும், தமிழ்த்திரை டிவியில் பல முறை தோன்றும் புகழ்பெற்ற பரம்பரை ஜோதிடர் ஒருவருடைய முகத்தைப் பார்த்தும், கைரேகை அல்லது புகைப்படத்தை பார்த்தும் முனீஸ்வரர் அருளால் நீங்கள் நினைத்து வந்த காரியத்தை நேரில் பார்த்தது போல் பளிச் என்று பலன் சொல்லி உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் செய்வினை தோஷங்களையும் முனீஸ்வரர் அருளால் நிவர்த்தி செய்து அதிர்ஷ்டசாலி ஆக்குகிறார்.



அருள்வாக்கு சித்தரின் வெளியூர் விசிட்

பிரதி மாதம் தேதி

2	காஞ்சிபுரம்	ஹோட்டல் MM
4	தஞ்சாவூர்	Temple Tower
5	திருச்சி	ஹோட்டல் ரம்யாஸ்
8	மதுரை	ஹோட்டல் செந்தூர்
9	திருநெல்வேலி	ஹோட்டல் ஆரியாஸ்
12	பாண்டி	ஹோட்டல் ஜெயராம்
13	திரு அண்ணாமலை	ஹோட்டல் ஆகாஷ்
19	சேலம்	ஹோட்டல் நேஷனல்
20	தர்மபுரி	ஹோட்டல் DND
21	ஓசூர்	ஹோட்டல் ஸ்ரீனிவாசா
22, 23, 24	பெங்களூர்	ஹோட்டல் உட்லண்ட்ஸ்
25	வேலூர்	ஹோட்டல் வசந்த விஹார்
27	ஈரோடு	ஹோட்டல் ஆக்ஸ்போர்டு
28	கோவை	ஹோட்டல் தமிழ்நாடு

முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தர்

ஒயிட் & ஒயிட் V.V.M.B. நல்லப்பன் நீலகண்ட சிவா

எண்.32, மகாலட்சுமி தெரு, தி.நகர், சென்னை - 600 017.

போன் : 24761913, செல் : 98412 94932, 94444 16854

கூட்டணிக் கட்சிகளை அரவணைப்பவராக, இருக்க வேண்டும் என்பது தொண்டர்களின் எதிர்பார்ப்பு.

அடுத்த தலைவர் தேர்வு குறித்து தமிழக பா.ஜ.கவின் முக்கியத் தலைவர்கள் மூவரிடம் மூன்று கேள்விகளை முன்வைத்தோம்:



• இல.கணேசன்

இல.கணேசன் *(பா.ஜ.க தேசியச் செயலாளர்)*

அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்க பா.ஜ.க. திண்டாடுகிறதாமே...?

திண்டாடுவதற்கு பா.ஜ.க ஒன்றும் ஒரே குடும்பத்தை நம்பி நடக்கின்ற அல்லது செல்வாக்குமிக்க இரண்டாம் மட்டத் தலைவர்களே இல்லாத கட்சி அல்ல. போட்டி கடுமையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் திறமைசாலிகள் அதிகமாக இருப்பதுதான். இருந்தாலும் ஒருமித்த கருத்துடன் டிசம்பர் மாதத்தில் அடுத்த தலைவர் தேர்வு செய்யப்படுவார்.




• ஹெச்.ராஜா

ஹெச்.ராஜா *(தமிழக பா.ஜ.க. பொதுச் செயலாளர்)*

ஆர்.எஸ்.எஸ். திணிக்கும் ஒருவர்தான் பா.ஜ.கவின் அடுத்த தலைவராக வர முடியும் என்ற கருத்து பற்றி...?

ஆர்.எஸ்.எஸ் எங்களுடைய தாய் அமைப்பு. இந்துத்வா கொள்கைகள் புறந்தள்ளப்படக் கூடாது எனும் ஆர்.எஸ்.எஸின் எதிர்பார்ப்பினைப் பா.ஜ.க. பூர்த்தி செய்யும். அதே சமயம் பா.ஜ.கவின் நிதி மற்றும் நிர்வாகத்தில் ஆர்.எஸ்.எஸ் என்றுமே தலையிடாது. ஆகவே இவர்தான் வரவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். யாரையும் வலுவில் திணிக்காது.



• பொன்.ராதா கிருஷ்ணன்


பொன். ராதாகிருஷ்ணன் *(முன்னாள் மத்திய அமைச்சர்)*

எப்படி இருந்தாலும் அடுத்த தலைவர் ஆர்.எஸ்.எஸ்ஸின் ரப்பர் ஸ்டாம்பாகத்தானே செயல்பட முடியும்..?

நிச்சயமாக இல்லை. வரக்கூடிய தலைவர் ஓர் உதாரண புருஷராக, சொந்தமாக முடிவெடுக்கும் திராணி உள்ளவராக இருப்பார். பா.ஜ.க தலைவர் தன்னுடைய ரப்பர் ஸ்டாம்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணமே ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு இல்லை.

எது எப்படி இருந்தாலும் பா.ஜ.கவின் அடுத்த தலைவர்தான் அநேகமாக பா.ஜ.க கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவார் என்பது பலரது எண்ணம். ஆகவே தலைவர் தேர்வு அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் இருக்குமா...? இல்லை... அதற்கு ஏற்ற சூழ்நிலை இதுவல்ல என்று இந்தக் கருத்து ஒத்தி வைக்கப்படுமா என்பது பா.ஜ.க தலைவர்களுக்கே வெளிச்சம்!

- இரா. முத்துக்குமார்



அத்வானியின் எச்சரிக்கை!

பா.ஜ.க சென்னை மாநாடு காமெடியாக ஆரம்பித்து, சோக ரசத்தில் முடிந்தது.


காங்கிரஸைப் பற்றி கூறப்பட்ட உவமைகள் பல பா.ஜ.கவுக்கும் பொருந்தும் என்பதை மறந்து, தலைவர்கள் பேசினார்கள்.

உதாரணமாக காங்கிரஸ் காரில் இரண்டு டிரைவர்கள் அமர்ந்து அதனை இயக்குகிறார்கள் என்றும், மூன்றாவதாக ஒருவர் டயரைப் 'பஞ்சர்' செய்ய முயன்று கொண்டிருக்கிறார் என்றும் பேசப்பட்டது. இது பா.ஜ.கவுக்கும் ஏற்றதான ஓர் உவமையே.

பா.ஜ.கவின் கொள்கைகள் என்ன, செயல் திட்டங்கள் என்ன என்பதை விடவும் அதிகமாக, மத்தியில் ஆளும் கூட்டணியை விமர்சிப்பதே முக்கிய நோக்கம் என்பதாக மாநாட்டின் ஆரம்பத்தில் தோன்றியது. ஆனால் முடிவை நெருங்கும்போதோ, இந்த மாநாட்டின் பிரதான காரணமே அத்வானிக்கு விடை கொடுத்து அனுப்பி வைப்பதுதான் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. இத்தகைய மாநாடு சென்னையில் நடக்க நேர்ந்தது, தமிழர் அனைவருக்குமே



கல்கி



2005 அக்டோபர்
பார்த்திப புரட்டாசி 16
மலர் : 64
இதழ் : 9



வருத்தத்தை ஏற்படுத்தக் கூடியது.

டிசம்பரிலிருந்து பதவி விலகுவதாக அறிவித்துள்ள அத்வானியின் தீர்மானத்தில், மறுபரிசீலனைக்கே இடமில்லை என்று இரண்டாவது அணித் தலைவர்கள் முடிவுக்கு வந்து விட்டனர்! சுஷ்மா சுவராஜ் திட்டவட்டமாகச் சொல்லியே விட்டார்.


எல்லாருமாகச் சேர்ந்து அத்வானியை வழி அனுப்பி விடலாம். ஆனால் அவர் கூறியுள்ள உண்மைகளை எங்கேயும் அனுப்பிவிட முடியாது. அவை பா.ஜ.கவுடன் இருந்தே தீரும். இருந்து, தொல்லை தந்து வரும்.

"ஆர்.எஸ்.எஸ். இயக்கம் பா.ஜ.க.வுக்கு ஆதரவு தருவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்; ஆலோசனை கூறலாம், ஆனால் நிர்ப்பந்தப்படுத்த முடியாது" என்கிறார் அத்வானி. ஆர்.எஸ்.எஸ். அனுமதியின்றி பா.ஜ.க. எந்த முடிவையும் கட்சியிலோ, அல்லது பதவிக்கு வந்தால் ஆட்சியிலோ எடுக்க முடியாது என்ற நிலை தோன்றியிருப்பதாக எச்சரித்திருக்கிறார்.

இந்த எச்சரிக்கையை 'தேர்தல் வெற்றி' என்ற குறுகிய நோக்கில் பா.ஜ.க. புறக்கணித்து விடும். ஆனால் மக்கள் அத்வானியின் எச்சரிக்கை பற்றி சிந்திக்க வேண்டும்.

பா.ஜ.க. தலைவர்கள் பலரும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் ஈடுபட்டிருந்து பின்னர் பா.ஜ.கவுக்கு வந்தவர்களே. ஆர்.எஸ்.எஸ். மற்றும் 'சங் பரிவார்' அமைப்புகளின் உழைப்பும் உதவியும் இன்றி, பா.ஜ.க. தேர்தலில் வெற்றி பெறுவது கஷ்டம் என்பது யதார்த்தம். இது அத்வானிக்குத் தெரியாதது அல்ல. ஆயினும் ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, நாட்டு மக்களின் ஒட்டு மொத்த நலனைத்தான்





கருத முடியும். பெரும்பான்மையினர் நலனை மட்டுமே கவனித்துச் செயல்படக் கூடாது. இதை ஆர்.எஸ்.எஸ். புரிந்து கொள்ள மறுப்பதுதான் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணம். ஜின்னா பற்றிய அத்வானியின் கருத்து, ஆர்.எஸ். எஸ்ஸுக்கு அவரைத் தாக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது; அவ்வளவுதான்.

அத்வானியின் எச்சரிக்கையை பா.ஜ.க. ஏற்காதபோது, கட்சியிலும் ஆட்சியிலும் ஆர்.எஸ்.எஸ்ஸின் செல்வாக்கு அதிகரிக்கும். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தாலும், ரிமோட் கண்ட்ரோல் ஆர்.எஸ்.எஸ்ஸிடம்தான் இருக்கும். இது நாட்டுக்கு நல்லதா? இதைத்தான் மக்கள் - வாக்காளர்கள் - சிந்திக்க வேண்டும். "சகோதரத்வா" நாட்டில் வளர வேண்டுமா அல்லது ஹிந்துத்வா அடிப்படை வாதம் வளர்ச்சி பெறவேண்டுமா என்பதுதான் அவர்கள் முன் உள்ள எளிய கேள்வி.

ஆர்.எஸ்.எஸ்ஸின் துணை இன்றியே தேர்தல் சமயத்தில் மக்களைச் சந்திக்கிற துணிவையும், தொண்டர் படையையும் பா.ஜ.க. பெற்று, சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். இதற்கேற்ப ஹிந்துத்வாவை அடக்கி வாசித்து, பொருளாதாரக் கொள்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து, மக்களையும் தொண்டர்களையும் கவரவேண்டும். காங்கிரஸ் கொள்கைகளுக்கு மாறுபட்டதாகவே மேலும் சிறந்த சமுதாய - பொருளாதாரக் கொள்கைகளை அமைத்து பிரசாரம் செய்வது சாத்தியமே.

ஆனால் இதையெல்லாம் பா.ஜ.க. செய்யப் போவதில்லை. அத்வானிக்கு கும்பிடுபோட்டு அனுப்பி வைக்கும்போது, பா.ஜ.க. தன் சுதந்திரத்தையும் பறிகொடுத்து, 'சங் பரிவார்' அமைப்புகளிடம் முழுமையாக அடிமைப்பட்டுப் போகும். ○



"திமிர்தான் என்னோட ப்ளஸ்!"

"நல்ல உயரம், ஆஜானுபாகுவான தோற்றம், கூர்மையான கண்கள்...' என சினிமாவுக்கென்று எது எதுவெல்லாம் ப்ளஸ்ஸாக இருக்கும் என்று நினைத்தேனோ, அதுவே ஆரம்பத்தில் முட்டுக் கட்டையாக இருந்தன. தேங்க் காட்" என்று மூன்று வருட போராட்டங்கள், வலிகள் எதுவுமின்றிச் சிரிக்கிறார் 'தீப்பிடிக்க' புகழ் ஆர்யா.

படம் தோல்வியா?

'ஒரு கல்லூரியின் கதை' இப்படியாயிடுச்சேன்னு பலரும் வருத்தப்படறாங்க. நல்லவேளை, நான் சொதப்பினதால படம் ஃப்ளாப் ஆயிடுச்சுன்னு யாரும் சொல்லலை. 'அறிந்தும் அறியாமலும்' படம் மாதிரியே எதிர்பார்த்து வந்ததால, ரசிகர்கள் ஏமாற்றம் அடைஞ்சுருக்காங்க. வசனங்கள் இன்னும் 'பளிச்'னு இருந்திருக்கலாம். பட ரிலீஸுக்கு முன்னாடி 'படம் சூப்பர்'னு கமெண்ட் வந்ததால, எல்லோருமே ரொம்ப எதிர்பார்த்துட்டோம். ஆனாலும் யாருக்கும் நஷ்டம் ஏற்படுத்தல.

'தட்டி'க் கொடுங்க மீடியா!

நான் ரொம்ப யதார்த்தமானவன்; ஹீரோங்கிற கர்வத்தைத் தலையில் ஏத்தாம இருக்கேன். ஆனால் என் கண்கள்ல ஒரு ஸ்பார்க் இருக்கு. ஆக்ஷன் ஹீரோவுக்குத் தேவையான திமிர், ஆக்ரோஷம் என் கண்களிலேயே பொங்கி வழியறதா சொல்றாங்க. இதுதான் என் பெரிய ப்ளஸ்.

'நான் ரொம்பத் திமிரா நடந்துக்கறேன்னு' சில பத்திரிகைகள்ல எழுதறாங்க. ஒரு எஃப்.எம். ரேடியோவுல சரியா என்கிட்ட முறையா தேதி வாங்காம, கடைசியில நான் சொதப்பிட்டேன்னு சொல்றாங்க. என்னைக் குறை சொன்னா, நான் கலங்கவே மாட்டேன். ஏன்னா, நான் இந்தளவுக்கு 'ரீச்' ஆனதுக்குக் காரணம் மீடியாதான். அவங்க என்னைத் தட்டாம வேறு யார் தட்டுவா?

சக ஹீரோ தோற்கணுமா?


'ஹீரோ நடிக்கிற படம் தோக்கணும் சாமி'ன்னு வேண்டுறவங்க எல்லாம் பெரிய முட்டாள்தனத்தைப் பண்றாங்க. நாம எதிரியா நினைக்கிற ஹீரோ தோத்தா, அங்கே அவர் மட்டும் தோக்கிறதில்லை. அந்தப் படத்துக்காக உழைச்ச அத்தனை பேரும் தோக்கறாங்க. எனக்கு எல்லா ஹீரோக்களும் நண்பர்கள்தான். நானே வலியப்போய் பேசி நட்பாயிடுவேன்.

- **சநகன்**



Gurunathar Charanam
PRASHANTI
HOUSE OF SILK COTTONS
புஷ்பை : பூஜயாமி
பாரிஜாதம், தாமரை, சம்பங்கி, கனகாம்பரம்,
மரிக்கொழுந்து, நீலோத்பலம், வாடாமல்லி........
பிரசாந்தியில் மலர்ந்த புதிய வண்ணமலர்
படைப்புக்களுடன்
இந்த விழாக் காலத்தைக் கொண்டாடுங்கள் !!!
இயற்கையோடு ஒன்றிய சில்க் காட்டன் ... அது
பிரசாந்தியின் இணையற்ற சில்க் காட்டன் !!!
சில்க் காட்டன் என்றாலே பிரசாந்தி !!!
FESTIVE SALE !!!
@
BANGALAORE
30th Sep., 1st, 2nd & 3rd Oct. 2005
No.42, 8th Main, 13th Cross
Malleswaram, Bangalore - 560 055
Mob. : 98861 85951
10 a.m. to 8 p.m.
COIMBATORE
14th, 15th & 16th Oct. 2005
Coonoor Hall, 1st Floor, Nilgiris Nest
739A, Avinashi Road, Coimbatore
Ph : 2211 787 / 797 / 656
10 a.m. to 8 p.m.
PRASHANTI
No.16, 6th Cross Street
C.I.T. Colony
(Behind Chettiar Hall)
Mylapore, Chennai - 600 004
Tel. : 2499 1850 / 7636
10 a.m. to 7 p.m.
Sundays Working Till Deepavali
PRASHANTI'S PARIPURNA
No.52, 4th Main, 17th Cross
Malleswaram
Bangalore - 560 055
Tel. : 2334 1632 Mob. : 98861 85951
10 a.m. to 7 p.m.
ALL MASTER, VISA CARDS ACCEPTED

புக் பேங்க்









சொன்னால் நம்ப மாட்டீர்கள் -
சின்ன அண்ணாமலை

ராஜாஜியால், மகாத்மா காந்தியிடம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட இளைஞர் தான், சின்ன அண்ணாமலை. காரைக்குடிக் காரர். சுதந்திரப் போராட்டம், பத்திரிகைத் துறை, இலக்கியம், கலை, சினிமா என்று பல் துறையிலும் ஏற்பட்ட அனுபவங்களை, இந்தப் புத்தகம் சுவைபடச் சொல்லுகிறது. வீர பாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் ஆகிய இரண்டு படங்களும் எடுக்கப் பட்டதற்குச் சின்ன அண்ணாமலைதான் மூலகாரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை 600017, விலை ரூ.60/-

இன்று ஒரு தகவல் -
இளசை. சுந்தரம்

தற்போதைய மதுரை வானொலி நிலைய இயக்குனர் இளசை சுந்தரம், வழங்கிய 'இன்று ஒரு தகவல்'களின் தொகுப்பு இந்த நூல். ஒரு குட்டிக்கதை, அதிலிருந்து ஒரு பாடம், கடைசியில் ஒரு 'நச்' வரி அல்லது கேள்வி என்கிற ஃபார் முலாவை வைத்துக் கொண்டு, வெற்றி கரமாய் வலம் வருகிறார் இளசை.

புகழ் பதிப்பகம், வானொலி குடியிருப்பு, சொக்கிக்குளம், மதுரை - 2. விலை ரூ.50/-

நவக்கிரகத் திருத்தலங்கள்-
ப.முத்துக்குமார சுவாமி

நவகிரகங்களுக்குரிய முக்கியத்துவத்தையும், அவற்றுக்குரிய ஸ்தலங்களின் பெருமைகளையும் விரிவாக இந்தப் புத்தகத்தில் எடுத்துரைத்திருக்கிறார் ப. முத்துக்குமாரசுவாமி. தனுசுவின் நவக்கிரக ஸ்தல சித்திரங்கள் புத்தகத்தின் மதிப்பைக் கூட்டுகின்றன.

பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014, விலை ரூ.90/-

ஆளுமை வளர்ச்சி -
சுவாமி புருஷோத்தமானந்தர்

வாழ்வில் சிலரே உண்மையான வெற்றி பெறுகிறார்கள். பலர் ஓரளவுக்கு வெற்றி பெறுகிறார்கள். இன்னும் பலர் தோல்வியைத் தழுவுகிறார்கள். தமிழ் மொழி பெயர்ப்பு: சுவாமி அவபோதானந்தர். உடல், பலம், புத்தி பலம், நல்லொழுக்க பலம், ஆன்மிக பலம். இவை நான்கும்தான் ஆளுமை வளர்ச்சியின் அஸ்திவாரம் என்று அடிக்கோடிட்டுச் சொல்கிறார் ஆசிரியர். இளைஞர்களுக்குப் பயன் தரும் நூல்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மைலாப்பூர், சென்னை - 600 004, விலை ரூ.18/-

- மௌலி

திக்... திக்... நிமிடங்கள்!

உடல் நடுங்கியது. பற்கள் கடகட வென்று தந்தியடித்தன. பயத்தில் காய்ச்சலே வந்துவிடுமோ என்ற நிலை. காதல் காட்சிகளில் கமல்சார் பேசி நடிப்பது போல, கதாநாயகியை மடியில் படுக்க வைத்துக் கொண்டு, முத்தம் கொடுத்தபடியே டயலாக் பேச வேண் டும். பல படங்களில் நடித்த அனுபவம் இருந்ததால், சிம்ரன் எனது மடியில் இயல்பாகப் படுத்துக் கொண்டார். எனக்கோ உதறிய உதறலில் டயலாக் முழுவதும் மறந்துபோக, "டேய்! முத்தம் கொடுக்கிறதா இருந்தா முன்னாடியே கொடுத்து முடிச்சுட்டு, டயலாக்கை மறக் காமல் பேசு'' என்று டைரக்டர் கமெண்ட் அடித்தார். இதைக் கேட்டு மொத்தப் படக்குழுவும் கொல்லென்று சிரித்தது.

"அய்யய்யோ சார்! எனக்கு இங்கே குலையே நடுங்குது... என்ன விட்டுடுங்க... ப்ளீஸ்" என்று கெஞ்சினேன். "பாதிப் படம் முடிஞ்சுபோச்சு! இனிமே வாய்ப்பில்லே தம்பி" என்று இயக்குனர் வசந்த் சார் கூலாகச் சொல்ல... கடல் நடுவே மாட்டிக் கொண்ட அந்தமான் சிறைக் கைதியைப் போல அவஸ்தை யில் நெளிந்தேன்.

வெறும் பட்டன், நூல், மெஷின், வாஷிங் யூனிட் என்று ஓர் எக்ஸ்போர்ட்டராக சுறுசுறுப்புடன் சுற்றிக் கொண்டிருந்தவனை திடீரென்று கூப்பிட்டு, மேக்-அப் போட்டு, லைட் முன்பு உட்கார வைத்து, ஒரு பெண்ணைக் கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து நடி என்றால் எப்படி நடிப்பது?!...

அப்போது நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந் தேன். இயக்குனர் ஆர்.வி. உதயகுமார் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர். பழக்க வழக்கங்கள், பேச்சு, சிந்தனை எல்லாமே அப்பாவைப் போல இருக்கும். அப்பாவுக்கும் அவருக்கும் ஒரே ராசி வேறு. எங்கள் குடும்பத்தில் ஓர் உறுப்பினர் போலப் பழகி வரும் அவர், அந்நேரத்தில் வெற்றியின் உச்சத்தில் இருந்தார்.

''நீ தொழிலதிபர் ஆகவேண்டும் என்றால் நிறைய முதலீடு வேண்டும். ஆனால் சினிமாவில் உனக்குச் செலவே கிடையாது. வெறுங்கையோடு வந்து, வெற்றியோடு திரும்பிப் போகலாம். நான் உன்னை அறிமுகப்படுத்துறேன்" என்றார்.

'சினிமா மீது சுத்தமாய் எனக்கு ஈர்ப்பு இல்லை. எனக்கு சினிமா தெரியாது. தொழில்நுட்பம் தெரியாது. நடிப்பு தெரி யாது. என்னை விட்டு விடுங்கள்' என்று மறுத்து விட்டேன்.

"இவ்வளவுதானே உனது மனக்குறை?" என்று சொல்லி, அன்றுமுதல் அவர் எடுக்கும் படங்களின் காட்சிகள், பாடல்கள் இவற்றையெல்லாம் எனக்கு வீட்டிலேயே போட்டுக் காட்டி, தொழில் நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்தார். அவரை ஒரு சினிமாக்காரராகவே என்னால் பார்க்க முடியவில்லை. அப்பாவை வைத்து 'உறுதிமொழி' என்றொரு படம் எடுத்தார். ஆங்கிலப் படங்களைப் போல அத்தனை தரமான படம் அது. அந்தப் படம் முடிந்து அதன் பிரம்மாண்ட காட்சி அமைப்புகளைப் பார்த்தும் கூட எனக்கு ஈர்ப்பு வர வில்லை.

ஒரே காரணம், என் முகத்தின் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை. நம்மைவிட அழகானவர்கள் நிறையப் பேர்



யார் இந்த சூர்யா?
பர்சனல் டைரி
20

இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு இடத்தைப் பிடிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்களே என்ற பயம்.

தேக்கடியில் நடந்த 'உறுதிமொழி' படப்பிடிப்புக்கு அப்பாவைப் பார்க்க தம்பியுடன் போயிருந்தேன். அங்கே என்னைப் பார்த்த அந்தப் படத்தின் கேமராமேன் ரவியாதவ், "நான் ஒரு இளமையான படமெடுக்கிறேன். அதற்கு உங்கள் மகனை ஹீரோவாகத் தருகிறீர்களா?" என்று அப்பாவிடம் கேட்டிருக்கிறார். படிக்கிற பையனை கெடுக்கக் கூடாது என்று அப்பா மறுத்த அந்தப் படம் 'செம்பருத்தி'. அதன்பிறகு கல்லூரி முடித்து கார்மெண்ட் தொழிலில் முழு ஈடுபாட்டோடு ஓடிக் கொண்டிருந்த நான், அங்கே உழைப்பதற்கு ஒரு போதும் தயங்கியதே இல்லை. இன்னார் மகன் என்பதற்காக முதுகெலும்பு தேயாமல் வேலை செய்ய வேண்டும் என்று நினைக்கவும் இல்லை. எழுபத்தைந்து, எண்பது 'பீஸ்'களை பைக்கின் பெட்ரோல் டேங்க் மீது தூக்கிப் போட்டுக் கொண்டு, அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து, சேளம்பாக்கம் போய் ஆர்டர் கொடுப்பேன். அங்கே வேலை முடிந்ததும் ஆடைகளை அப்படியே அள்ளிப் போட்டுக் கொண்டு, அவற்றின் மீது பிரிண்ட் செய்ய சோழிங்க நல்லூருக்குப் பறப்பேன். அலுக்கவே அலுக்காத அந்தத் தொழ்ல ரொம்பவே பிடித்துப் போனது.

கார்மெண்ட் தொழிலில் இறங்கி, அதில் கரை கண்ட பிறகுதான், தெருவுக்குத் தெரு எக்ஸ்போர்ட்டுகள் இருப்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஐந்து தையல் மெஷின்களில் ஆரம்பித்து, ஐயாயிரம் மெஷின்கள் வைத்துச் செய்கிற மெகா ஏற்றுமதியாளர்கள் வரை, எவ்வளவு பெரிய திமிங்கலங்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்! உலகளவில் இது எத்தனை பெரிய மார்க்கெட்! இத்தனை கடுமையான போட்டிக்கு நடுவில் ஒரு சிற்றெறும்பைப் போல நான் என்ன செய்யப் போகிறேன் என்று மலைத்து நின்ற போதுதான், வசந்த் சாரின் போன் கால்!

"நடிப்புல விருப்பம் இருக்கா சரவணா?"



மறுநாள் காலை நான் ஃபேக்டரிக்குக் கிளம்பும் நேரத்தை என்னிடம் கேட்டுக் கொண்டு, காலை ஏழு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிட்டார். 'கேளடி கண்மணி', 'ஆசை' உட்பட அவரது படங்களை ரசித்திருக்கிறேன். அவர் முன்னால் எனக்கு உட்காரத் தோன்றவில்லை. சோபாவுக்குப் பின்னால் நின்று கொண்டேன்.

நான் எப்படிப் பேசுகிறேன், எனது உடல் மொழி எப்படிப்பட்டது என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்காக, "உனக்கு என்ன பிடிக்கும்... விளையாட்டு எதிலும் ஈடுபாடு உண்டா?" என்று பேச்சுக் கொடுத்தவர், கிளம்பும்முன், "நான் இரண்டு படங்கள் இயக்குகிறேன். ஒன்றில் நீ நடிக்க வேண்டும்... நடிப்பில் விருப்பம் இருக்கிறதா?" என்று பளிச்சென்று கேட்டுவிட்டார்.

உடனே அதற்கு பதில் சொல்ல முடியாமல் 'ஒரு வாரம் டைம் கொடுங்கள்' என்று அவகாசம் வாங்கிக் கொண்டு ஃபேக்டரிக்கு விரைந்தேன்.

வழியிலேயே 'அற்புதமான இயக்கு

னர், தரமான தயாரிப்பு நிறுவனம், சரவணா, யோசிக்காமல் சினிமாவில் குதி' என்று உள்ளுக்குள் ஒரு குரல் ஒலித்தது.


சரி, நடிக்கலாம் என சட்டென்று தீர்மானம் எடுத்துக் கொண்டேன். உற்சாகத்தோடு ஃபேக்டரிக்கு உள்ளே நுழைந்தேன். எதிரே வந்த ஆண்கள், பெண்கள் எல்லோரிடமும் ''நான் நடிக்கப்போகிறேன். வசந்த் சார் படத்தில் ஹீரோ'' என்று சொல்லிக் கொண்டே வந்தபோது, எல்லோரும் நக்கலாகச் சிரித்தார்கள். ''திடீர்னு உன் மண்டைக் குள்ளே என்ன புகுந்துச்சு? நீயெல்லாம் ஹீரோவானா, அப்புறம் யாரு படம் பார்க்கிறது?'' என்று முகத்துக்கு நேராகவே சொன்னார்கள். சுளீர் என்று சாட்டையால் அடித்தமாதிரி வலித்தது. அந்த வார்த்தைகளே என்னைச் சீண்டி விட்டன. 'ஏன், நான் நடிக்க கூடாதா நடிச்சுக் காட்டுறேன்' என்று மனசுக்குள்ளேயே சொல்லிக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

வீட்டில் எனது முடிவைக் கேட்டு அம்மாவும் அப்பாவும் அமைதியாக இருந்தார்கள். எந்த ஆரவாரமும் இல்லை. அப்பா முன்பு நிறையச் சொல்லியும் மறுத்து விட்ட நான், இப்போது திடீரென்று நடிக்கிறேன் என்றதும் நம்பவில்லை. எல்லோருமே சந்தேகமாகப் பார்த்தார்கள்.

உடம்பைவிட சினிமாவில் மனசுக்குத்தான் நிறைய அடிவிழும். அதை நான் தாங்க மாட்டேன் என்று நினைத்தார்கள். கோவையில் இருந்த உறவினர்களே ''நல்லாத்தானே தொழில் கத்துக்கிட்டு இருந்தார். யாரு அவரைக் கெடுத்தது?'' என்று துக்கம் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்காகவெல்லாம் நமது முடிவை மாற்றிக்கொண்டு விடக் கூடாது என்ற உறுதியோடு, வசந்த் சாருக்கு ஓ.கே சொன்னேன். அதற்கு முன்பு எனது முடிவு சரிதானா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, எனது நண்பர்களிடம் ஒரு கருத்துக் கணிப்பு!

சினிமாவைப் பற்றி என்னிடம் அதிகம் பேசும் எனது நண்பர்களில் ஒருவன் ராம்குமார். அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த அவனிடம் முடிவைச் சொன்னபோது, ''நடிடா மச்சி, பார்த்துக்கலாம்'' என்று உற்சாகப் படுத்தினான். ராஜா ''உனக்கு இது பிராப்பர் சான்ஸ்டா, மிஸ் பண்ணிடாதே'' என்றான். என்னதான் புகழ் பெற்ற நடிகருடைய பையன் என்றாலும், போட்டோ எடுத்து ஸ்கிரீன் டெஸ்ட் செய்தால் தானே, இந்த முகம் தேறுமா

''ஒரு வாரம் டைம் கொடுங்க சார்!''



தேறாதா என்று தெரிய வரும். ''நாளை போட்டோ ஷூட். மணிரத்னம் சார் ஆபீஸுக்கு வந்து விடுங்கள்'' என்றார். இதயம் தடக் தடக் என்று எக்ஸ்ட்ரா வேகத்தோடு துடிக்க, படு அமைதியாக இருந்த மெட்ராஸ் டாக்கீஸ் அலுவலகத்துக்குள் நுழைந்தேன்.

கே.வி.ஆனந்த்தான் படங்களை எடுத்தார். எனக்கு லெதர் ஜாக்கெட் கொடுத்து அணியச் சொல்லி, கையில் சிகரெட் கொடுத்தார். வேகமாய் நடந்துவரச் சொல்லி வீடியோ எடுத்தார்கள். ஸ்கிரீன் டெஸ்டில் எனக்கு வெற்றியா தோல்வியா? ரிசல்டுக்காகக் காத்திருந்த அந்த நிமிடங்கள் ஒவ்வொன்றும் திக்... திக்...

(டைரியைத் தொடர்வேன்)

நீங்கள் கேட்டவை - கிராக

● டி.லட்சுமணன், கொணவட்டம்

? எம்.ஜி.ஆர். ஸ்டில் மற்றும் அவரின் துணைவியார் வழங்கிய பிரசார வேன் சென்டிமெண்ட்டெல்லாம் விஜயகாந்துக்கு எந்த வகையில் கைகொடுக்கும்?

! எம்.ஜி.ஆரின் அன்பைப் பெற்றவர் என்று வாக்காளர் கருதினால் கைகொடுக்கும்; எம்.ஜி.ஆர். இமேஜைப் பயன்படுத்தி அரசியல் லாபம் அடையப் பார்க்கிறார் என்று கருதினால், காலை வாரி விட்டதாகி விடும்.

● டி.முருகேசன், திருவாரூர்

? 'காமராஜர்' படத்தில் நடித்த ரிச்சர்ட் மதுரம் காலமாகிவிட்டாரே?

! மிகச் சிறந்த நடிப்பு அவருடையது. அவருக்கும் படத்துக்கும் உரிய மரியாதையை அளிக்கத் தமிழ் சினிமா தவறிவிட்டது. தவறைச் சரிசெய்ய ஒரு வாய்ப்பு. விரைவில் 'காமராஜர்' ஆங்கிலத்தில் வரவுள்ளது.

● கே.வி.ராமன், சென்னை - 73

? சுனாமி நிவாரண நிதிக்கு வழங்கிய சில லட்சம் ரூபாய் காசோலைகள், வங்கிக் கணக்குகளில் பணமில்லாமல் திரும்பி வந்து விட்டதாமே...?

! முதல்வரை எந்த வகையிலாவது திருப்திப்படுத்த நினைத்துச் செய்யும் இது போன்ற காரியங்கள், எதிர்மறையான விளைவுகளையே உண்டாக்கும். அவரிடம் லிஸ்ட் போயிருக்கும். வருமான வரி விலக்குடன் அரசு இவர்களுக்கு ரசீது வழங்கியிருக்காது என்று நம்புவோம்.

● சு.கணேசன், மறைமலை நகர்

? அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் நடந்த பேச்சு வார்த்தையில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பற்றி பிரதமர் மன்மோகன் சிங் விமர்சனம் செய்துள்ளது பற்றி...?

! தேவையின்றி சில விஷயங்கள் பற்றிப்பேசி சர்ச்சைக்குள்ளாவது மன்மோகன்சிங்குக்கு வழக்கமாகி வருகிறது. வளரவிட்டால் ஆபத்து. அத்வானியின் ஜின்னா கதைபோல் அவஸ்தைப் படுத்தும்.

● ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி

? மும்பையில் கடை அடைப்புப் போராட்டம் நடத்தியதற்காக பா.ஜ.க.வும், சிவசேனாவும் தலா இருபது லட்ச ரூபாயை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதே... ஜனநாயக நாட்டில் எதிர்ப்பைத் தெரிவிப்பது தவறா?

! உச்சநீதிமன்றத் தீர்ப்பும் சாதகமாக இல்லாததால், சிவசேனா அபராதத்தை ஒரே தவணையில் செலுத்தி விட்டது. எதிர்ப்பைத் தெரிவிப்பது

* தோல்வியைச் சந்தித்து...



ஜனநாயகத்தில் ஓர் உரிமை. எப்படித் தெரிவிப்பது என்பதை நிர்ணயிப்பது அரசின், நீதிமன்றத்தின் கடமை.

● ஆர்.நாகராஜன், சென்னை - 117 ★

? அண்ணா பிறந்த நாள் விழாவை நாடு முழுவதும் கொண்டாட வேண்டுமென்று கூறும் வாஜ்பாய், பி.ஜே.பி. சார்பாக ஏன் அண்ணா பிறந்த நாளைக் கடைப் பிடிப்பதில்லை?

! அண்ணா பிறந்த நாள் விழா என்பதற்கும், அண்ணா நூற்றாண்டு விழா என்பதற்கும் வித்தியாசம் உண்டு. நிற்க, தமிழ் நாட்டிலே மாநாடு நடத்தி, இங்கே பலமாகக் காலூன்ற நினைக்கும் போது, அதற்கு அண்ணாவை உதவிக்கு அழைப்பதில் ஆச்சர்யமில்லை. அண்ணா பெயரை மட்டும் சொல்லி, அவர் கொள்கைகள் பலவற்றைக் கைவிட்ட கட்சிகள் போல பி.ஜே.பி. நடந்து கொள்ளாமல் இருந்தால், அப்போது நிஜமாகவே ஆச்சர்யப் படலாம்.

● மஞ்சு வாசு தேவன், மும்பை

? ஆஸ்திரேலிய இரிக்கெட் டீம் தோல்வியைச் சந்தித்துள்ளதே?

! ‘ஆஷெஸ்’ இங்கிலாந்திடம் போன உடனேயே, ‘ரிக்கி பாண்டிங்கை நீக்கு. ஷேன் வார்னேயை அவரிடத்தில் கேட்ட

* ரிஸ்க் எடுத்து...





* ...எடுக்காமல்!



* சர்ச்சைக்கு உள்ளாகி...

சன் டி.வி. புறக்கணிப்பை கவனிச்சீங்களா?

* வெளிப்படையாகத் தெரிவித்து...



* சொல்லாத கருத்து!





* இன்னொரு வாய்ப்பு...



* உதவிக்கு அழைத்து...

னாக்கு' என்று ஆஸ்திரேலியாவில் எழுந்த கூக்குரல், 'நம்மைப் போல்தான் அங்கேயும் இருக்காங்க' என்ற ஆறுதலை ஏற்படுத்தியது.

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் இறுதி ஊர்வலம், நடிகர் - நடிகைகளின் நெய்வேலி மின்சாரத் தடை போராட்டம், ரஜினிகாந்தின் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் போன்றவற்றை நேரடி ஒளிபரப்புச் செய்த சன் டி.வி., விஜயகாந்தின் மதுரை அரசியல் மாநாட்டை நேரடி ஒளிபரப்பு செய்யாததை கவனித்தீர்களா?

! அரசியல்னா அப்படித்தாங்க! கலைஞருடன் கூட்டணிக்குத் தயார்' என்று கேப்டன் அறிவிக்கட்டும்... நிலைமை சன் டி.வி.யில் தலைகீழாக மாறிடும் பாருங்க.

● அ.அப்துல் காதர், தூத்துக்குடி ❒

? அரசியல், சினிமா இவ்விரண்டையும் தவிர்த்து தமிழகத்தில் இனி வாழ முடியுமா?

! சினிமாவை விட்டுத் தள்ளுங்கள். அரசியலை ஏன் தவிர்க்கிறீர்கள்? அது உங்கள் வாழ்வின் ஓர் அங்கமல்லவா? அரசியல் நிகழ்வுகள் பற்றி அறியாமையோடு இருப்பது, உங்களுக்கு நீங்களே குண்டு வைத்துக் கொள்வதற்குச் சமம்.

● ரொசாரியோ ரவிச்சந்திரன், சென்னை - 59

? எந்த ஜனாதிபதியிடமும் இல்லாத அளவுக்கு, மக்கள் தற்போதைய ஜனாதிபதி அப்துல் கலாம் மீது அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்களே... ஏன்?

! மக்கள் மீதும், அவர்கள் நலன்மீதும் அவர் அன்பும் பாசமும் கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிவதால்தான்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஒழிக்க, இந்தியாவில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து போராட வேண்டும்' என்று பிரவீண் தொகாடியா கூறியிருக்கிறாரே?

! தீவிரவாதத்தை எங்கிருந்தாலும் ஒழிக்க இந்திய மக்கள் ஒன்றுபட வேண்டுமென்று தொகாடியா சொல்லவே மாட்டார். இந்த யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளாது.

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்

? விஜயகாந்தின் துணிச்சலான அரசியல் பிரவேசம். ரஜினிகாந்தின் தயக்கம் - எவரது முடிவில் உங்களுக்கு உடன்பாடு அதிகம்?

! சூப்பர் ஸ்டாரின் முடிவு, தமது எல்லைகளைப் புரிந்துகொண்ட, ரிஸ்க் எடுக்காத சூப்பரான முடிவு. கேப்டனின் முடிவு, அந்தப் பெயருக்கேற்ப நடந்து கொண்டு, ரிஸ்க் எடுத்து, நியாயத்துக்குப் போராடி, வெற்றி பெற நினைக்கும் முடிவு.

● பூ.சீனுவாசன், வடபழனி

? 11.9.05 இதழின் தராசு பதிலில் ஒரு கேள்விக்கு, 'இந்திய கிரிக்கெட் உத்தரன் விருது பெறத்தான் லாயக்கு என்றாகி வருகிறது' என்று பதில் கூறியுள்ளீர்கள். உத்தரன் விருது என்றால் என்ன? அதன் பின்னணி குறித்து விளக்கவும்.

! பாரதம் படியுங்க. ஈஸியாகப் படிக்க ராஜாஜியின் மகாபாரதம் படிக்கலாம். வானதி பதிப்பகம், சென்னை - 17

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :

அ. அப்துல் காதர், 37பி, சாலையம் தெரு, விளாத்திகுளம் (அஞ்சல்), தூத்துக்குடி (மாவட்டம்) - 628907

---

* ரூ.50 பரிசு பெறுபவர் :


ஆர். நாகராஜன்,
பிளாட் நம்பர் 111, சுபம் நகர்,
3வது பேஸ், பழைய பல்லாவரம்,
சென்னை - 117

ஹர ஹர கங்கே! ஜெய ஜெய கங்கே!!



அன்னம் கொடுக்கும் ஸ்ரீ அன்னபூரணி ஷேத்ரமான

காசியில் தீபாவளி அமாவாசை அன்று



(1-11-2005) கங்கையில் தீபம் ஏற்றி அன்னதானம் செய்ய அழைக்கிறோம்!

"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" 7 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடத்தும் அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு "ஸ்ரீ அன்னபூரணி அன்னை" தீபாவளி திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம். கங்கைக்கு நிகரான நீருமில்லை. காசிக்கு நிகரான ஊருமில்லை என்பது இந்துக்களின் திருமந்திரம். பிரபஞ்சம் முழுமைக்கும் உணவு படைக்கும் தெய்வமாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலு வீற்றிருக்கும் புண்ணிய ஸ்தலமான காசியில் தீபாவளி அமாவாசை அன்று கங்கா மாதாவுக்கு மலர் மாலை அணிவித்து கங்கையில் தீபம் ஏற்றி அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் அனைவராலும் காசியில் கங்கைக்கு தீபம் ஏற்றி அன்னதானம் அளிக்க முடியும் என்ற இறை சிந்தனையோடு ஆன்மீகம் தெய்வீக மாத இதழ் சார்பாக நடத்தப்படும் ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் மூலம் காசியில் தீபாவளி அமாவாசை அன்று ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். தீபாவளி அமாவாசை அன்று அன்னாபிஷேகம், லட்டுத்தேர், அன்னகூடு போன்றவை காசியில் மிக விசேஷமாக நடத்தப்படுகிறது. ஸ்ரீ அன்னபூரணி அருளால் வாழ்நாள் முழுவதும் உணவு தட்டுப்பாடு இன்றி ஆரோக்கியமாக வாழ அனைவரையும் தீபாவளி திருநாளில் ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் மூலம் அன்னதானம் செய்ய அழைக்கிறோம்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் மூன்று மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஐந்து வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் (இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும்) நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரங்களைக் கொண்டு தீபாவளி அமாவாசை அன்று "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.


பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000 அனுப்பும்போது யாருக்கு சிரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத் திற்காக ரூ. 5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை ஐந்து ஆண்டுகளுக்கு தீபாவளி அமாவாசை அன்று மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு சிரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு சிரார்த்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான "அக்ஷய வடத்தின்" படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் பத்திரமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிரார்த்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூடவே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர் தங்களுடைய வேண்டுதலையும், பிரார்த்தனையையும் தெரிவித்தால் அதற்கேற்ப தீபாவளி அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு காசி ஸ்ரீ அன்னபூரணி திருக்கோவிலில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அன்னபூரணி யந்திரமும், கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும், ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட வலம்புரி சங்கும், ஐந்து வருடங்களுக்கு தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழும் 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தையும் (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையாலும் சிறப்பு மிக்கது காசியம்பதி. காசியில் கங்கைக்கு பெருமை அதிகம். காசியில் மட்டும்தான் கங்கை வடக்கு நோக்கி செல்கிறது. வடக்கு நோக்கி பாயும் கங்கையில் விளக்கேற்றுவதால் அஷ்டலக்ஷ்மியும் நுனவரியங்களும் நம்வீட்டில் குடிகொள்ளும். பதினாறு வகை இறைவழிபாட்டில் மிகச் சிறப்பாக சொல்லப்படுவது தீப வழிபாடாகும். அன்னதானத்திற்கு ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.2,000/-, ரூ.5,000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தீபாவளி அமாவாசை அன்று கங்கையில் தீபம் ஏற்றப்படும்.

தீபாவளி அமாவாசை அன்று காசியில் நடைபெறும் அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபம் ஏற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D.D/M.O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி கங்கா மாதாவின் புண்ணியமும், ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் அருளையும் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.

Cheque/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

4, Appavoo Gramani IIIrd Street

(Opp. TelePhone Exchange) R.A.Puram, Chennai - 28

TEL : 2495 9302 Fax : 044 - 5206 6525. E-mail:sivasiva @ vsnl.net



காசியில் தீபாவளி அமாவாசை அன்று கங்கா மாதாவிற்கு தீபம் ஏற்றி நிறைந்த ஆயுளையும், குன்றாத ஆரோக்கியத்தையும் பெறுவோம்!



சுனந்தாஜி

ராஜன் பொறுப்பான வேலையில் இருப்பவர். திறமைசாலி. எட்டு மணிக்கு ஆபீசுக்குப் புறப்பட்டுச் சென்றால், வீடு திரும்புவதற்கு மாலை ஆறு மணியாகும். வழக்கம் போல அன்றைக்கு வீட்டுக்கு வந்தார் ராஜன். "என்னங்க! ஆபீஸ்ல ரொம்ப வேலையா? ரொம்ப களைப்பா இருக்கீங்க போலிருக்கு! இரண்டு நிமிஷம் இருங்க. சூடா காபி போட்டுத் தர்றேன்!'' என்று சொல்லிவிட்டு, கிச்சனுக்குள் சென்ற சீதா, சொன்னபடியே இரண்டு நிமிடங்களில், காபியுடன் வந்தாள்.

இலேசாய் தலைவலியுடன் இருந்த ராஜன் அந்த காபி உள்ளே இறங்கினதும் "ஃபர்ஸ்ட் கிளாஸ் காபி! காபின்னா, இப்படி இருக்கணும்" என்று சீதாவைப் பாராட்டிவிட்டு, ருசித்துக் குடித்தார். காபி உள்ளே இறங்கியதும், ராஜனுக்குத் தலைவலி மறைந்துபோய்விட்டது.

"தினமும், ஆபீஸ் விட்டு, வீட்டுக்கு வந்தவுடன் இப்படி ஒரு காபி குடிச்சா,

பிரச்சனைகளின்



வெற்றி உங்

நல்லா இருக்கும்!" என்று சொன்னார் ராஜன். மறுநாள் ஆபீசிலிருந்து வீட்டுக்குள் நுழைந்தபோதே 'இன்றைக்கும், நேற்று மாதிரி காபி சாப்பிடணும்' என்று நினைத்துக் கொண்டார். டெலிபோனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள் கீதா. டீவியை ஆன் செய்து, ரிமோட்டைக் கையில் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு சேனலாக தாவிக் கொண்டிருந்தார்.

8

டெலிபோன் உரையாடலை முடித்து விட்டு வாஷ்பேசினில், முகம் கழுவிக் கொண்டு, ராஜனின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள் கீதா. ராஜனுக்குக் கொஞ்சம் ஏமாற்றம். "நேத்து மாதிரி இன்றைக்கும் காபி வரும்னு எதிர்பார்த்தேன்!" என்றார்.

"காபி வேணும், அவ்வளவுதானே! போட்டுத் தரேன்." சமையலறைக்குப் போய், காபி போட்டு எடுத்துக் கொண்டு வந்தாள். "நேற்று மாதிரி காபி இல்லையே!" ராஜன் இப்படிச் சொல்ல நினைத்தார். ஆனால், 'எதற்கு வீண் பிரச்னை!' என்று குடித்து விட்டார். காபி சூப்பராக இல்லாது போனாலும், மோசமில்லையே!

அடுத்தநாள். வீட்டுக்குள் நுழைகிறபோதே ராஜனின் மனத்தில் கேள்விகள். கீதா இன்றைக்கு காபி தருவாளா? மாட்டாளா? அப்படியே கொடுத்தாலும் காபி நன்றாக இருக்குமா? சுமாராக இருக்குமா? ஏனோதானோவென்று இருந்து விடுமா?

ஆனால், வீட்டில் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. கீதாவுக்கு மூடு அவுட்! அவள் முகத்தைப் பார்த்தவுடனேயே ராஜனுக்குத் தெரிந்துவிட்டது. காபி, டீயை மூட்டை கட்டி வைத்து விட்டு, கீதா மூடு அவுட் ஆனது ஏன், அவளை நார்மலுக்குக் கொண்டு வருவது எப்படி என்று யோசனை செய்ய ஆரம்பித்துவிட்டார் ராஜன்.

இப்படி மனைவிதான் மூடு அவுட் ஆக வேண்டும் என்று இல்லை. ஆபீசில் ஏதோ பிரச்னையால் மூடு அப்செட் ஆன கணவர், வீடு திரும்பும்போதும் பிரச்னை

மூல காரணம் எது?



ஏற்படலாம். கணவர் வீடு திரும்பியதும், மனைவி ஏதோ ஆர்வமாகச் சொல்ல வர, கணவர் எரிந்து விழலாம். ஒருநாள் கேஷுவலாக பூவோ, ஸ்வீட்டோ வாங்கி வந்து தர, மறுநாளும் பூ வாங்கிக் கொண்டு வருவாரோ என்று மனைவி எதிர்பார்ப்பது சகஜம்தான்.

குழந்தைகள், பெற்றோர்களிடம் எதிர்பார்ப்பு வைப்பதும் சகஜம்.

ஆபீசில், ஒவ்வொருவரும் மற்றவர்கள் இன்ன செய்ய வேண்டும்; இப்படிச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமில்லையா? அதேபோல, மற்றவர்களுக்கும் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பு இருக்கக்கூடும்.

எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற வேண்டும் என்பதுதான் நம் ஒவ்வொருவருடைய மிகப் பெரிய எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பு இல்லாதவர்களைப் பார்ப்பது ரொம்ப அபூர்வம். வீட்டில் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை என்றால் கணவன், கிளப்புக்குப் போகிறான். அங்கே இவர் சந்திக்கிற நபர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள்? இவரைப் போலவே, வீட்டில் சந்தோஷம் இல்லை என்று அதனைக் கிளப்பில் எப்படியும் பெற்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்போடு வருகிறவர்கள்தான்.

"என் நிலைமை இப்படி", "என் நிலைமையும் அப்படித்தான்" என்று தங்கள் வருத்தங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அல்லது, "அவரது நிலைமையும் அப்படித்தானாமே" என்று வம்பு பேசி நேரத்தைப் போக்குவார்கள்.

இப்படி எல்லாரும் செய்வதற்கு என்ன காரணம்?

நாம் எல்லாருமே நமக்குள்ளே எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக் கொள்கிறோம். அது நிறைவேறினால் சந்தோஷப்படுகிறோம். நிறைவேறாமல் போய்விட்டாலோ, அப்செட்தான். "உலகில் உள்ள அனைவருக்கும், நமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடமை கட்டாயமாக இருப்பதாக நாம் மனதுக்குள் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு விடுகிறோம். அதுதான் பிரச்னைகள் அனைத்துக்கும் மூல காரணம்.

நமக்கு சந்தோஷம் வெளியிலிருந்துதான் கிடைக்கும் என்கிற எண்ணம் நம்முடைய மனங்களில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது.



"நான் சினிமாவுல டைரக்டராகற வாய்ப்பு உண்டா ஜோசியரே?"
"ஓ... ஒரு தடவை கைதாகற வாய்ப்பு கூட இருக்கு!"
– அம்பை தேவா

ஆரம்பத்தில் சொன்ன ராஜன் வீட்டு சம்பவங்களைத் தினம் தினம் எல்லாருமே ஏதோ ஒரு விதத்தில் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

மனைவி காபி கொடுத்தபோது ருசித்துச் சாப்பிட்ட ராஜன், மறு நாளும் அதேபோல காபி கிடைக்கும் என்று எதிர்பார்க்காமல், 'இன்னைக்கு மூடு அவுட் போலும்! அதனால் காபி முந்தைய நாள் போல இல்லை!" என்று புரிந்து கொண்டிருந்தால், ஏமாற்றத்தைத் தவிர்த்திருக்கலாமில்லையா?

நம் எதிர்பார்ப்புகளை, எண்ணங்களை நம்மால் கட்டுப்படுத்த முடிய

வில்லை என்கிற நிதர்சனமான சூழ்நிலையில், மற்றவர்களை, அவர்களது எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது எப்படி சாத்தியமாகும்? அப்படிக் கட்டுப்படுத்தி விட முடியும் என்று நினைத்தால், அது அபாரமான கற்பனை தானே! இதற்கும் ஒருபடி மேலே போய், மற்றவர்களை நம்மால் கட்டுப் படுத்த முடிய வில்லை அல்லது மற்ற வர்கள் நமக்குக் கட்டுப் படவில்லை என்று தெரிந்து கொள்ளும் போது நமக்கு வருத் தமும்; ஏமாற்றமும் இன்னும் அதிகரிக் கிறது.

''நேற்று கூட்டத்தில் கைத்தட்டல் வாங்கற அளவுக்கு அப்படியென்ன பேசினீங்க?''
''சுருக்கமாகப் பேசினேன்!''
- லீலாஜி



ஆன்மிக உலகில் அனைவருமே பச்சைக் குழந்தைகளைப் போல இருக்கிறார்கள். குழந்தைக் குத் தானாகவே ஏதாவது தெரியுமா? இல்லை சொல்லிக் கொடுத்து புரிய வைக்கத்தான் முடியுமா? மனிதர்களுக்கு வயது ஏற, ஏற உடல் ரீதியிலான வளர்ச்சி ஏற்படு கிறதேயொழிய அறிவு வளர்வதில்லை; மனம் பக்குவமடைவதில்லை. முதல் அத்தியாயத்தில் சொன்ன போலி சன்னி யாசியைப் போல, ஒரு சில நிமிடங்கள் பக்குவமான மனநிலையை நாம் பெற் றால்கூடப் போதும். அதன் பலனை முழு மையாக நாம் அனுபவிக்கலாம். அந்த மனநிலை, குடும்பத்திற்குள்ளேயும் சரி, வெளியிலேயும் சரி, பட்டும் படாமலும் சற்றே இடைவெளியுடன் கூடிய நெருக்கத்தை ஏற்படுத்தும். அதனால் அன்பு குறையாது; உறவுகள் தேயாது. மாறாக அன்பு பெருகும்; உறவுகள் பலப் படும்.

அந்த ஆன்மிக அறிவு, தெளிவு எளிதில் கிடைத்து விடாது. இன்றைக்கு மார்க்கெட்டில் ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என்று சொல்லி விற்கிறார்களே, அதுபோல இலவசமா கவும் கிடைத்துவிடாது.

பகவத்கீதை சொற்பொழிவுகளுக்கு ஆயிரக்கணக்காக மக்கள் வருகிறார் கள். அவர்கள் சொற்பொழிவு அரங்கத்திற்குள் நுழைய கட்டணம் எதுவும் வசூலிக்கப்படு வதில்லை. இலவச அனுமதிதான். ஆனால் உள்ளே அமர்ந்து சொற் பொழிவைக் கேட்கிற ஒவ்வொருவரும், ஒவ்வொரு நிமிடச் சொற்பொழிவுக் கும் கட்டணம் செலுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். அந்தக் கட்ட ணம் காசு, பணம் இல்லை. 'முயற்சி' என்பதுதான் நீங்கள் செலுத்தும் கட்டணம்.

நீங்கள் ஏகப்பட்ட திட்டங்களை, லட்சியங்களை வைத்துக்கொண்டு, கோவில் கோவிலாக ஏறி இறங்கி னாலும் ஒரு பலனும் இருக்காது. தினமும் நூற்றியெட்டுத் தேங்காய்கள் உடைத்தாலும் பலன் கிடைக்காது. விழா நடத்தினாலும், விரதமிருந் தாலும்கூட எந்தவித அற்புதமும் நிகழ்ந்துவிடாது.

ஒரு படகில் ஏற்றி உங்களை அழைத்துச் செல்கிறேன். அப்போது இந்த விஷயம் உங்களுக்கு இன்னும் நன்றாகப் புரியும்.

(வெற்றி தொடரும்)

கடல்: கடலைப் பற்றி தெரிந்து கொள்ள கடலைவிட அதிகமான தகவல்கள் இருக்கின்றன. ஆர்டிக், அட்லாண்டிக், பசிபிக், அரபிக், இந்தியப் பெருங்கடல் களைப் பற்றிய தகவல்கள் அலை அலையாகக் கிடைக்கும் தளம் ocean.com. கடல் பற்றி வெளிவந்திருக்கும் புதிய புத்தகங்கள், கடல் பயணக்காரர்களின் சாகச அனுபவங்கள், சிலிர்க்க வைக்கும் (கடல் மேல்/கீழ்) புகைப்படங்கள், டாகுமெண்டரி படங்கள் என விதவிதமாய்க் கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. கடல் & புயல் சம்பந்தப்பட்ட செய்திகள் அப்டேட் ஆகிக் கொண்டே இருக் கின்றன. கடலும், கடல் சார்ந்த சுற்றுலாத் தளங்களும் 'என்னைப் பார்', என் அழகைப் பார்' என தகவல்களோடு, புகைப்படங்களோடு நம்மைச் சுண்டி இழுக் கின்றன. ஹே... யாருப்பா அது சீரியசா பேசிக்கிட்டிருக்கறப்ப 'தேங்கா மாங்கா பட்டாணி சுண்டல் கிடைக்குமா'ன்னு கேக்கறது?

டௌன்லோட்: நேத்து உங்க ஆளோட பர்த்-டே. ஆனா மறந்து போயிருப் பீங்க. அவ தன்னோட பார்வையால சுட்டெரிச்சதுக்கப்புறம் சரணை வந்து, 'ஸாரி செல்லம்! ப்ளீஸ் மன்னிச் சுக்கோ'ன்னு கெஞ்சிக்கிட்டு இருப்பீங்க! இந்த நிலைமை தேவையா? மறந்தும்கூட மறதியை மட்டும் மறக்காத ஆள் நாம! அத னால இப்ப எல்லாத்துக்கும் ரிமைண்டர் வந்துட்டுது! நாளைக்குக் காலைல பல் தேய்க் கணும், இன்னிக்கு நைட்டு 10 மணிக்குத் தூங்கணும், நாளை செல்லத்துக்குப் பிடிச்ச மஞ்ச சொக்காயைப் போட்டுக் கிட்டுப் போகணும். இப்படி எல்லாத் தையும் ஞாபகமா நோட் பண்ணி வைச்சுருங்க. இது ஞாபகப்படுத்தி விட்டுரும். எது? www.024.com -ல கிடைக்குற லக்கி ரிமைண்டர் அப்ளிகேஷன்தான்!



வலைபாயுதே



தமிழ்: சில மாதங்களுக்கு முன்பு டிஸ்னி லேண்டுக்கு என் மாணவர்கள் என்னை அழைத் துப்போனார்கள். அங்கே ரோலர் கோஸ்டரில் பயணம் செய்த அனுபவம் பரவசமாக இருந்தது. ரோலர்கோஸ்டர் ஒரு குலுக் கலுடன் புறப்பட்டு, நாங்கள் உட் கார்ந்திருந்த இருக்கை சர்ர் ரென்று வானத்தில் ஏறியது. சரசரவென்று திருப்பங்களில் வளைந்து ஓடி, தடாலென்று சறுக்கிக் கொண்டு அதலபாதாளத்தில் கீழே சரிந்தது. எதிர்பாராத திடீர்த் திருப்பங்கள், தலைகீழ் மாற்றங்கள் இவை எல்லாமே சந்தோஷம் கொடுக்க வல்லவைதானே? பிறகு ஏன் வாழ்க்கையில் எதிர்பாராதது நடந்தால் ரோலர்கோஸ்டர் போல சிலிர்த்து மகிழாமல் நொறுங்கிப் போகிறோம்? - சுவாமி சுகபோதானந்தா nila.brinkster.net.

- **வலைஞன்**

"சொன்னதைச் செய்யப்பா!"



"ஒரு வேலையை ஒன்பது பேர், ஏழு நாளில் செய்து முடித்தால், அதே வேலையை ஐந்து பேர் எவ்வளவு நாளில் செய்து முடிப்பார்கள்?" - ஹாலில் தன் மகனுக்குக் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் புரொஃபஸர் ராமன்.

எதிரில் நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தான், சிமெண்ட் பூச்சு வேலை செய்யும் முருகன்.

"இதோ பாருங்க... முருகன் வந்திருக்கான்" மனைவி சுமதியின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தார்.

"வாப்பா... முருகா! கொஞ்சம் வேலை இருக்கு... செய்வியா?" என்றபடி அவனை வாசலுக்கு அழைத்து

வந்தார்.

"சொல்லுங்க ஐயா"

"புதுசா வீடு கட்டி, குடி வந்து ஒரு மாசம் ஆகல. அதுக்குள்ள யாரோ வாசல்ல இருக்கிற சம்ப்பு மூடிய திருடிட்டுப் போயிட்டான். வேற மூடி வாங்கி வெச்சிருக்கேன். நீ என்ன பண்ற... அந்தப் புது இரும்பு மூடியால சம்ப்பை மூடி, எல்லாப் பக்கமும் சில் வெச்ச மாதிரி சிமெண்டால பூசிடு... புரியுதா..?" என்றார் ராமன்.



"சார்... ஆபீசுல இன்னிக்கு ஓவர் டைம் வேணும்!"

"எதுக்கு, பெண்டிங் வேலை ஏதுமிருக்கா?"

"ஒரு பார்ட்டி லஞ்சம் தர கொஞ்சம் லேட்டா வர்றதா சொல்லியிருக்கார்!"

- அம்பை தேவா

முருகன் தயங்கி நின்றான்.

"என்ன பாக்கற?"

"இல்லீங்க ஐயா... மூடிய சில் வெச்ச மாதிரி சிமெண்டால பூசிட்டா, சம்ப்புக்கு உள்ள தண்ணி இருக்கான்னு எப்படிப் பாப்பீங்க? சம்ப்பை தொறக்குணும்னா... எப்படி...?"

"அதைத்தான் நானும் கேட்டேன்" என்று வந்தாள் சுமதி, கையில் கரண்டியுடன்.

"சம்ப்பு கட்டும்போதே சொன்னேன்.... பக்கத்து வீட்ல இருக்கிற மாதிரி சிமெண்ட்டால மூடியப் பண்ணுங்க, இல்லைன்னா அட்லீஸ்ட் பூட்டுப் போடற மாதிரியாவது பண்ணுங்கன்னு... என் பேச்சை யார் கேக்கறா...?"

புரொஃபஸர் முகம் சிவக்க, "நான் சொன்ன மாதிரி நீ பண்ணுப்பா... இந்த முறை அவன் எப்படி திருடிட்டுப் போறான்னு பாக்கறேன்" என்றார்.

"இல்லீங்க ஐயா... நான் ஒரு வழி சொல்லட்டுமா...?"

"இதப் பாரு! நீ என்னத்தப் பெரிசா சொல்லப் போற? பேசாம சொன்ன வேலையச் செய்யப் போறியா இல்லையா...?"

"கொஞ்சம் இருங்க. முருகன் என்ன சொல்ல வர்றான்னுதான் பார்க்கலாமே... நீ சொல்லுப்பா..."

"இல்லம்மா... சம்ப்புக்கு உள்ளாற மூடிக்கு ஒரு ஜாண் அளவு கீழே சுவத்துல பெரிய ஆணிய ஜம்பர் வெச்சு அடிச்சுடலாம். இரண்டு முழ இரும்புச் சங்கிலியால ஆணிக்கு ஒரு முனையையும், சம்ப்பு மூடிக்குக் கீழே இன்னொரு முனையையும் கனெக்ஷன் கொடுத்த மாதிரி வெச்சு வெல்டிங் பண்ணிட்டா... நீங்களும் திறந்து பாக்க முடியும்; யாரும் எடுத்துட்டும் போக முடியாது..."

'அட! அப்படியும் ஒரு வழி இருக்கா...?' புரொஃபஸர் சிந்திக்க...

உள்ளே இருந்து பையனின் குரல் கூப்பிட்டது. "அப்பா...! ஒரு வேலையை ஒன்பது பேர் ஏழு நாள்ள செஞ்சா..."

'நீங்க உள்ளே போய் நம்ம பையனைக் கவனிங்க" என்றாள் சுமதி. ○

சிறுநீரக கோளாறுக்கு சிறந்தது

தெய்வீக மூலிகை மருத்துவம்

CKM
DIVINE HERBAL CENTRE

பத்தியம் கிடையாது. பக்க விளைவு கிடையாது

சிறுநீரகம் என்பது நமது உடலின் மிக முக்கியமான ஒரு கழிவு நீக்க உறுப்பாகும். இது நம் உடலின் இடுப்புக்கு சற்று மேலே முதுகெலும்பின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக (இடது, வலது) அமைந்துள்ளது. இவைகள் ஒவ்வொன்றிலும் சுமார் 10- லட்சம் நெஃப்ரான்கள் என்னும் நுண்ணிய வடிகுழல்கள் உள்ளது. இந்த நெஃப்ரான்கள்தான் சிறுநீரகத்தில் பணிபுரியும் முக்கிய திசு ஆகும். உடலிலுள்ள இரத்தம், சிறுநீரகத்தில் உள்ள நெஃப்ரான்களின் வழியே செல்லும்போது உடலுக்கு தேவையான நீர், தி., திரவ பொருட்களை உறிஞ்சிக்கொண்டு, தேவையற்ற கழிவுப்பொருட்களை சிறுநீர் குழாய் மூலம் சிறுநீராக வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகங்கள் பழுதடையும் போது யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம், நீர் போன்ற கழிவுப்பொருட்கள் இரத்தத்தில் அதிகமாகின்றன. இதனை செயற்கை முறையில் இரத்த சுத்திகரிப்பு செய்தல் (Dialysis) மற்றும் சிறுநீரகமாற்று அறுவை சிகிச்சை - (Kidney transplantation) போன்றவை செய்யும் நிலை ஏற்பட்டு இறுதியில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது.

சிறுநீரக கோளாறின் அறிகுறிகள்: இரத்த சோகையினால் வெளிறிப்போன முகம். 2 கைகால், முகம், வயிறு போன்றவை வீங்கி முற்றிய நிலையில், நுரையீரல், இதயம் போன்ற முக்கிய உறுப்புகளை பாதிக்கின்றது. இதனால், மூச்சுத்திணறல்,நெஞ்சுவலி, சளி, இருமல், படபடப்பு, போன்றவை தோன்றும். 3. சிறுநீர் போகும் போது எரிச்சல், மேலும் சிறுநீர் காபி கலரில் இருக்கும். அடிக்கடி இரவில் சிறுநீர் கழிக்க தோன்றும். 4. கண்களின் கீழ் ஒரு சிறு பை போல் வீங்கி இருக்கும். 5.கீழ் முதுகில் வலியெடுக்கும். 6. யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம் போன்றவை இரத்தத்தில் அதிகமாக காணப்படும்.

சிறுநீரகம் செயல் இழப்பின் காரணங்கள் : சர்க்கரை வியாதிதான் முதல் முக்கிய காரணம் ஆகும். கட்டுப்படுத்தப்படாத உயர் இரத்த அழுத்தம், எய்ட்ஸ் நோய் கிருமியான எச்.ஐ.வி வைரஸ் மற்றும் மஞ்சள் காமாலையின் வைரஸ் ஆ-யும் தொற்றாலும், இரத்த சோகை, சிறுநீரகக்கற்கள், மூட்டுக்கள்; இணைப்புத் திசுக்களை, பாதிக்கும் நோய்களாலும் அதிக வயிற்றுப்போக்கு, வாந்தி, சிறுநீர் குழாயில் ஏற்படும் தசை சுருக்கம், கற்கள், கட்டிகள், புற்றுநோய் போன்றவற்றாலும் அடைப்புகள் ஏற்பட்டு சிறுநீரகம் பழுதாகலாம். மேலும் மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் இரசாயன மாத்திரைகள். அதிகமான மாமிச உணவுகள் பாம்பின் விஷம், தீக்காயம், மின்சார தாக்குதல் போன்றவற்றால் சிறுநீரகம் பாதிக்கலாம்.

இயற்கை உணவுகள் : தினம் ஏதேனும் ஒரு வேளை இயற்கை உணவாகிய பச்சையாக சாப்பிடும் காய்கள், பழங்கள், பழ ரசங்கள், சாலட்ஸ் (Salads) போன்றவற்றை உணவாக உட்கொள்ள வேண்டும். காரணம் இதில் உள்ள சக்திகளை உடல் எளிதில் பெறுகின்றன. மேலும் கழிவுகள் குறைவு. ஆகவே கிட்னிக்கு வேலை பளு குறைகின்றது. கிட்னி நன்கு செயல்பட இயற்கை உணவு உதவுகிறது. குறிப்பாக அன்னாசி, பேரிக்கை, பப்பாளி, கொய்யா, அத்திப்பழம், நாவல், ஆரஞ்சு, மாதுளை, கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பீர்க்காய், இளநீர், கரும்புசாறு, வாழைத்தண்டு, முள்ளங்கி, போன்றவை உட்கொள்ளலாம். மற்ற இரண்டு நேரம் சாதாரண சைவ உணவு உப்பில்லாமல் அரை வயிறு ஆகாரம் உட்கொள்ளலாம். மேலும் வாரம் ஒரு நாள் உண்ணா நோன்பும், தினம் காலை, மாலை எளிய உடற்பயிற்சிகளும் மேற்கொண்டால், சிறுநீரக பாதிப்பில் இருந்து படிப்படியாக முற்றிலும் குணம் பெறலாம்.

ஒவ்வொரு மாதமும்

2	வேலூர்
2	காஞ்சிபுரம்
4	கடலூர்
4	விழுப்புரம்
4	திருவண்ணாமலை
7,8	மும்பை
9	பெங்களூர்
12	சேலம்
12	ஈரோடு
12	திருப்பூர்
13	கோவை
13	உடுமலைபேட்டை
14	மதுரை
14	திருநெல்வேலி
15	விருதுநகர்
15	தஞ்சாவூர்
16	திருச்சி
16	கரூர்
20,21	புது டெல்லி

டாக்டர் C.K. மாணிக்கவாசகம் அவர்களால் 34வருட அனுபவ ஆராய்ச்சியில் எழுதப்பட்ட "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" என்ற நூலினை பதிவுத்தபாலில் பெற ரூ. 120/-ம், "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற புதிய நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ.120/- ம் தலைமை முகவரிக்கு M.O. அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு:

CKM தெய்வீக மூலிகை மையம்

CKM DIVINE HERBAL CENTRE

தலைமை முகவரி : P.B. NO. 30, புதிதாக முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் dt 635601
✆04179-220469, 222769 செல் : 9842369696

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் டவர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை – 600 010. ✆ : 044-28424285, 28427638. செல் : 9444001447

: T-4,3வது மாடி, பிளாட் -3, 5வது தெரு, ஸ்ரீ லட்சுமி ஹோம்ஸ், அம்பை திருநகர், கோயம்பேடு, சென்னை- 107. ✆ : 044-55643347 செல் : 9282405758

டெல்லி கிளை : 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ 011-25736220 Cell: 9868026743

மேலே உள்ள முகவரிகளில் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 p.m. மாலை 5.00-7.00 P.M.



அம்மாவுக்கும் மனைவிக்கும் அடிக்கடி நடக்கும் தகராறுகளில் தலையைப் பிய்த்துக் கொள்ளும் தொல்லை தனக்கு இனி கொஞ்ச காலத்துக்கு இல்லை என்று அகமகிழ்ந்தவாறு, கோயம்புத்தூரில் ஒரு மில்லில் வேலைக்குச் சேர்ந்து தன் நண்பன் ராஜசேகர் வீட்டில் தங்கியிருந்த மாதவனுக்கு, அவன் மனைவி சீதா அனுப்பியிருந்த அந்தக் கடிதம் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

“நீங்கள் வீட்டிலிருக்கும்போதே என்னுடன் தேவையில்லாமல் சண்டைபோடும் உங்கம்மா, நீங்கள் வீட்டிலில்லாத நேரத்தில் என்னென்ன பண்ணுவாங்கன்னு உங்களுக்கே தெரியும். இனியும் என்னால் பொறுக்க முடியாது. உடனே வந்து இந்தச் சண்டைக்கு ஒரு தீர்வைச் சொல்லுங்க. இல்லேன்னா நான் பெட்டி படுக்கையோட எங்கம்மா வீட்டுக்குப் போயிடுவேன்” என்ற அந்த எச்சரிக்கைக் கடிதத்தைப் படித்து முடித்ததும், மேலே நிமிர்ந்து விட்டத்தை வெறித்துப் பார்த்தான்.



இங்கே வந்து ஒரு வாரம்தான் ஆகிறது. வரும்போதே சொல்லி விட்டுத்தான் வந்தான். ‘அடிக்கடி ஊருக்கு வர மாட்டேன். ஒரு மாதத்துக்கு ஒருமுறை மட்டும்தான் வருவேன்’ என்று. அதற்குள் ஏதோ சில்லறைப் பிரச்னைக்காக சினங்கொண்ட அழைப்பு! யாரைக் குற்றம் சொல்வது, அம்மாவையா, மனைவியையா? அம்மா சொல்லும் சில அறிவுரைகள்கூட சீதாவுக்கு அம்பு எய்தது போல் ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. அம்மாவுக்காவது தெரிய வேண்டாமா. ஓரிரு வார்த்தைகளில் பேச்சை நிறுத்திக் கொள்ளாமல், சீதாவின் முகம் கோபத்தில் சிவப்பு சிக்னல் காட்டும் வரை பேசிக் கொண்டே இருப்பாள். அம்மாவைச் சொல்லியும் குற்றம் இல்லை. சீதாவின் செய்கைகள் சில நேரங்களில் எரிச்சலை ஏற்படுத்தும்.

சாயங்காலம் வேலை முடிந்து வீடு திரும்பியதும் மாதவனுக்கு நீதிபதி பொறுப்பு வந்துவிடும். அம்மா பக்கம் தீர்ப்புச் சொல்வதா, மனைவி பக்கம் தீர்ப்புச் சொல்வதா என்று திணறி, மனசுக்குள் பட்டிமன்றம் நடத்துவான்.

அடிக்கடி நடக்கும் இந்த மாதிரி நிகழ்ச்சிகளிலிருந்து எப்படித் தப்பலாம் என்று தவித்துக் கொண்டிருந்தவனுக்கு, நண்பன் ராஜசேகரிடமிருந்து வந்தது அழைப்பு. நடுக்கடலில் தத்தளிப்பவனை கரை சேர்க்க வந்த கரம் எனக் கருதி ஓடோடி வந்துவிட்டான்.

இணையெழுத்து!

உடனடியாக ஊருக்குச் சென்று பிரச்னை என்னவென்று அறிந்து கொள்ளலாமா என்று யோசித்தவன், வந்த முதல் வாரத்திலேயே லீவு கேட்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்று கருதி, 'முதலில் கடிதத்துக்குப் பதில் கடிதம் போடுவோம். அதன் பிறகும் ஏதாவது பிரச்னை என்று கடிதம் வந்தால் நேரில் செல்லலாம்' என்று தீர்மானித்தான்.

கோபத்தில் 'அன்புள்ள' என்று கூட ஆரம்பிக்காமல் 'கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவும். மூன்று வாரம் கழித்து நான் ஊர் திரும்பியதும் விவகாரத்தை வைத்துக் கொள்வோம்' என்று இரண்டு வரிகள் மட்டும் எழுதி, அவசரமாக மனைவிக்கு அஞ்சல் செய்தான்.

ஐந்து நாட்கள் கழித்து சீதாவின் அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. தற்போது அவர் மாதவன் வீட்டில் தான் இருப்பதாகவும், உடனே அவனை ஊருக்கு வந்து செல்லும்படியும், 'அவனுடன் அவர் நிறையப் பேச வேண்டும்' என்றும், சற்றுக் கெஞ்சலாக எழுதியிருந்தார்.

வேறு வழியின்றி உடனே ஊருக்குக் கிளம்பினான்.

சீதாவோடு அவளது அம்மாவும் அப்பாவும், வராந்தாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அதில் வியப்பு என்னவென்றால், மாதவனின் அம்மாவும் அவர்களோடு அமர்ந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள். எட்டாவது அதிசயம் எப்படி தன் வீட்டுக்குள் அரங்கேறியது என்ற வியப்பு அவன் விழிகள் முழுக்கப் பரவியது.

அவர்கள் மாதவனைக் கண்டதும் சட்டென்று அமைதியாகி வரவேற்றனர். சீதாவின் முகம் முழுக்க சோகம் பரவியது. அவன் எதிர்பாராதபடி காலில் விழுந்த சீதா, "என்னை மன்னிச்சுடுங்க" அழுதாள்.

அவளைத் தூக்கிய அவனது அம்மா சீதாவின் கண்களைத் துடைத்தவாறே, "எதுக்கு இப்படி வீணா அழுவுற? எல்லாம் சரியாப் போகும்" என்று சமாதானப் படுத்தினாள்.

மாதவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "மாப்பிள்ளைக்கு



ராஜபாளையம் பேச்சியப்பன்



புள்ளி விவரப் புலி!

காத்ரினா புஷ்ஷை கிழிகிழி என்று கிழித்திருக்கிறது. சென்ற வாரம் எடுக்கப்பட்ட ஒரு சர்வேயில் அமெரிக்கர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? 42 சதவிகிதம்- 'புஷ் கையாண்ட முறை சரியில்லை'. 24 சதவிகிதம்- 'புஷ் படு மோசம்'. 13 சதவிகிதம் - 'புஷ்தான் இந்த அவல நிலைக்குக் காரணம்'. இதுவரை, நியூ ஆர்லியன்ஸில் மட்டும் 100 மில்லியன் டாலர் பெருமளவுள்ள பொருள் சேதத்தை காத்ரினா ஏற்படுத்தியுள்ளது. அதாவது புஷ்ஷுக்கு ஏற்படுத்தியுள்ள சேதாரம் நீங்கலாக.

காபி கொண்டு வாம்மா" என்று மகளைப் பணித்தவாறே அவனைத் தனியாக அழைத்துப் போனார் சீதாவின் அப்பா.

"மாப்ள, என் மக வயசுல ரொம்ப சின்னவ. உங்களுக்குக் கோபம் வர்ற மாதிரி அவ நடந்துக்கிட்டது தப்புதான். அதுக்காக நீங்க இப்படிப்பட்ட முடிவுக்கெல்லாம் வருவீங்கன்னு எதிர்பார்க்கவே இல்ல. உங்கம்மாகூட ரொம்ப வருத்தப்பட்டாங்க. முடிவை நீங்க எடுத்தாலும், எல்லாரும் அவங்களைத்தான் குறை சொல்வாங்கன்னு பயப்படுறாங்க. இனிமே ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் குடுத்து, பிரச்னையில்லாம இருக்குறதுன்னு முடிவு பண்ணிட்டாங்க. அதனால நீங்க லெட்டர்ல எழுதியிருந்தபடி தவறான முடிவெல்லாம் எடுத்துறாதீங்க" என்றார்.

மாதவனுக்குக் குழப்பம் அதிகமாகியது. இனி அம்மாவும் சீதாவும் சண்டை போடுவதில்லை என்ற நல்ல முடிவைக் கேட்கும்போதே, அவன் காதினில் தேன் பாய்ந்தது. தான் எழுதிய கடிதத்தில் ஏதோ விஷயம் இருக்கிறது. அதனால் தான் இந்த முடிவு ஏற்பட்டுள்ளது. தேவையில்லாமல் வாயைக் கொடுத்து இந்த மகிழ்ச்சியைக் கெடுத்துக் கலைத்து விடக் கூடாது. ஆனால் அந்தக் கடிதத்தில் அப்படி என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாவிட்டால், தலையே வெடித்துவிடும் போல் இருந்தது.

"அந்த லெட்டர் இப்ப எங்க இருக்கு?" என்று கேட்டான்.

மாதவன் எழுதிய அந்த அஞ்சல் அட்டையை தன் சட்டைப் பையிலிருந்து இரண்டாக மடிக்கப்பட்ட நிலையிலேயே நீட்டினார்.

அதைப் படித்துவிட்டு மனதுக்குள்ளேயே உரக்கச் சிரித்தான்.

அதில், 'கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவும். மூன்று வாரம் கழித்து நான் ஊர் திரும்பியதும் விவாகரத்தை வைத்துக் கொள்வோம்' என்று அவசரத்தில் எழுதியிருந்தான்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 17 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்
நல்லாசியுடன்

சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா

A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

“மூன்று தலைமுறைகளாக எங்களுக்கு அவர்களைத் தெரியும். தாத்தா நாராயணன் செட்டியார், மதுரை, பூக்கடை பஜாரில் சிறிய நகைக்கடை வைத்திருந்தார். அவரது மகன் பாலுச்சாமி செட்டியார் தெற்கு ஆவணி மூல வீதியில் 'பாலு ஜுவல்லர்ஸ்' என்ற பெயரில் நகை வியாபாரம் செய்து வந்தார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன்கள் பலராமன் கோவிந்ததாஸ், பா.ரமேஷ், என்.பி.குமார் ஆகிய மூவரும் கடையை எடுத்து நடத்துகின்றனர். 1991ல் சுமார் முந்நூறு சதுர அடிக்குள் வியாபாரம் செய்து வந்தவர்கள், இன்று ஐந்து தளங்களில், மொத்தம் 15,000 சதுர அடி பரப்பில் மதுரை நேதாஜி சாலையில் 'தங்கமயில் ஜுவல்லரி (பி)லிமிடெட்' என்கிற பெயரில் வெற்றிகரமாக நகை வியாபாரம் செய்து வருகின்றனர். வெறும் வியாபாரம், லாபம் என்றில்லாமல், அவர்களுக்கு வேறு முகங்களும், உயரிய சிந்தனைகளும் இருக்கின்றன. நீங்கள் வந்து ஒருமுறை பாருங்களேன்!" என்று அழைப்பு விடுத்தார் மதுரை வாசகர் ஒருவர்.

“எங்கப்பா 1983ல் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு இறந்த போது அவருக்கு ஐம்பத்து மூணே வயசுதான்!

“டாக்டர்... எங்க தாத்தாவுக்கு சர்க்கரை நோய் கிடையாது. ஆனா எங்கப்பாவுக்கு மட்டும் நீரிழிவு வந்தது எப்படி?" என்று யோகா டாக்டர் சங்கரனைக் கேட்டபோது...

"எல்லாம் நமது உணவுப் பழக்கங்களும், வாழ்க்கை முறையும் செய்யும் மாயங்கள்தான். அவற்றை மாற்றுங்கள்; வாழ்க்கையே மாறும்" என்று ஆலோசனை தந்தார்.

முழுக்க முழுக்க ஸைவ உணவுக்கு மாறினோம். யோகா, தியானம் கற்றுக் கொள்ளத் தொடங்கினோம். இந்த இரண்டு மாற்றங்களுக்குப் பிறகு ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்பட்டது. 'இஸ்கான்' எனப்படும் கிருஷ்ண பக்தி இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டோம். அப்போது

தங்க மயிலும்



தான் எங்களுடைய வாழ்க்கைக் கண்ணோட்டமே மாறியது. வைஸ்ய தர்மம் என்றால் என்ன? முறையான வழியில் வியாபாரம் செய்வது; இயற்கை விவசாயம் செய்வது, பசுவைப் பராமரிப்பது... முன்னோர்கள் காலத்திலிருந்தே முறையான வழியில் வியாபாரம் செய்து வருகிறோம். பின் வரும் இரண்டையும் தான் நாங்கள் செய்யவில்லை என்று உணர்ந்து கொண்டோம். அதற்காக தீவிர முயற்சி செய்து, 2001 முதல் தீவிர இயற்கை விவசாயம், பசு பராமரிப்பு போன்றவற்றில் சிறப்பாக இயங்கி வருகிறோம்" என்றார் தங்கமயில் ஜுவல்லரியின் இயக்குனர்களில் ஒருவரான பா.ரமேஷ்.

மதுரை நெடுங்குளம் அருகே எருக்களவெள்ளூர் கிராமத்தில், சுமார் 110 ஏக்கர் பரப்பளவிலும், அலங்காநல்லூர் வைகாசிப்பட்டி கிராமத்தில் 100 ஏக்கர் பரப்பளவிலுமாக இரண்டு இயற்கை வேளாண் பண்ணைகள் அமைந்துள்ளன.


தென்னை, பெரு நெல்லி, வேம்பு, புங்கை, மா, பலா, சப்போட்டா, நொச்சி, சீதா, கொய்யா போன்ற பல வகை மரங்கள் நூற்றுக் கணக்கில். தானியங்களில் கம்பு, சோளம், மக்காச்சோளம், நிலக்கடலை, பாசிப்பயறு, தட்டைப்பயறு, மொச்சை, வெள்ளைச் சோளம் போன்றவை. காய்கறிகளில் அவரை, புடலை, வெண்டை, பூசணி, பீர்க்கன், சுரை, கத்தரி, பாகல், தக்காளி, மிளகாய். இவை அனைத்துக்குமே இயற்கை உரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விளைந்த விளை பொருள்களிலிருந்து தயாராகும் மதிய உணவு,

சக்சஸ் ஸ்டோரி



• மனைவியுடன் ரமேஷ்

நிஜ மயிலும்!



உலகிலேயே முதல் முறையாக க்ளீவ்லேண்ட் மருத்துவக் குழு மிகுந்த சர்ச்சைக்குரிய அறுவை சிகிச்சையை அடுத்த சில வாரங்களில் அறிமுகப்படுத்தவிருக்கிறது. இறந்து போன ஒருவருடைய முக தசையை வேறொருவருக்குப் பொருத்தப் போகிறார்கள். சுமார் 10 மணி நேரங்கள் ஆகும் இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு புதிய முகத்தை யார் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இதற்குக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன.



மெடிக்கல் மூலை!

தங்க மயில் ஜுவல்லரியின் நூற்றியிருபது பணியாளர்களுக்கும் நல் விருந்தாகப் படைக்கப்படுகிறது.

மண்புழு உரம் இங்கேயே தயாரிக்கப் படுகிறது. மாதந்தோறும் பன்னிரண்டு டன் மண்புழு உரத்தைத் தயாரித்து, தங்கள் இயற்கை வேளாண் பண்ணை களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள் கின்றனர். பூச்சிக் கொல்லிகளைப் பயன் படுத்துவதில்லை. சாணம், நெய், மோர், தயிர், வெல்லம், தேன், பப்பாளிச்சாறு போன்றவற்றைக் கலந்து ஊற வைத்து பஞ்சகவ்யம் தயார் செய்து கொள்கின் றனர். வேப்பம் புண்ணாக்கு கலந்த, கோமியம் போன்ற இயற்கை பூச்சி விரட்டிகளையே பயன்படுத்துகிறார் கள். இயற்கை உரங்கள், நுண்ணுயிர் கள், மண்புழு உரம், தேமோர் கரை சல் போன்றவற்றை மட்டுமே பயன் படுத்துகிறார்கள். ஏக்கர் கணக்கில் அடர்த்தியாக பரந்து விரிந்துள்ள சோலை என்பதால், சுற்றுப்புறங்களில் அதிக மழை பெய்வதாக மக்களே சொல் கிறார்கள்.

இரு வேளாண் பண்ணைகளும் இயற்கை வனச் சோலைகளாக இருப்ப தால், பண்ணையின் உள்ளே எண்ணி லடங்கா மயில்கள். தங்க மயில் ஜுவல்லரிக்காரர்களின் பண்ணைகளில் நிஜ மயில்கள்..! இவை சாப்பிடுவதற் கென்றே கொள்ளு, மற்றும் சோளப் பயிர்கள் நிறைய இடங்களில் பயிரிடப் பட்டுள்ளன.

பசு பராமரித்தல் எனும் உயரிய நோக்கத்துடன், இந்தப் பண்ணைகளில் கோசாலைகள் இயங்கி வருகின்றன. காங் கேயம், ஜெர்சி, சிந்து, நாட்டு மாடுகள் என சுமார் தொண்ணூறு மாடுகள் பரா மரிக்கப்படுகின்றன. ஆந்திராவின் ஓங்கோல், குஜராத்தின் கிர், ராஜஸ்தானின் தார்ப்பாக்கர் வகை மாடுகளையும் தருவித்து வளர்க்கத் திட்டமிட்டுள்ளனர்.

"நான் சிறுவனாய் இருந்தபோது கிருஷ்ணர் படக் காலண்டர்களில் மாடு களுக்கு தாடைப் பகுதியில் டோலக் மாதிரி தொங்கும். அவற்றின் திமில்கள் அழகாக இருக்கும். நான் பெரியவன் ஆன 'பிறகு, நம்ம ஊர் மாடுகளைக் கவனித்திருக்கிறேன். அவற்றுக்கு டோலக் இல்லை. திமில் இல்லை. காரணம் கேட் டேன், நம் நாட்டில் தற்போது இருப்பது பெரும்பாலும் கலப்பின மாடுகளே என பதில் வந்தது. அவற்றுக்கு டோலக்கும் திமிலும் இருக்காது எனச் சொன்னார் கள். கோசாலை அமைத்த பிறகு ஒரிஜின லான பாரம்பரிய கால்நடைகளை வளர்த்து வருகிறோம். எங்கள் இயற்கை வேளாண் பண்ணைகளில் விளைந்து வரும் வேளாண் பொருள்களுக்கு பெங் களூரில் இயங்கி வரும் நெதர்லாந்து நாட்டின் ஸ்கால் இன்டர்நேஷனல் (SKAL INTERNATIONAL) என்கிற வேளாண் ஆய்வு அமைப்பானது தர நிர்ணயச் சான்றிதழ் தந்துள்ளது. இது எங்கள் இயற்கை வேளாண் பண்ணை முயற்சி களுக்குக் கிடைத்த அங்கீகாரம் எனக் கருதுகிறோம்!" என்கிறார் பா. ரமேஷ் பெருமையுடன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அழகிழந்த பூங்கொத்து!

சமீபத்தில் ஒரு தூதுக் குழுவுடன் நான் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பாகிஸ்தானில் எங்கெல்லாம் செல்ல வேண்டும், எதை எல்லாம் பார்க்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தோம்.

எங்களுடன் சென்னையிலிருந்து வந்திருந்த எழுபத்தைந்து வயது ரூபா கபூர் "எதைப் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் எனக்கு பிண்டியைப் பார்த்தாக வேண்டும்!" என்றாள்.

அவள் ராவல்பிண்டியில் பிறந்து, பிரிவினைக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்தவள், சென்னையில் தங்கி விட்டாள். சென்னைதான் இப்போது அவள் ஊர். நன்றாகத் தமிழ் பேசுவாள் போலும். ஏன், புளியோதரையும், ரசமும் கூட நன்றாகத் தயார் பண்ணக் கூடும்!

இஸ்லாமாபாத்தில் நாங்கள் இறங்கியதும், ஒவ்வொருவருக்கும் ஒரு ரோஜாக் கொத்து கொடுத்து வரவேற்றார்கள். "வீட்டை விட்டு வந்த மாதிரியே தெரியவில்லை. இந்தப் பூங்கொத்தை ஒட்டலில் விட்டுப் போகவும் மனதில்லை. இஸ்லாமாபாதில் இவ்வளவு அழகான மலர்கள் இருப்பது தெரியாமல் போயிற்றே!" என்றேன்.

"என்னவானாலும் இஸ்லாமாபாத் ஒரு புதிய நகரம். எங்கள் பிண்டிதான் பழைய ஊர். இங்கிருந்து 10-20 கிலோ மீட்டர் தான் இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே அழகான பூந்தோட்டங்கள், சிறந்த காய்கறிகள், சுவையான தண்ணீர் எல்லாம் உண்டு. சீஸன் சமயத்தில் சொர்க்கம்தான்!" என்றாள் ரூபா.

அவள் சொன்னது சரிதான். இஸ்லாமாபாத்-ராவல்பிண்டி இரண்டும் இரு-நகரங்கள். பிரிவினைக்குப் பிறகு, புதிய கட்டடங்கள், சாலைகள், ஷாப்பிங் சென்டர்கள் என்று உருவானதுதான் இஸ்லாமாபாத். ரோஸ் தோட்டங்களில் உள்ள ரோஜா மலர்களும் விதவிதமாக இருந்தன. அமைதியாக இருக்கும் ரூபா கபூர் இப்போது அதிகம் பேச ஆரம்பித்தாள்! "முதலில் இஸ்லாமாபாத்தைப் பார்த்துவிட்டு, ராவல்பிண்டி போகலாம்" என்றோம். அவள் கேட்கவில்லை. "முதலில் ராவல்பிண்டிதான்" என்றாள்.

நான் அவளுடன் போக விரும்பி, அவள் அமர்ந்திருந்த காரில் உட்கார்ந்தேன். அவளுக்கோ ஒரே மகிழ்ச்சி. "நான் 57 வருடங்களுக்கு முன் விட்டுவிட்டு வந்த வீட்டை பார்க்க வேண்டும்!" என்றாள் குழந்தை மாதிரி.

"நல்ல யோசனை. நான் இந்த மலர்க் கொத்தை, இப்போது உங்கள் வீட்டில் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன்!" என்றேன். அது அவள் மனத்தைத் தொட்டது.

இஸ்லாமாபாத் விமான தளத்தைத் தாண்டியதுமே, அவள் பயணிகளின் கைடு மாதிரி ஆகிவிட்டாள்!

அவள் பழைய கட்டடங்களை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டே வந்தாள். ஒவ்வொன்றுக்கும் அவளிடம் ஒரு கதை இருந்தது. சில கட்டடங்கள் மாறி இருந்தன. அப்போது அவள் மௌனமாகி விடுவாள்.

நான் அவளுடனே நடந்தேன். பழைய பெரிய வீடுகள் அங்கே நிறைய இருந்தன. அதில் முதலில் இருந்த பங்களாவுக்குள் அவள் போனாள். "இதுதான் என் மாமா மோத்திராம் ராய் வீடு. அடுத்த வீடு அல்லா பக்ஷ் என்பவருடையது. அவர்கள் இணைபிரியா நண்பர்களாக இருந்தார்கள். எனக்கு இன்னும் நன்றாக நினைவு இருக்கிறது. எப்போதெல்லாம் அல்லா பக்ஷ் சாச்சா (மாமா) செடி

சுதா மூர்த்தி

நடுகிறாரோ, அதே செடியை என் மாமாவும் வாங்கி நடுவார். இந்த மாமரம் எனக்கு மறக்கவே இல்லை. அப்போது வஸந்த் பஞ்சமி சமயம். இரண்டு வீடுகளிலும் கோலாகலமும் கொண்டாட்டமுமாக இருந்தது. என் பாட்டி கீர் (பாயசம்) தயாரித்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அல்லா பக்ஷ் மாமா வீட்டில் கொடுத்துவிட்டு வரச் சொன்னாள். அந்தப் பாத்திரத்தை நான் எடுத்துக் கொண்டு போகும்போது, எதிரே வந்த இளைஞர் மீது நான் மோதிக் கொண்டதில், கீர் அப்படியே அவர் காலில் கொட்டி விட்டது. நான் பயந்து போய் விட்டேன். ஆனால் இளைஞர் பெரிதாகச் சிரித்து விட்டார்!"



''அவரைத் தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டேன்.

"அப்போது தெரியாது. இப்போது அவர் என் கணவர்!"

இந்த வயதிலும் அவள் முகத்தில் வெட்கம் தெரிந்தது. முகத்தை உயர்த்தி மாமரத்தைப் பார்த்துவிட்டு, "இந்த மரத்துக்கும் வயதாகிவிட்டது'' என்றாள் புன்னகையுடன்.

அந்தப் பெரிய பங்களா தோட்டத்தில் யாருமே இல்லை. அதன் சொந்தக்காரர்கள் யார், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் ரூபா கொஞ்சம்கூட யோசித்ததாகத் தெரியவில்லை. நான் முன்புறம் நின்று கொண்டிருக்கும்போது, ரூபா கொல்லைப்புறமாகப்

உள்ளங்கையில் உலகம்

போனாள். அதற்குள் ஒரு தம்பதி வீட்டுக் குள்ளிருந்து வெளியே வந்து, சேலை கட்டிய ஒரு பெண் தங்கள் வீட்டின் முன் நிற்பது கண்டு வியந்து போனார்கள். அப்போதுதான் வீட்டு வாசலில் இருந்த போர்டைக் கண்டேன்: 'டாக்டர் சலீம் அன்ட் டாக்டர் சல்மா, பல் மருத்துவர் கள்' என்று இருந்தது.

"மன்னிக்க வேண்டும், உங்கள் உத்தரவு இல்லாமல் உள்ளே நுழைந்து விட்டோம். என் சிநேகிதி ரூபா இங்கே பல வருடங்கள் வசித்திருக்கிறாள். நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம். நாங்கள் சுற்றிப் பார்க்கலாமா?" என்று கேட்டேன்.

மகிழ்ச்சியுடன் உடனே சம்மதித்தார் கள்.

ரூபா கபூர் ஒவ்வொரு மரமாகப் பார்த்து ரசித்து, தன் பழைய நினைவு களைப் புதுப்பித்துக் கொண்டாள். வேடிக்கை பார்த்தேன்.

ரூபா வரும் வரை நான் பேச்சைத் தொடர விரும்பி, "இந்த வீடு பழையதாகி விட்டதல்லவா? பராமரிக்கக் கஷ்டமாக இருக்குமே? புதிய கட்டடம் கட்டி விடலாமே?" என்றேன்.

டாக்டர் சலீம், "ஆமாம், இதை இடித்துவிட்டு, மூன்று மாடிக் குடியிருப்பு கட்ட எங் களைத் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறார் கள். ஆனால் நான்தான் மறுத்துக் கொண்டி ருக்கிறேன். நானும் என் மனைவியும் வசதியாக இருக்கிறோம். பணத்துக்காக நாங்கள் எதையும் செய்ய விரும்பவில்லை. எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் அல்லா பக்ஷின் மக்கள் அந்த வீட்டை விற்று, அது இப்போது வியாபார வளாகம் ஆகிவிட்டது!" என்றார்.

அதற்குள் ரூபா கபூர் வந்துவிடவே, அவளை அறிமுகப்படுத்தினேன். வீட்டுக்கு உள்ளே போய்ப் பார்க்கலாமா என்று ரூபா கேட்டதற்கு, "ஆகா, தாரா ளமாக!" என்று மகிழ்ச்சியுடன் சம்மதித் தார் டாக்டர் சலீம். நானும் ரூபாவுடன் உள்ளே போனேன்.


முதல் மாடிக்குப் போனோம். "இங்கி ருந்துதான் நாங்கள் விளையாடுவோம். அந்தப் பக்கத்திலிருந்து மெஹ்மூத் எங் களுக்குப் பட்டம் செய்து தருவார்!"

அவள் இடைவிடாமல் ஏதேதோ சொல்லிக் கொண்டே வந்தாள். ஒவ் வொரு செங்கல்லும், மரமும், மரத் துண்டும் அவளுக்குப் பழைய நினைவு களைக் கொண்டு வந்து கொண்டே இருந்தன. நான் அவளுக்கு அவளுடைய வீட்டையும் பார்க்க வேண்டும் என்று நினைவுபடுத்த வேண்டியிருந்தது. மாடிப் படி இறங்கிக் கீழே வந்து, தம்பதியிடம் விடை பெற்றோம்.

டாக்டர் சல்மா ஒரு பொட்டலம் கொடுத்தாள். "உங்களுக்கு இங்கே இருந்து சாப்பிட நேரம் இல்லை என்று தெரியும். ஆனால் பெரியவர்களான உங்களை வெறுங் கையோடு அனுப்ப எங்களுக்கு மனமில்லை. கடவுள் கருணை இருந்தால் மறுபடி வாருங்கள், இன்ஷா அல்லா!" என்றாள்.

வீட்டை விட்டு வெளியே வந்து, மெயின்ரோடுக்கு வந்தோம். டிரைவர் எங் களுக்காகக் காத்திருந்தார். ரூபா அவள் வீட்டைப் பார்க்க ஆவலாக இருந்தாள்.

"அம்மா, இந்த ரோடுதானா?" என்று



"திருடனைக் கண்டதும் பாகவதர் கூச்சல் போட்டிருக்காரே... அக்கம்பக்கத்து வீட்டுக்காரங்க ஒருத்தரும் எட்டிப்பார்க்கவே இல்லையாமே, ஏன்?"

"கச்சேரிக்காக ப்ராக்டிஸ் செய்யறார்னு நெனச்சுட்டாங் களாம்"

- அஜித்லால்

டிரைவர் கேட்டார். "ஆமாம். இதே சந்து தான். இங்கேதான் எங்கள் வீடு இருந்தது. நான் பிறந்து வளர்ந்தது இங்கேதான். பதினேழு வருடங்கள் இங்கே இருந்தேன். இந்தச் சாலையில் எனக்கு எல்லா இடமும் தெரியும். நீங்கள் வேண்டுமானால் இந்த ஊருக்குப் புதிதாய் இருக்கலாம். என் ஊரை நான் எப்படி மறக்க முடியும்?"

காரை நிறுத்தச் சொல்லி இறங்கினாள். புதிய கட்டடங்களுக்குப் பின்னால் அவள் வீடு மறைந்திருக்கக் கூடும் என்று அவள் இன்னும் நம்பினாள். காணாமல் போன குழந்தையைத் தேடும் அம்மாவைப் போல, விரைந்து நடந்தாள். நான் அவளைத் தொடர்ந்தேன். ஒவ்வொரு கட்டடத்துக்குப் பின்னாலும் தேடித் தேடி அலைந்தோம்.



''எங்க கிராமத்துக்கு வாட்டர் கனெக்ஷன் கிடைக்குமா?''
''நோ சான்ஸ்... இன்டர்நெட் கனெக்ஷன் வேணும்னா ஏற்பாடு பண்றோம்...''
- எஸ்.மோகன்

"எங்கள் வீடு மஞ்சள் நிற, இரண்டு மாடிக் கட்டடம். வலப்புறம் தான் நுழைவு வாயில். என் வீட்டிலிருந்து ஈத்கா மைதானத்தை எளிதாக, தினமும் பார்ப்பேன். இரண்டு வருடங்களுக்கு முன்னால்கூட என் சிநேகிதி ஒருத்தி வந்து எங்கள் வீட்டைப் பார்த்துவிட்டு வந்தாள். அப்படியேதான் இருக்கும் அது..."

ஆனால் அந்தப் பகுதியில் அப்படி எந்த வீடும் இருக்கவில்லை. இப்போது அந்த வீடு இருக்க வாய்ப்பில்லை என்றே நினைத்தேன். ரூபாவும் இதை உணர்ந்திருந்தாலும், ஏற்க மனமில்லை அவளுக்கு. 'அடுத்த இடம் போக நேரமாகிறது' என்று அவளுக்கு நினைவுபடுத்தினேன்.

அவள் என்னுடன் நடந்து வந்தாள், சுரத்து இல்லாமல். அவள் வாழ்ந்த வீடு என்று குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தேன். ஒரு பெரிய ஹோட்டல்தான் அங்கே இருந்தது. வாட்ச்மேன் வாயிலில் நின்று கொண்டிருந்தார்.

''எத்தனை வருடமாகிறது இந்த ஹோட்டல் கட்டி?'' என்று விசாரித்தேன்.

அவர் எழுந்து நின்று, "ஒரு வருடம் தான் ஆகிறது!" என்றார்.

ரூபாவின் வீடு இடிக்கப்பட்டு, அங்கே தான் அந்த ஹோட்டல் வந்திருக்கிறது என்று புரிந்து விட்டது.

ரூபா கீழே தரையிலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து, ''இது என் இடம். என் மண். இந்த பூமியில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்திருக்கிறது எங்கள் குடும்பம். இந்த பூமி, மரம் செடி கொடிகள், காற்று, நீர் எல்லாம் நாங்கள் உணர்ந்து அனுபவித்தவை. இந்தக் கலாசாரம், பழக்க வழக்கம், உணவு எல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு நாள், இதை எல்லாம் சிறிதும் புரிந்து கொள்ளாத மனிதர் ஒரு கோடுபோட்டு, இரண்டு தேசங்களாகப் பிரித்து வைத்து விட்டார். திடீரென்று எங்கள் நாட்டிலேயே நாங்கள் அந்நியர்கள் ஆகிப்போனோம். நாங்களும் புதிய கலாசாரத்தை, புதிய மொழியை ஏற்றுக் கொள்ளப் பழகினோம். பிரிவினை என்ற ஒரு கோடு, என்னையே என் நாட்டில் யாருக்கும் தெரியாமல் செய்துவிட்டது" என்றாள்.

அவளுக்கு என்னிடம் எந்த பதிலும் இல்லை. ஆனால் அவள் துயரத்தை என்னால் உணர முடிந்தது. காரில் போய் உட்கார்ந்தவுடன், ரூபா அழத் தொடங்கினாள். அவள் தோளைத் தொட்டுச் சமாதானப்படுத்தினேன். அந்த அழகான ரோஜாக் கொத்து அழகிழந்து போனது போலவும், சல்மா தந்த பொட்டலம் பிரசாதம் போலவும் எனக்குப் பட்டது.

(தொடரும்)



''நேற்று உங்க ஃபோன் நம்பர் தெரியாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டேன்''

''அட என்னங்க நீங்க. எனக்கு ஒரு ஃபோன் அடிச்சுக் கேட்டிருந்தா நானே சொல்லியிருப்பேனே!''

- எம். அசோக்ராஜா

நடுப்பக்க




''நடிகைகளில் பாதிப்பேர் மோசம்னு சொல்லிட்டேன். உடனே 'சொன்னதை வாபஸ் வாங்கு!'ன்னு போர்க்கொடி தூக்கிட்டாங்க!''

''அப்புறம்..?''

'' 'பாதிப்பேர் மோசம் இல்லை'ன்னு சொல்லி வாபஸ் வாங்கிட்டேன்''

- தேனி எஸ். மாரியப்பன்



''தார் ரோடு போட நம்ம மந்திரி மிலிடரி டாங்கியை வரவழைச்சுருக்காரே...?''


''போர்க்கால அடிப்படையில் வேலை நடக்குதுன்னு சிம்பாலிக்கா காட்டத்தான்''

- பூ.மகுடபதி

''இந்த நர்ஸ் உங்க வீட்ல உங்கள கவனிக்கற மாதிரி கவனிச்சுக்குவாங்க!''

''முன்னாடியே தெரிஞ்சிருந்தா இங்கே வந்துருக்கவே மாட்டேனே!''

- அம்பை தேவா



நக்கல்!



''என்ன தலைவரே, நம்ப கட்சிக் கொடியை அபசகுனமா கறுப்பு நிறத்தில் அமைக்கச் சொல்றீங்க?''

''சும்மா இருய்யா! எதிர் கட்சிக்காரனுங்க 'கறுப்புக் கொடி' ஆர்ப்பாட்டம் பண்ண முடியாது பாரு...!''

- ஆர்.சுந்தரராஜன்

''மைக்ல எதுக்கு திசை காட்டும் கருவி தொங்குது?''

''மக்களை திசை திருப்பற மாதிரி தலைவர் இன்னிக்குப் பேசறதா இருக்காராம்!''


- அம்பை தேவா



திருச்சியைச் சேர்ந்த ஃப்ரெட்ரிக் அலோசியஸ், பதின்மூன்று வயது வரை எல்லாச் சிறுவர்களைப் போல ஓடி ஆடித் திரிந்து கொண்டிருந்தவர்தான். திடீரென்று கண் பார்வை மெள்ள மெள்ளக் குறையத் தொடங்கிய போது கூட அதன் விபரீதம் தெரியாமல் கிரிக்கெட் விளையாடிக் கொண்டும், காமிக்ஸ் படித்துக் கொண்டும் உற்சாகமாகவே இருந்திருக்கிறார். ஆனால் மங்கலாகத் தெரிந்த உலகம் ஒரேயடியாக இருட்டான போதுதான், அதிர்ச்சியடைந்து போயிருக்கிறார் ஃப்ரெட்ரிக்கின் பெற்றோர்கள்.

“ஏதோ கலங்கலா தெரியுதுங்கறானேன்னு பயந்து போய் நிறைய கண் மருத்துவர்கள் கிட்டே காட்டினோம். மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, கோவை, சென்னை சங்கரா கண் மருத்துவமனை, அகர்வால், அப்பல்லோ என ஏறி இறங்காத பிரபல மருத்துவமனைகளே இல்லை. கிட்டத்தட்ட பத்து லட்சம் ரூபாய் செலவாச்சு! ஆனா பலன் பெரிசா ஏதும் கிடைக்கலை. அலோசியஸுக்கு ‘ஆப்டிக் ஆட்ரோபி’ என்கிற குறைபாடு இருப்பதாகச் சொன்னாங்க. விழிகளுக்கு வரும் பார்வை நரம்புகளில் ரத்த ஓட்டம் முழுமையாகத் தடைப்பட்டுப் போனதால, பார்வை இழப்பு ஏற்பட்டிருக்குன்னு விளக்கம் சொன்னாங்க. மேற்கொண்டு என்ன செய்யலாம்னு திகைச்சுப் போயிருந்த சமயத்துல, மேலும் ஒரு விஷயம் இடிபோல வந்து இறங்குச்சு. அலோசியஸுக்குக் காது கேட்கற திறனும் படிப்படியா குறைய ஆரம்பிச்சுடுச்சு. கடந்த மூன்றரை வருஷமா ஹியரிங் எய்ட் பயன்படுத்தறான்'' என்றார், தந்தை ஜோசப் இருதயராஜ், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்காளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

“ஒரே பிள்ளை...! அதுவும் நல்லா படிக்கிற குழந்தை. அவனுக்கு இப்படி ஆயிடுச்சேன்னு நாங்கதான் கலங்கி நின்னோம். ஆனால் அவன் தைரியமாதான் இருந்தான். “அம்மா, எக்காரணம் கொண்டும் என் படிப்பை மட்டும் நிறுத்திடாதே.. நான் என்னென்ன படிக்க விரும்புகிறேனோ அதையெல்லாம் கஷ்டப்பட்டாவது படிக்க வைச்சுடும்மா...



• ப. சுரேஷ்குமாருடன் அலோசியஸ்

நிச்சயம் ஒரு நாளைக்கு கிரேட் ஆகாமல் நான் சாக மாட்டேம்மா'' என்று கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வான். அவன் ஆசைப்பட்டபடியே அலோசியஸைப் படிக்க வைச்சிருக்கோம்'' என்றார் தாயார் லூசி. இவர் ஆசிரியப் பணியாளர். மகனுக்காகவே விருப்ப ஓய்வு பெற்றுவிட்டவர்.

குறைகளை எல்லாம் தாண்டி நிறையவே படித்து விட்டார் அலோசியஸ். மதுரை காமராஜர் பல்கலையில் எம்.பி.ஏ., எம்.ஃபில் படித்து தேர்வாகியிருக்கிறார்.

“எனக்குப் பார்வை மங்க மங்க...

“எனது விழி தூங்காது!”

படிப்பின் மீது நாட்டம் ஏறிக் கொண்டே போனது. அம்மா பாடப்புத்தகங்களை வாசிப்பார். சிறப்பு ஆசிரியர்கள் சிலர் வீட்டுக்கே வந்து பாடம் நடத்துவார்கள். பதிவு செய்யப்பட்ட பாடங்களை வாக்மேனில் போட்டுக் கேட்பேன். கடந்த அஞ்சு வருஷமா, தேர்வுகளின் போது, எனக்கு ஸ்க்ரைப் ஆக வந்து உதவி செய்து கொண்டிருக்கிறார் அனுஷா. அந்த அக்காவை என் வாழ்நாளில் மறக்க முடியாது. எம்.பி.ஏ இறுதியாண்டுத் தேர்வின்போது அவருக்குத் திருமணம் ஆகி ஒரு மாசம்கூட முடிந்திருக்காது. அப்போதும் தேர்வு





• அம்மா அப்பாவுடன்...

எழுத உதவினார். அதேபோல எம்.ஃபில் இறுதித் தேர்வின்போது, அவருக்குக் குழந்தை பிறந்திருந்தது. அப்போதும் எனக்காகத் தேர்வு எழுதினார். திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக உதவி இயக்குனர் பகரேஷ்குமாரையும் இங்கே கண்டிப்பாகக் குறிப்பிட்டாக வேண்டும். அவரது வழிநடத்துதலால்தான், ப்ரெயில் தட்டச்சுப் பயிற்சி பெற்று, தன்னம்பிக்கையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்கிற அலோசியஸ், அடுத்த முயற்சியாக 2005 மே மாதத்தில் நடைபெற்ற சிவில் சர்வீஸ் நுழைவுத் தேர்வு எழுதி, அதிலும் தேர்ச்சி பெற்று விட்டார்.

“எனக்குப் பார்வை இல்லைன்னா என்ன? மத்தவங்களுக்கு உதவற வகையில வாழ்க்கையை அமைச்சுக்க முடியும். பொதுமக்களுக்கு சேவை செய்ய முடியும். அதுக்காகத்தான் கலெக்டராக விரும்பறேன்'' என்கிறார் அலோசியஸ் உறுதியாக!

''ஒரு சில சமயம் நான் ரொம்ப நொந்து போய் உட்கார்ந்திருப்பேன். அந்தத் தருணத்தை அவன் எப்படி உணர்வானோ தெரியாது, என் முதுகுப்புறமாக வந்து என்னைக் கட்டிப் பிடிச்சுப்பான். “வெற்றி நிச்சயம்... இது வேத சத்தியம்...ங்கிற ‘அண்ணாமலை’ பாட்டை சத்தமா பாடுவான். ‘சூரியன் தூங்கலாம்; எனது விழி தூங்காது!’னு உணர்ச்சியா பாடுவான். அதைக் கேட்டதுமே, என்னோட சோகமெல்லாம் பறந்து போயிடும்” என்றார் லூசி கண்களைத் துடைத்துக் கொண்டே!

- இருள்நீக்கியான்

'லாண்ட் மார்க்' புத்தகக் கடையிலிருந்து வெளியே வந்து ஆட்டோவுக்காகத் தேடியபோது வாசலிலேயே நின்று கொண்டிருந்த அந்த இளைஞன் "என்ன ஸார் ஆட்டோவா?" என்றான்.

"ஆமாப்பா... அடையார் போகணும்..."

"அடையாரில எங்க ஸார்?"

"சொன்னேன். எவ்வளவு...?" மீட்டர் என்பதெல்லாம் போய் வெகுகாலமாகி விட்டது சென்னையில்.

அவன் சொன்ன தொகை நியாயமாகப் பட்டதால் ஆட்டோவில் அமர்ந்து கொண்டேன்.

வண்டியைக் கிளப்பியபடியே அந்த இளைஞன் வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

"அப்பா... என்ன வெயில் ஸார்... ராயபுரத்திலிருந்து இங்கு வந்தேன் ஸார்... ஒரு ஆள் ஐந்து நிமிடம் வெயிட் பண்ணுப்பா என்று சொல்லிவிட்டுப் போனார்... ஒரு மணி நேரமாகியும் வரலை. நான் கூட உள்ளே போய்ப் பார்த்தேன். ஆளைக் காணவில்லை. பைசா கொடுக்காமல் ஏமாத்திட்டுப் போயிட்டான் ஸார்..." என்றான் அழும் குரலில்.


"அட பாவமே... இப்படியெல்லாம் ஏமாற்றுபவர்கள்கூட இருக்காங்களா...?" என்றேன்.

"ஆமாம் ஸார்... சின்ன வயசுக்காரர்... நல்லா டிரஸ் பண்ணியிருந்தார்.... கைல... அதென்ன... செல்போன்கூட வச்சிருந்தார்..."

நான் சிரித்தேன்.

"நீ என்ன தம்பி... இப்ப யார்தான் செல்போன் வைச்சுக்கல?" என்றேன்.

"அப்படியா... நம்மகிட்ட



ஆட்டோவில் ஓர் அழுகை!

அதெல்லாம் இல்ல... ஸார். ரொம்பக் கஷ்ட ஜீவனம்" அவனைப் பார்த்தால் அப்படியொன்றும் கஷ்ட ஜீவனத்தில் இருப்பவன் போல் தோன்றவில்லை. அதனால் நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

தனக்குத்தானே ஏதோ பேசிக் கொள்பவன் போல் தோன்றியது. அடிக்கடி தலையை அசைத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

'கடவுள் இருக்கிறாரா ஸார்...?'

எனக்குச் சற்று சுவாரசியம் ஏற்பட்டது. "என்னப்பா, பெரிய பெரிய தத்துவஞானிகள் கேட்ட கேள்வியைக் கேட்கிறாயே?" என்றேன்.

"ஆமாம் ஸார்... ஒருவனுக்குத் தொடர்ந்து கஷ்டத்தையே ஏன் ஸார் கொடுத்திட்டுருக்கார்?"

என் சுவாரசியம் அதிகமானது.

"அதைத்தான் தலைவிதின்னு சொல்றோம்..."

"பொல்லாத தலைவிதி...

அயோக்யத்தனம் செய்யறவங்க எல்லாம் நல்லா, சௌகர்யமா இருக்காங்க..."

"..............."

"நீங்களே பாருங்க ஸார். எவனோ ஒரு படிச்சவன், என்னை இப்படி ஏமாத்திட்டுப் போயிருக்கான். என் காசு போச்சு... அவனுக்குக் கடவுள் என்ன தண்டனை தரப் போறாரு... இப்ப நான் உங்களை விட்டுட்டுப் பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போகணும் ஸார்..."



"அப்படியா...?"

"ஆமாம் ஸார். என் வொய்ஃப் அங்கே அட்மிட் ஆயிருக்கா. முதல் குழந்தை ஸார். ஏதோ பிராப்ளம்கறாங்க. கைல காசுமில்ல. நான் போய்த்தான் ஏதாவது ஏற்பாடு பண்ணனும்..."

அவன் குரலில் அழுகை தெரிந்தது.

"என்ன பிராப்ளமாம்...?"

"டாக்டர்கள் சொல்றாங்க ஸார்.. நமக்கு என்ன புரியுது? ஆபரேஷன் பண்ணணும் கறாங்க... இந்த அழகிலே நாங்க லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டோம், இரண்டு குடும்பத்தையும் பகைச்சுக்கிட்டு..."

"அடடே...."

"எனக்கு வர வருமானத்திலே நாங்க ரெண்டு பேரும் வாழறதே கஷ்டமாயிருக்கு. இப்ப குழந்தை வேற பொறந்தா... என்ன செய்யப் போறேன்னு தெரியல...!"

"இதையெல்லாம் நீ கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முன்னாலயே

தேவவிரதன்

இல்ல யோசனை பண்ணியிருக்கணும்...?''

"சரியாச் சொன்னீங்க ஸார். அப்ப இளமை வேகம்... காதல்... கண் தெரியல... யோசிக்கத் தோணல..."

ஆட்டோ கிட்டத்தட்ட எதிரே வந்த ஒரு வேன் மேலே மோதுகிறாற்போல் நெருங்கி விலகியது.

"ஸாரி... ஸார்... என் மனக் குழப்பத்தில வண்டியை ஓட்டறதிலே கவனம் சிதறுது-- ஆஸ்பத்திரிய நினச்சே மனசு குழம்புது..."

"பார்த்துப்பா... ஜாக்கிரதையாப் போ..."

"மன்னிச்சுக்குங்க ஸார். கல்யாணம், குழந்தைன்னு எவ்வளவோ பேர் பண்ணிக்கறாங்க. அவங்களுக்கெல்லாம் என்னை மாதிரி பிரச்னை வருதா என்ன...?''

''வரலாம்... வரலைன்னு உனக்கு எப்படித் தெரியும்?''

"கரெக்ட்..."


கொஞ்ச நேரம் அமைதியில் கழிந்தது. மீண்டும் ஒருமுறை ஆட்டோ ஒரு பஸ்ஸில் மோதுவது போல் சென்று விலகியது.

''ஆபரேஷன்னா நிறையப் பணம் செலவாகுமா ஸார்...?'' என்றான் அவன் மறுபடியும்.

"ம்... ஆகலாம்... ஆனால் அது அரசாங்க ஆஸ்பத்திரிதானே...? அதிகம் பணம் கேட்க மாட்டாங்க..."

''சரிங்க... இருந்தாலும் நம்ப கைல கொஞ்சமாவது பணம் வச்சுக்க வேண்டாமா... இப்ப நீங்க கொடுக்கப் போற காசை எடுத்திட்டுத்தான் நான் ஆஸ்பத்திரிக்குப் போகணும்."

நான் பதில் சொல்லவில்லை.



''நான் முல்லைக்குத் தேர் தந்ததைப் பற்றி மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?''

''உழைத்துச் சம்பாதித்துப் பணத்தில் வாங்கிய தேர் என்றால் இப்படிச் செய்திருப்பாரா என்று கேட்கிறார்கள் மன்னா!''

- ஜி. லீலா

வண்டியிலிருந்து இறங்கி பணத்தை எடுத்துக் கொடுக்கும்போது, அவன் மிகவும் சோகமாகச் சொன்னான்.

"என் மனைவிக்கு நல்லபடியா பிரசவம் ஆகணும்னு வேண்டிக்குங்க ஸார். அப்படியாவது கடவுள் மனசு இறங்கி வராரா பாப்போம்..."

நான் பணத்தை அவனிடம் எண்ணிக் கொடுத்தேன்.

அவன் சொன்ன அதே தொகைதான். அவன் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"சரி சார்.. நான் வரேன்..." என்று அவன் கிளம்புகையில் சொன்னேன்.

"ஒரு நிமிஷம்..."

அவன் ஆர்வத்துடன் என் முகத்தைப் பார்த்தான்.

"உனக்கு நன்றாகப் பேசத் தெரிந்திருக்கிறது. அழகாக நடிக்கிறாய். மூணு மாசத்துக்கு முன்னால் உன் ஆட்டோவில் உன்னுடைய இதே கதையைக் கேட்டு மனசு இறங்கி, ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து அனுப்பிச்சவன் நான். அதற்குள் உன் பெண்டாட்டிக்கு மறுபடியும் பிரசவம் ஆக வாய்ப்பு இல்லை. எனக்கு எவ்வளவு ஞாபக சக்தி உண்டோ, அந்த அளவுக்கு உனக்கு மறதி இருக்கிறது அப்பா... கடவுளுக்கு எல்லாரிடமும் கருணை இருக்கிறது. அவருக்குத் தெரியும் யாருக்கு எதை, எப்போது, எங்கே தர வேண்டுமென்று... சவாரி செய்ய வருபவர்களின் முகத்தைப் பார்த்து, தப்பாக எடை போடாதே..."

திகைத்து நின்றவனை விட்டு விட்டு, சாலையைக் கடந்து வீட்டை நோக்கி நடந்தேன்.

அருள்வாக்கு

"மற்றவர் மனம் குளிரட்டும்!"

வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பது பிறருக்கெல்லாம் உபகாரம் செய்வதற்காகத்தான். நிறையச் சம்பாதித்து அதையெல்லாம் நமக்காகவே செலவழித்துக் கொண்டால், ஸ்வாமி சந்தோஷப்பட மாட்டார். அவருக்கு நாம் எப்படிக் குழந்தையோ, அதே மாதிரி ஏழைகள், நோயாளிகள், அநாதைகள் எல்லாரும் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு நாம் உபகாரம் பண்ணாமல் நமக்கே செலவழித்துக் கொண்டால், ஸ்வாமி அதற்கப்புறம் நமக்கு அருள் செய்ய மாட்டார்.

அதனால் நீங்கள் எல்லோரும் உலகத்துக்கு உங்களால் முடிந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும். அதில் உங்களுக்கு ஒரு பெரிய சந்தோஷமும், திருப்தியும் உண்டாகும். நீங்களே சாப்பிடுவதைவிட, ஓர் ஏழைக்குச் சாப்பாடு போட்டால் அதில் உங்களுக்கு இன்னும் ஜாஸ்தி இன்பம் உண்டாகும். நாம் பிறந்திருப்பதே மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் என்று தெரியும். இப்படி உங்களால் முடிந்த உதவியைச் செய்து நீங்கள் மற்றவர்களின் மனத்தைக் குளிர வைத்தால், அதைப் பார்த்து ஸ்வாமியும் உங்களிடம் மனம் குளிர்ந்து நிரம்ப அருள் செய்வார்.

நம்மை உருட்டித் தள்ளுகிற மாதிரி பெரிய காற்று அடித்தால் தூணைப் போய் பிடித்துக் கொள்கிறோமல்லவா? அதே மாதிரி கோபம், பொறாமை முதலிய கெட்ட குணங்கள் நம்மைத் தாக்குகிறபோது, அம்மையப்பனாக இருக்கிற ஸ்வாமியை பிடித்துக் கொள்ள வேண்டும். நாம் விழாமல் அவர் காப்பார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



கைப்பேசி

9

கனிமொழி

மெத்தென்ற இருள் கவியத் துவங்கியிருந்தது...
சலசலப்புகள் அடங்கி இதமான மௌனம்.
சுடராய் விரியும் மேடையின் விளக்கு
திடுக்கிட்டுப் பதறியது அமானுஷ்ய குரல்.
எரிச்சலோடு எச்சரித்தார்கள்

கைப்பேசிகள் அடைக்கப்பட வேண்டும்.
அரங்கின் அமைதி எங்கோ சிதறிப் போனது.
கண்களை மூடி என்னுள் ஆழ்ந்தேன்.
அழைப்பு மணி சிணுங்கியது,

வண்டுகள் கர்ஜித்தன, பசித்து
அழும் குழந்தையின் குரல்,
மழையின் ஆர்ப்பரிப்பு, வாத்தியங்களின்
அவசர அழைப்புகள், அதிர்வுகள்
கண்ணினும் சிறுதாம்பாய் தொடரும் வலை.

உறக்கத்தில், துக்கத்தில்,
நெகிழ்வில், நேயத்தில்,
ரசனையில், கவிதையில்
சிறு துளிகளாய்ச் சேமித்த மௌனங்களைத்
தகர்த்து இழையும் தொடர்புகள்
இணைப்பில் பிரித்து
பிரிவில் இணைக்கும்...

ஓவியம்: மருது



ஏன்? ஏன்?

"ஏன்தான் இப்படியெல்லாம் நடக்குதோ!" என்று நம்மை நாமே ஒரு நாளைக்கு நூறுமுறை கேட்டுக்கொண்ட பிறகும் இந்தத் தத்துவக் கேள்விகளுக்கு இன்னமும் விடைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. யாராவது கண்டுபிடித்தால் தெரியப்படுத்தலாம்.

● வயிறு சரியில்லை என்று சொல்லி ஆபிஸுக்கு லீவு போட்ட அடுத்தநாள் வயிற்று வலி வரும்.

● 'உயிரே போனாலும் இந்த புரோக்ராமை மிஸ் பண்ணக்கூடாது' என்று கறுவியபடி ஜன்னல் கதவுகளைப் பூட்டி சீல் வைத்து, செல்பேசியை அணைத்துவிட்டு, கால்மேல் கால் போட்டபடி ரிமோட்டை அழுத்தும் பொழுது, பட்டென்று மின்சாரம் நின்றுபோகும். அல்லது வாசலில் பெரும் சத்தத்துடன் தண்ணீர் லாரி வந்து நிற்கும்.

● படத்தில் அதி முக்கியமான வசனங்கள் வரும் பொழுதும், க்ளைமேக்ஸ் வருவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னரும், குழந்தைகள் வீல் வீல் என்று அழுவார்கள். பால், பிஸ்கெட், பாதாம் என்று எதைக் கொடுத்தாலும் ஃபர்ஸ்ட் கியர், செகண்ட் கியர், தேர்ட் கியர் என்று சத்தத்தைக் கூட்டிக் கொண்டே போவார்கள். படம் முடிந்த மறுவிநாடியே கப்சிப்பென்று அடங்கிவிடுவார்கள். குண்டூசி போட்டால்கூட சத்தம் கேட்கும். கண்களில் சொட்டுக் கண்ணீர்கூட வராது.

● அடித்துப் பிடித்து பல்லவனில் ஏறி கர்சீப் போட்டு ஜன்னல் சீட்டைப் பிடித்து, அப்பாடா என்று காலை நீட்டி உட்கார்ந்த 28வது விநாடி, பின்பக்கத்தில் உள்ள இரண்டாவது டயர் பஞ்சராகும். உடனே சானியா மிர்சாவிடம் ஆட்டோகிராஃப் வாங்குவது போல கண்டக்டரிடம் டிக்கெட்டுக்குப் பின்புறம் கையெழுத்து வாங்க WWF ரேஞ்சிற்கு அடித்துக் கொள்ள வேண்டும். பல்லவன் வரலாற்றிலேயே டிக்கட் வாங்குவதற்கு முன்னால், இதுவரை எந்த டயரும் பஞ்சரானது கிடையாது.

● பகல் நேரத்தில் மட்டும்தான் எமர்ஜென்ஸி விளக்கு வேலை செய்யும். மின்சாரம் அவுட் ஆனால் தலைவரும் அவுட் ஆகிவிடுவார்.

● உங்கள் தெருவுக்குத் திருடன் வரும் நாள்தான் நேபாள கூர்க்கா இரண்டாவது ஆட்டம் ஜாக்கிசான் படம் பார்த்துக் கொண்டிருப்பார். மற்ற நாட்களில் உங்களைத் தூங்க விடாமல் உங்கள் வீட்டுக் கதவை லொட்டு லொட்டு என்று தட்டிக் கொண்டிருப்பார்.

● நீங்கள் கலந்து கொள்ள விரும்பும் சிறுகதைப் போட்டிக்குப் படைப்புகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி போன வாரம் புதன்கிழமை.

● கண்ணாடி மற்றும் பீங்கான் பொருள்கள் மட்டுமே கைதவறிக் கீழே விழும். இரும்பு, மரச் சாமான்கள் குத்துக் கல்லு போல ஸ்டெடியாக இருக்கும்.

● உங்களிடம் கடன் வாங்கிய ஆள் கடன் வாங்கிய கையோடு ஜூபிட்டருக்குப் பறந்துவிடுவார். நீங்கள் கடன்



ஏன்?

வாங்கிய ஆள் மட்டும் ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து தடவை உங்கள் முன்னால் பூதம் போலத் தோன்றித் தோன்றி மறைவார். எதற்கு என்று அவருக்கும் தெரியாது, உங்களுக்கும் தெரியாது.

● பீரோ சாவி காணாமல் போன மறு விநாடியே, டூப்ளிக்கேட் பீரோ சாவியும் காணாமல் போய்விடும். யாரையாவது கூட்டி வந்து கடப்பாரையால் கைப்பிடியைப் பெயர்த்து எடுத்த இரண்டு விநாடிகளில் ஒரிஜினல் சாவி கிடைத்துவிடும். அடுத்த மூன்று விநாடிகளில் டூப்ளிகேட் சாவியும் கிடைத்துவிடும்.

● சாக்ஸைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு திங்கள் கிழமையும் காலை சரியாக 9.30 மணிக்கு ஒவ்வொரு ஜோடியிலிருந்தும் ஒவ்வொரு சாக்ஸ் காணாமல் போகும். சனிக்கிழமை மாலை ஒன்றுவிடாமல் அத்தனையும் கிடைத்துவிடும். மறக்காமல் அடுத்த வாரம் திங்கள் கிழமை 9.30 மணிக்கு மறுபடியும் காணாமல் போய் விடும்.

● உங்களுக்குப் பிடிக்காத புத்தகங்களை யாருமே இரவல் கேட்க மாட்டார்கள். உங்களுக்குப் பிடித்த புத்தகங்களை யாருமே இரவல் தர மாட்டார்கள்.

● எந்த இடத்திலிருந்து பெட்ரோல் பங்க் பத்து கிலோமீட்டர் தள்ளி இருக்கிறதோ, மிகச் சரியாக அந்த இடத்தில்தான் உங்கள் டூ-வீலர் தரையைத் தேய்த்தபடி மூச்சு விட்டுக் கொண்டு நிற்கும்.

● நீங்கள் 500 ரூபாய்க்குச் சண்டை போட்டு வாங்கிய அதே பொருளை, அதேநாள் உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் 250 ரூபாய்க்கு வாங்கி வந்து முதல் வேலையாக உங்களிடம் காண்பித்துவிட்டு, உங்கள் அபிப்ராயத்தைக் கேட்பார்.

● ''இந்த ரேடியோ 25 வருஷமா பாடுது தெரியுமா!'' என்று சொல்லி 24 மணி நேரம் கழிந்த பிறகு திருகினால் அந்த ரேடியோ பாடாது.

● ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்குபவர்களுக்குத்தான் பல் சொத்தை ஏற்படும். வாரத்துக்கு ஒருமுறை பல் தேய்ப்பவர்களின் பற்கள் டாலடிக்கும்.

● 455 பக்கங்களைப் படித்து முடித்த பிறகுதான், அந்தப் புத்தகத்தில் கடைசி இரண்டு பக்கங்கள் இல்லை என்பது தெரிய வரும்.

- மருதன்

இரவு பத்தரை மணி ஆகிவிட்டிருந்தது. சலவைப் பகுதிக்குப் போய் வெள்ளைத் துணிகள் எடுத்துவர அரை மணி நேரம் பிடித்து விட்டது. சலவைப் பகுதி இரவு ஷிப்ட்டில் வருபவர்கள் எப்போதும் இதே போல்தான் ரொம்ப மெதுவாக வேலை செய்கிறார்கள். கண்காணிப்பு என்பது அறவே இல்லை. இப்போது திடீரென வெள்ளைத் துணியோ, விரிப்புத் துணியோ மார்ச்சுவரிக்கு வேண்டும் என்றால், குறைந்தது ஒரு மணி நேரம் முன்பே போய் சொல்ல வேண்டி இருக்கிறது.

கடிகாரத்தில் மீண்டும் நேரம் பார்த்தார் அஸ்வத்தையா. மாலை நேரம் வந்திருந்த உடல் அவர் மனதை ரொம்பவே பாதித்திருந்தது. சாப்பிட மனமே ஒப்பவில்லை. எட்டே வயதான சிறுவனின் உடல் அது. கணக்குப் பாடத்தில் மார்க் ரொம்பவும் குறைந்ததால் கிணற்றில் குதித்து, அட்மிட் ஆகி மூன்றே மணி நேரத்தில் உயிர் பிரிந்திருந்தது. பொதுவாக இப்படி சிறு வயது உடல்கள் வரும்போது உறவுக்காரர்களின் அழுகையும், புலம்பல் சத்தமும் அவரது நெஞ்சைப் பிழியும். வெறுமனே தூங்குவது போல் இருந்த அந்த உடலை, குளிர் சாதனப் பிணவறையில் கிடத்தியபோது நெஞ்சு விம்மியது. முப்பதாண்டுக்காலம் இதே பணி. இரவு ஷிப்டில் ஆட்கள் தட்டுப்பாடு ஏற்படுவது சகஜம் என்பதால், அஸ்வத்தையா இரவு ஷிப்ட்டை மறுக்காமல் ஏற்றுக் கொள்வதுண்டு. மனரீதியான பயமும் பதற்றமும் உடைய பல பணியாட்கள், அவரிடம் ஷிப்ட் மாறி வரக் கேட்டால் ‘உம்’ என்று ஒற்றைத் தலையசைப்பில் சம்மதித்து விடுவார். இரவில் உடல்கள் வருவது மிக அதிகமாக இராது. வராமலும் இராது. பொதுவாகத் தீக்குளிப்பு உடல்களும், விஷத்தால் மரணம் அடைந்த பெற்றோரின் உடல்களும் பிரதானம். இவை தவிர, விபத்தில் இறந்தோர். சலவைப் பிரிவில் இதன் காரணமாக இரவு ஷிப்ட் தூங்கி வழியும். சில அவசரச் சூழ்நிலைகளில் பிணவறையிலேயே சில ரத்தம் தோய்ந்த வெள்ளைத் துணிகளை, தானே துவைத்து காயப் போட்டுக் கொள்வார், அஸ்வத்தையா.

பினாயில் நெடியோடு ஜில்லிடும் அறையில் உடல்களோடு தனிமையில் இருப்பது அவருக்குப் பழகிப்போனதும் பிடித்தமானதுமான ஒன்று. அஸ்வத்தையாவுக்கு மனித வாழ்க்கையில் இறப்புக்கு என தனி இடமும், பந்தமுமே உண்டாகி விட்டிருந்தன. இறப்பின் மீது பயமும் வருத்தமும், கோபமும் தொனிக்க, தன்னைச் சுற்றி இயங்கும் உலகம் வியப்பாகத் தான் தெரிந்தது



அவருக்கு. மரணத்தை, ஒரு செடி வளர்ந்து, பூ பூக்கின்ற இயல்பாகப் பார்ப்பதில் ஒரு ஆழ்ந்த ரம்மியம். ஆவிகளின் இருப்பைச் சொல்லும் கதைகளும், படங்களும் அவருக்கு அலாதியான வாஞ்சையை ஏற்படுத்தின. காரணம், அக்கம் பக்கத்து வீட்டார் எப்போதும் தவறாமல் அவரிடம் இவை குறித்துச் செய்யும் விசாரணைகளாக இருக்கக் கூடும்.

“எதையுமே பாத்ததில்லையா?!...

ப.கா.மணிமொழியன்

நிழலின் நிஜம்

வருமாமே...? ஜல்ஜல்னு சத்தம்... அப்புறம் மோகினிச் சிரிப்பு... எதுவும் கேட்டதில்லையா? பொய் சொல்லாதீங்க ஐயா!" - அனைத்துக்கும் பொதுவானதொரு புன்னகையை பதிலாக்கிவிட்டு நகர்ந்து விடுவார்.

மார்ச்சுவரியில் எவ்வளவோ கூர்ந்து கவனித்தும், அப்படி ஏதாவதொரு சத்தமும் கேட்காதது அவருக்கும் சற்றே வருத்தம் அளித்தது.

மற்றப் பணியாட்களிடம் இது பற்றிய கதைகளை ஏராளமாகக் கேட்டிருக்கிறார் அஸ்வத்தையா. பயத்தைப் போக்கிக் கொள்ள பிராந்தி அருந்திவிட்டு சற்றே தள்ளாட்ட நடையில் பிணவறையில் பணிபுரியும் வேலையாட்களுக்கு, இரண்டு மூன்று முறை கூப்பிட்டாலே காதில் விழாது. இதில் ஆவிகளின் சத்தம் மட்டும் எப்படிக் கேட்டுவிடுகிறதோ என ஆச்சர்யமாய் இருக்கும். அவரது அப்பாவும் மது அருந்தாமல் பணி செய்ததில்லை. அது மிகுந்த அத்தியாவசியமான ஒன்றாகவே கருதப்பட்டது. மது அருந்திவிட்டு வேலை பார்ப்பது, மார்ச்சுவரிக்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட, எழுதப்படாத நியதியாக இருந்து வந்தது. உடல்களின் சொந்த பந்தங்கள் மார்ச்சுவரிக்கு வரும்போது கை நீட்டியவுடன் இதற்கான பணமும் உடனடியாகக் கிடைத்து விடுவது எளிதாயிருந்தது. மேலும், பெரிய டாக்டர்களும் கூட அதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

அஸ்வத்தையாவுக்கு மதுப் பழக்கமோ, பீடி புகைப்பதோ இல்லாததை இன்னமும் பலர் நம்ப மறுத்துவிடுவதுண்டு.


"குடிப்பாருய்யா... தெரியாம குடிப்பாருய்யா... ராத்திரி ஷிப்டுல தான மனுசன் கிடக்கறாரு... கூடிப் போனா ரெண்டு பொணம் வருமா வாரத்துக்கு?"



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005ல் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

விமர்சனங்களை, உடல்களின் கருஞ்சிவப்பு ரத்தத்தை துடைப்பது போல துடைத்துப் போட்டுவிட்டு, புத்தகமும் கையுமாக எந்நேரமும் அமர்ந்திருப்பார் அஸ்வத்தையா. இறந்த பின்பு 'பிணம்' என்று சொல்வதில் அவருக்கு உடன்பாடு இருந்ததில்லை. மனித வாழ்க்கையில் உயிருள்ள உடல், உயிரற்ற உடல் என்றே வித்தியாசப்படுத்திப் பார்த்தார். உடல்கள் வரும்போது, நெருங்கிய உறவினர்கள் அரற்றி அழுவதையும், தரையில் விழுந்து புரள்வதையும், உடலின் அப்பாவோ, கணவனோ அப்படி இல்லாமல் மௌனமாக இருப்பதையும் பார்க்க, முதலில் நெருடலாயிருந்தது. அதன் பிறகு தான் தெரிந்தது. ஆழ்ந்த அன்பும், உள்ளார்ந்த நெருக்கமும் உடைய இருவர், மரணத்தில் பிரிக்கப்பட்டுவிட்டதைக் கூட மனித மனது ஏற்க காலதாமதப்பட்டு, மௌனம் தொனிக்கிறது. பிரிவுத் துயர் தாக்கி பாடாய்ப் படுத்தும் போது, சோகக் கவிதை எழுத முடியுமா? உண்ண முடியுமா? உறங்க முடியுமா? அதைப் போல அழவும் முடியாது.

எழுதியது வரை சரியாக இருக்கிறதா என ஒரு முறை திரும்ப படித்துப் பார்த்தான் அக்னி ஜெயந்தன். கட்டுரை நன்றாக வந்திருந்தது. இன்னும் பாதிக் கட்டுரை இருக்கிறது. 'இளநிலா' பத்திரிகையின் சீஃப் ரிப்போர்ட்டர். அக்னி ஜெயந்தன் என்றாலே, 'வித்தியாசம்' என்று முத்திரை பதிக்கும் வகையில் இளநிலா பத்திரிகையில் வாராவாரம். 'நிழலின் நிஜம்' என்று தலைப்பிட்டு, வித்தியாசமான மனிதர்களைப் பேட்டி எடுத்து, சிறுகதை வடிவில் வடித்து, வாசகர்களின் ஏகபோக வரவேற்பை அள்ளிக் கொண்டிருந்தான். மார்ச்சுவரி பிணவறையில் பணி புரியும் ஒருவரைப் பற்றிய கட்டுரை என்றதுமே, வழக்கத்துக்கு அதிகமான ஈடுபாடு காட்டினான் அக்னி. பேட்டி பாதி முடிந்திருந்த தருவாயில், நேற்று அஸ்வத்தையா 'நாளைக்கு வா' என ஏன் சொன்னார் என அவனுக்குப் பிடிபடவில்லை. இருள் கவிந்த சாலையில், ஜி.எச். நோக்கி விரைந்தது அவனது பைக்.



''எங்க வீட்டுக்காரருக்கு நான் சாப்பாடு போடலைனா அவருக்குச் சாப்பிட்ட மாதிரியே இருக்காதுன்னு சொல்வார் தெரியுமா?''

''எம் புருஷன் கூட அப்படித்தான். நான் சாப்பாடு போடலைன்னா அவருக்கு சமைச்ச மாதிரியே இருக்காதுன்னு சொல்வார்!''

- ஆர்.ஆர்.பூபதி

"வாங்க பத்திரிகைத் தம்பி."

மார்ச்சுவரியின் வலப்புறத்தில் சின்ன மின்கம்பத்து டியூப் லைட் கொஞ்சம் வெளிச்சம் தந்து கொண்டிருந்தது. தூரத்து வெளிச்சம் போஸ்ட்மார்ட்டம் பிரிவின் கட்டடம்.

"ஏன் ஐயா இங்கே இவ்ளோ இருட்டு? இதே போல ட்யூப்லைட் இன்னும் இரண்டு மார்ச்சுவரி வாசலில் போடலாமே?"

"எதுக்கு?"

"நடக்கறதுக்குத் தான்"

''இங்கே இருக்கற உடல்கள் தேவையில்லாம வெளியே வர்றது இல்லை. ஆகவே லைட்டும் தேவை இல்லை!"

"பேட்டி ஆரம்பிக்கலாமா ஐயா?"

"உம்... ஆனா தம்பி... கொஞ்சம் சீக்கிரமா முடிச்சுடலாமா?... காலைல போஸ்ட் மார்ட்டமாகி இரண்டு உடல்கள் வருது. கொஞ்சம் இடவசதி பண்ணணும். ஏற்கெனவே ஒரு உடலை இடமில்லாம கீழ கிடத்தி வச்சிருக்கேன்."

"ஓ.கே... முடிச்சிடலாம் ஐயா."

"தம்பி... ஒரு சந்தேகம்... நான் சொல்றத எல்லாம் அப்படியே போட்டுடுவீங்களா

தம்பி?"

"இல்லிங்கய்யா... இந்த டேப் ரெக்கார்டர்ல முழுசா பதிஞ்சுட்டுப் போயி, கட்டுரையா எழுதிடுவேன்... ஐயா... இறப்புக்குப் பின் உள்ள அமானுஷ்ய வாழ்க்கைல நம்பிக்கை உண்டா?"

"இறப்புக்கு முன் உள்ள வாழ்க்கையைப் போலவே இதையும் நம்பறேன்... ஆனா ஆவி, பேய்கள்னு சொல்லப்படற பயமுறுத்தல்கள் எல்லாம் எனக்கு நிகழல..."

"திரும்பவும் கேக்கறதுக்கு மன்னிக்கணும்... இந்தக் காலடிச் சத்தம்... சிரிப்புச் சத்தம்... இப்படி ஏதாவது....?"

"இதுவரை அப்படி ஏதும் நேர்ந்ததாய்த் தெரியல..."

"நீங்க இங்கே பேசறதே ரொம்பக் குறைவுன்னு சொல்றாங்களே?... ஏன் நீங்க அதிகமா பேச மாட்டீங்களா?"

"உங்க தொழிலுக்கு நிறையப் பேசணும்... கேக்கணும்... என்னோட வேலைக்கு நிறையப் பாக்கணும்... கிரகிக்கணும்...!"

"நிறையப் படிப்பீங்களா?"

"........"

"என்னவெல்லாம் படிப்பீங்க?"

"எல்லாம்"

"இந்த வேலைய விட்டுடலாம்னு எப்போவாவது நெனச்சதுண்டா?"

"ஊஹூம்..."

"ஏன்...?"

"அப்படித் தோணல..."

"யாரும் உங்கள இத விட்டுடச் சொல்லி கட்டாயப்படுத்தலயா?"

"....ம்..... அப்போ அவ... இப்போ என் தம்பி.."

"ஐயா... 'அவ'னு நீங்க குறிப்பிடுறது...?"

"பாவப்பட்ட ஒருத்தி.... என்னை விரும்பின ஒருத்தி..."

"அப்புறம் ஏன் ஐயா கல்யாணம் செய்துக்கல?"

"அப்போ தோணல... அவ போன பிறகு எல்லாம் போயிடுச்சு!"


"போன பிறகுன்னா...?"

"நான் குடி இருக்கும் வீட்டின் சொந்தக்காரர் அரசியல்வாதி போல நடந்துக்கறார்"

"என்ன செய்யறார்?"

"டீசல், பெட்ரோல் விலை ஏறிட்டதால வாடகையை நூறு ரூபாய் உயர்த்திட்டாரே!"

- லலிதா செல்லப்பா




"அவ இறந்து போயிட்டா தம்பி..."

தனது சிவப்புத் துண்டால் முகம் ஒற்றிக் கொண்டார் அஸ்வத்தையா. கண்களில் அரும்பிய கண்ணீரை மறைக்கவோ, துடைத்துக் கொள்ளவோ எத்தனிக்காமல், அக்னியை வெறித்துப் பார்த்தார். கண்ணீர் வழிந்தது.

"அவங்க யாருய்யா... எப்படி இறந்தாங்க?"

"லட்சுமி.... அவளோட முக்கியத்துவம் எனக்கு அப்போ புரியல... அவளோட இழப்பு அவ போன பிறகு தான் தெரிஞ்சுது... அவள நான் ரொம்ப உதாசினப்படுத்தினேன். அவ என்னை ரொம்ப நேசிச்சா...

"இந்த வேலை வேணாம்... விட்டுரு மாமா... நாம எதுனா தொழில் செஞ்சு பொழைச்சுக்கலாம்... என்னை கல்யாணம் பண்ணிக்க மாமா"னு காலில் விழுந்து கெஞ்சினா... இதோ... இதோ... இந்த இடத்துல தெனம் தெனம் வந்து என்கிட்ட அழுது கெஞ்சுவா... வேற ஒருத்தனக் கட்டிக்க அவ அப்பா நிர்ப்பந்திச்சதுல, மனசு ஒடைஞ்சு போயிட்டா... "கடைசியா சொல்றேன் மாமா... இனி என்னை பொணமாத்தான் பாப்பேன்"னு அழுதுட்டுப் போனா இருபத்தி மூணு வருஷத்துக்கு முன்னாடி, இதே நாள்ல, இதே இடத்துல..."



Mr.மெட்ராஸ்

அஸ்வத்தையா தரையில் இரண்டு கைகளையும் தேய்த்து, முகத்தில் அப்பிக் கொண்டு, சன்னமான குரலில் பேச முயன்று தோற்று, குலுங்கிக் குலுங்கி அழ, இதை சற்றும் எதிர்பாராத அக்னி பதை பதைத்துப் போனான்.

"ஐயா... ஐயா..."

அக்னியைக் கையமர்த்திவிட்டு, சற்றே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றவராகத் தொடர்ந்தார்.

"அவளை இதே கைகளால, மார்ச்சுவரில கிடத்தின பாவி நான். பாவி மக... அரளி விதையை அரைச்சுக் குடிச்சுட்டு செத்துப் போயிட்டா..."

மீண்டும் குலுங்கி அழுதவரை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அக்னி.

"ரொம்ப வருஷத்துக்கு அப்புறமா இன்னிக்கு அழறேன்... மனசு விட்டுப் பேசி அழறேன்... எனக்குள்ளேயே மூடி வச்சிட்டு இருந்தது எல்லாம் கொட்டி அழறேன் தம்பீ... தம்பீ... இந்த வேலை பாக்கற ஒருத்தன பேட்டி எடுக்கணும்னு நீங்க வந்ததுக்குக் காரணம், இது ஒரு பயங்கரமான வேலை... யாரும் சுலபமா செய்ய முடியாது... பத்தாயிரம் இருபதாயிரம்னு குடுத்தாலும் ஒத்துக்க முடியாது... ஏன்... கனவுலயே நெனச்சுப் பாக்க முடியாத வேலை... உயிரற்ற உடல்களைக் கிடத்தி, காவல் இருந்து... அதுங்களோட தனி அறைல இருக்கறதெல்லாம் பயங்கரமானதா, திகிலானதா தெரிஞ்சு... இதைப் பத்தி இன்னும் திகிலா பத்திரிகைல எழுதுறதால, வித்தியாசமா உங்களைக் காட்டிக்க நீங்க நெனச்சுருக்கலாம்... தம்பி... உண்மையான திகிலும் பயங்கரமும் இது இல்லப்பா..."

"............"

"வாழ்க்கைல உறவுகள் பலம்... வாழ்க்கைத் துணை பக்கபலம்... இந்த உறவுகளைத் தேடறதுல ஜெயிச்சு, நிம்மதியைத் தேடி அலைஞ்சு, மத்தவங்க எதிர்பார்ப்புகளை எல்லாம் பூர்த்தி பண்ணி, மனசு லயிச்சு, உண்மையோட வாழ ஆசைப்பட்டு... எதிர்பாராம... உறவுகள்ல ஏற்படற ஏமாற்றங்கள், தோல்விகள் தான் பயங்கரமானவை... மனசு ஏங்கி ஏங்கி உள்ளே அழுது தவிக்க, அதை மறைச்சு சந்தோஷமானவங்களா நம்மள நாமே காட்டிக்கிற சூழல்கள்தான் படுபயங்கரம்... மற்றபடி மரணம்.... சும்மா... ஒண்ணுமில்லாத விஷயம்... நிர்கதி இதுதான்... பிறப்பு போலவே இதுவும் ஒரு சந்தோஷம் தர்ற விஷயம்... ரொம்ப நன்றி தம்பி.... எனக்கு வேலையிருக்கு..."

எழுந்து மெதுவான நடையில் மார்ச்சுவரி அறையை நோக்கிப் போன அஸ்வத்தையாவையே பார்த்துக் கொண்டிருந்தான் அக்னி ஜெயந்தன். அந்த கனமான மௌன இரவின் நிசப்தத்தை, புரியாமல் பதிந்து கொண்டிருந்தது அவனது டேப்ரெக்கார்டர்.

நடக்குமென்பார்; நடக்கும்!



தஞ்சை பரத்வாஜ்

மேஷம்:

மேன்மை ஆன வாரம். தொட்டது துலங்கும். முயற்சிக்கும் காரியத்தில் வெற்றி கிடைக்கும். திருமணக் காரியம் கைகூடும். கலைஞர்களுக்கு பொற்காலம். வீடு, வாசல், மனை வாங்கலாம். புதிய தொழில் துவங்கலாம். இதுநாள் வரை தடங்கலாகி வந்த காரியம் கைகூடும். வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும். ஆஞ்சநேயர் காயத்ரி படித்து வரவும்.

ரிஷபம்:

நற்பலனை அளிக்கும் வாரம். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். நெருங்கிய உறவினர்/ நண்பர்களுடன் மனக்கசப்பு வரலாம். கூட்டுத் தொழில் செய்பவர்கள் பார்த்து நடந்து கொள்ளவும். வியாபாரத்தில் முன்னேற்றம் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாணவ மாணவிகள் படிப்பில் கவனம் தேவை. ராகு/கேது/குரு வழிபாடு அவசியம்.

மிதுனம்:

மன அமைதி தரும் வாரம். திருமணம் ஆகாமல் தடைப்பட்டு வந்த ஆண், பெண்களுக்கு திருமணம் நடக்கும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். வீடு/மனை வாங்கலாம். உத்தியோகத்தில் பணி உயர்வு, இடமாற்றம் ஏற்படும். தாயார் உடல் நிலையில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு சிரமங்கள் குறையும். ராகு/கேது

28.09.2005 முதல் 04.10.2005 வரை

நான் சொந்தத் தொழில் செய்யலாமா? வெளிநாட்டு வாய்ப்பு அமையுமா? திருமணம் எப்போது நடக்கும்? - கே. சத்தியமூர்த்தி, விருதுநகர்

ஜாதகப்படி உங்களுக்குச் சொந்தத் தொழில் சாதகமானதல்ல. வெளிநாட்டுப் பணிக்கு முயல்வது நன்மை தரும். புத்தியால் பிழைக்கும் ஆற்றல் உள்ளது. சர்ப்பதோஷம் உள்ள பெண்ணாகப் பார்க்கவும். ஓராண்டில் திருமணம் முடியும். உறவில் அமையாது. திருமணத்துக்குப் பின் நல்ல முன்னேற்றம் கூடும்.

என் இரண்டாவது மகனுக்கு வெளிநாட்டுப் பணி கிடைக்கும் வாய்ப்பு உண்டா? திருமணம் எப்போது? - எஸ். ராமஸ்வாமி, மதுரை

உங்கள் மகனுக்கு தற்போது சந்திர தசை நடப்பதால், வெளிநாட்டு வேலைக்கு முயற்சி செய்வது நல்ல பலன் தரும். திருமணக் காலம் அக்டோபர் 2005ல் தொடங்குகிறது. சர்ப்பதோஷம் உள்ள ஜாதகமாகச் சேர்க்கவும். தெற்கு/ மேற்கு திசையிலிருந்து, ஒரே உடன்பிறந்தவர் உள்ள, ரயில் மார்க்கத்தின் அருகே வசிக்கும் பெண் அமையும்.

நான் காதல் திருமணம் செய்துகொண்டேன். என் பெற்றோர் ஏராளமாய் பணம் வைத்திருந்ததாலும், நாங்கள் கடுமையாக உழைத்தே ஜீவிக்க வேண்டியுள்ளது. எனக்கு பெற்றோரின் சொத்தில் பங்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். கிடைக்குமா? - ஆர். வாணி, சென்னை - 14

ஜாதகப்படி உங்களுக்கு 31 வயது வரை ராகு தசை. அதன்பின் குரு தசை வரும்

வழிபடுதல் நலம்.

கடகம்:

மதிப்பு, மரியாதை, புகழ், கீர்த்தி கிட்டும். வீடு மாற்றம், தொழில் மாற்றம் கிட்டும். குழந்தைகள் வழியில் சுப காரியங்கள் நடக்கும். வியாபாரிகளுக்கு இருந்த மந்தநிலை மாறும். சிலருக்கு வெளிதேசம் செல்ல நேரிடும். சனி/ குரு வழிபாடு செய்து வருதல் நலம்.

சிம்மம்:

யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. கணவன் - மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உடைமைகள் மீது கவனம் அவசியம். வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வருதல் நலம். சுந்தர காண்டம் படித்து வரவும்.

கன்னி:

நல்ல காரியம் நடக்கும். வீடு, வாகனம் வாங்க ஏற்ற காலம். தடைப்பட்டிருந்த திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகஸ்தர்கள் மேன்மை அடைவார்கள். குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். வியாபாரிகள் நற்பலனை அடைவார்கள். புதிய தொழில் துவங்கலாம். ராகு/கேது வழிபடுதல் நலம்.

துலாம்:


வெற்றி தரும் வாரம். சத்ரு தொல்லை விலகும். முயற்சிக்கும் காரியம் வெற்றி அளிக்கும். புதிய வேலை கிடைக்கும். திருமணக் காரியம் கைகூடும். வியாபாரம் நன்றாகச் சூடு பிடிக்கும். சனி/குரு வழிபாடு அவசியம்.

விருச்சிகம்:

போட்டிகளில் வெற்றி கிட்டும். முயற்சி செய்யும் காரியம் இனிது நடக்கும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். குடும்பத்தில் சுபகாரிய பேச்சுவார்த்தை நடக்கும். மனக் குழப்பம் தீரும். சுப விரயம் ஏற்படும். வீடு/மனை வாங்க





பரத்வாஜ் பதில்கள்

போது பூர்விகச் சொத்து கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. வெள்ளிதோறும் ராகுவுக்கு தீபம் ஏற்றி வழிபடவும். நன்மை கிட்டும்.

என் மகளுக்கு 31 வயது ஆகிறது. எத்தனை பரிகாரங்கள் செய்தும், பலமுறை முயன்றும் திருமணம் கைகூடவில்லை. அவளுக்கு எப்போது திருமணம் கைகூடும்?

-ஆர்.வி. ரமணி, பெங்களூர்

உங்கள் மகளுக்கு நவம்பர் 2005க்குப் பின் சந்திரதசை தொடங்குகிறது. அதன்பின் திருமணம் கைகூடும். தெற்கு/கிழக்கு திசையிலிருந்து, உடன்பிறந்தவர் ஒருவர் உள்ள, மேற்கு பார்த்த வீட்டில் வசிக்கும், படித்து நல்ல வேலையில் உள்ள வரனாக அமையும். பரிகாரம் தேவையில்லை.

எனக்கு 75 வயதாகிறது. ரிடையர் ஆனபின்னும் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். மீண்டும் வேலை கிடைக்குமா? பெங்களூரில் போய் செட்டிலாக விரும்புகிறேன். அதனால் நன்மை கிடைக்குமா? **- ஜி. சேஷாத்ரி, சென்னை - 41**

உங்களுக்கு சூரியதசை தொடங்கிவிட்டதால் இனி வேலை செய்யும் வாய்ப்பு இல்லை. சூரிய தசை முடிந்தபின் பெங்களூரில் செட்டில் ஆவது நன்மை தரும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. ஆதித்ய ஹிருதயம் படித்து வந்தால் நன்மைகள் சேரும்.

லாம். சிலர் அந்நிய தேசம் செல்வார்கள். ராகு/குரு/கேது வழிபடுதல் நலம்.

தனுசு:

அற்புதமான வாரம். புதிய வேலை வாய்ப்புகள் வீட்டுக் கதவைத் தட்டும். புதிய தொழில் செய்ய ஏற்ற நேரம். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு, பணி மாற்றம் வரும். வீடு, மனை வாங்கலாம். குழந்தைகள் வழியில் சுப காரியம் நடக்கும். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் கிட்டும். ராகு/கேது/சனி வழிபாடு நலம்.

மகரம்:






நற்பலனை அளிக்கும். எடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நிறைவேறும். சிலருக்கு தூர தேச அழைப்பு வரும். வியாபாரிகள் ஏற்றம் காண்பர். திருமணக் காரியம் கைகூடும். கலைஞர்களுக்கு மேன்மை ஏற்படும். குரு/சனி வழிபடுதல் நலம்.


கும்பம்:

வழக்கு வியாஜ்ஜியம் வெற்றி பெறும். புதிய பணி கிடைக்கும். தூர தேசப் பிரயாணம் போகும்படி இருக்கும். பண வருவாய் பெருகும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும். திருமணம் கைகூடும். வீடு வாங்க ஏற்ற காலம். உணவுக் கட்டுப்பாடு அவசியம். வாக்குவாதம் வேண்டாம். ராகு/கேது வழிபடுதல் நலம்.

மீனம்:

நன்மையும் தீமையும் கலந்த வாரம். எதிலும் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. திருமணக் காரியம் கைகூடும். வியாபாரிகளுக்கு தொழில் முன்னேற்றம் கிட்டும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. கைப்பொருள்மீது கவனம் தேவை. ராகு/கேது/குரு வழிபடுதல் நலம்.

சாலை நடுவே இறந்து கிடந்த எலியை நோக்கிப் பறந்து வந்தது காக்கை. அப்போது அதன் பார்வை, கோலத்தில் உள்ள அரிசிமாவைச் சுவைத்துக் கொண்டிருந்த எறும்பின் மீது விழுந்தது. அழகான கோலத்தின் கோடுகள் நடுநடுவே மறைந்து கொண்டிருந்தன.

காக்கை கண்டித்தது. "அழகுணர்ச்சி இல்லாத ஜென்மம்" என்றது.

எறும்பு காக்கையை ஏளனமாகப் பார்த்தது.

"என்ன பார்க்கிறாய்? இதைக் கூற எனக்கென்ன தகுதி என்றா? சாலையில் உள்ள பல அசுத்தங்களை உண்ணுவதால், நகரின் சுத்தத்துக்கும் அழகுக்கும் நானும் ஒரு காவலன்தான். எனவே தகுதி எனக்குண்டு."

எறும்பு நகைத்தது. "நீ செத்த எலியை அகற்றுவது ஏன்? நான் கோலத்தின் கோடுகளை மறையச் செய்வது ஏன்? அடிப்படை ஒன்றுதானே?"


'உணவுக்கும் உயிர்வாழ்தலுக்கும் பிறகுதான் அழகுணர்ச்சி' என்பதை அந்தக் கறுப்புப் பட்சி சற்றுத் தாமதமாகவேனும் உணர்ந்து கொண்டது.

அருண் சரண்யா

வாசலில் பெருத்த ஒலியுடன் ஒரு மோட்டார்பைக் வந்து நின்றது.

"இந்த வீடுதான்னு சொன்னாங்க... டாக்டர் இப்போ இருப்பாரா? ஐயோ, நான் இப்ப என்ன பண்ணுவேன்?" யாரோ ஒரு பெண்ணின் கலவரக் குரல் கேட்டது.

வாசலை நோக்கி விரைந்தாள் அனுஷா. பைக்கை ஓட்டி வந்தவன் அதை முழுவதுமாக நிறுத்துவதற்கு முன்பாகவே இறங்கிவிட்டிருந்தாள்



விலங்குகள்

அவன் மனைவி. அவள் கையிலிருந்த ஐந்து வயதுக் குழந்தை துவண்டிருந்தது.

"இது டாக்டர் வீடுன்னு சொன்னாங்களே?" ஆமோதிப்பாகத் தலையசைத்தாள் அனுஷா.


வந்தவள் தன் தலைமுடியை அவசரத்தில் ஏனோதானோவென்று அள்ளி முடிந்து கொண்டிருந்தாள். ரவிக்கைக்குச் சற்றும் பொருந்தா வண்ணத்தில் புடைவையும், அதை அவள் அணிந்திருந்த நேர்த்தியின்மையும் கூட அவளது அவசரத்தை உணர்த்தின.

இதற்குள் வண்டியை ஸ்டாண்டு போட்டுவிட்டு, அவள் கணவனும் வந்து விட்டான்.

"டாக்டர் எங்கே? எங்க குழந்தையை பாம்பு கடிச்சிருச்சு."

அவர்களது அவசரம் அனுஷாவுக்கும் தொற்றிக் கொண்டது. ராஜனுக்கு இதுபோன்ற அவசரங்களுக்கான முதல் உதவிகள் தெரிந்திருக்கும். உடனடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்க வேண்டும்.

"ஒரு நிமிஷம் அப்படி உக்காருங்க. டாக்டர் ஜூவுக்குப் போயிருக்கார். போன் பண்ணிக் கேட்கிறேன். இங்கே வருவாரா, இல்லை குழந்தையை அங்கே அழைச்சுக்கிட்டு



5

உளவியல் தொடர்கதை

வரணுமான்னு."

வந்தவனின் முகத்தில் திகைப்பு. "ஜூவுக்கா? .... அப்படின்னா அவர் மிருக வைத்தியரா?"

ஆம் என்று தலையசைத்தபோது ஏனோ ஒருவித சங்கடம் உண்டானது அனுஷாவுக்கு.

"இதை முதல்லியே சொல்லியிருக்கக் கூடாதா? வா பாமா. வேறே நிஜ டாக்டரைப் பார்க்கலாம்"

அடுத்த நிமிடம் மோட்டர் பைக் கிளப்பப்பட, "சே. இப்படி அரையும் குறையுமா விவரம் சொல்லி அலைய விட்டுட்டாங்களே" என்ற அப்பெண்மணியின் குரல் தேய்ந்து மறைந்தது.

அனுஷா திகைத்தாள். அவள் மனதில் வெறுமை பரவத் தொடங்கியது. எதிரிலிருந்து நாளிதழில் மூன்றாம் பக்கத்தில் வெளியாகியிருந்த செய்தி அவள் கண்ணில் பட்டது. முதல் மூன்று முறை படித்தபோது உண்டான மகிழ்வு இப்போது இல்லை. பைக்கில் வந்த அந்தத் தம்பதி மகிழ்வைக் கலைத்துப் போட்டு விட்டனரோ?

காலை ஐந்தரை மணிக்கே ஸ்ரீயிடமிருந்து தொலைபேசி அழைப்பு.

"அக்கா இன்னிய பேப்பரிலே ஹிண்டுவிலே மூணாவது பேஜைப் பாரு. இவரைப் பற்றிய செய்தி வந்திருக்கு... ஐயோ, கொஞ்ச நேரம் என்னை விடுங்களேன். அக்காவுக்கு விஷயத்தைக் கூட சொல்லவிடாமல்... ஒண்ணுமில்லக்கா. நீ பேப்பரைப் பாரு. அப்புறமா பேசறேன்." மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டு விட்டது.

அப்படி என்ன செய்தி? ஆறரை மணிக்கு மேல்தான் இங்கு செய்தித்தாள் வீசப்படும்.

"என்னங்க, கொஞ்சம் எழுந்திருங்க."

நான்கு முறை உரத்துக் குரல் கொடுத்த பின் ராஜன் எழுந்தான்.

"ரொம்ப அசந்து தூங்கிட்டீங்களா?"

"இல்லை அனு. நீ முதல் தடவை குரல் கொடுத்தபோதே முழிச்சுக்கிட்டேன். ஒருவேளை என்னை உலுக்கி எழுப்புவியோன்னு ஒரு சின்ன எதிர்பார்ப்பு, அவ்வளவுதான்."

அனுஷாவுக்குள் ஓர் உறுத்தல் முகிழ்த்தது. சின்ன எதிர்பார்ப்பா? மனைவியின் மற்றும் மனைவியைத் தீண்டல் என்பது திருமண வாழ்வின் அடிப்படை உரிமை மற்றும் உல்லாசம்தானே! அதைக்கூட இவருக்கு அளிக்காமல் இருக்கிறேன்... ஆனால் அதற்கு நானா காரணம்?

"எதுக்கு அனு இப்ப எழுப்பினே? முதல்ல அதைச் சொல்லு!"

சொன்னாள். அவனுக்கும் பரபரப்பு ஏற்பட்டது. "எதுக்காக இந்த ஸ்ரீ சஸ்பென்ஸ் வைக்கணும்? இரு, நானே கார்த்திக்குக்கு போன் போட்டு தெரிஞ்சுக்கிறேன்."

"வேணாம் வேணாம். அவளுக்கே இவ்வளவு அழுத்தம்னா, அவளை விட மூத்தவளான எனக்கு எவ்வளவு அழுத்தம் இருக்கணும்? பேப்பரைப் படிச்சே தெரிஞ்சுக்குவோம்."

தடுத்ததற்கு வேறு ஒரு காரணம் இருந்தது. ஸ்ரீயின் காலைத் தொலைபேசியின் அழைப்பினூடே புலப்பட்டிருந்த மற்றொரு தகவல். தங்கையும் அவள்



"என்னோட புதிய வீட்டுக்குப் பெயர் வைக்க தலைவரைக் கூப்பிட்டது தப்பாப் போச்சு!"

"ஏங்க?"

"'பொறம்போக்கு இல்லம்'னு பெயர் வெச்சுட்டார்!"

- யமுனா ரெங்கநாதன்

கணவனும் அந்தரங்கமாக இருக்கும் போது, எதற்காக இடையூறு செய்ய வேண்டும்?

வாசலிலேயே காத்திருந்து நாளிதழை வாங்கிக் கொண்டாள். மூன்றாம் பக்கத்தில் கட்டம் கட்டி அந்தச் செய்தி வெளியாகி இருந்தது. இதய அறுவை சிகிச்சை ஒன்றை வெற்றிகரமாகச் செய்து முடித்திருந்தான் டாக்டர் கார்த்திக். கொஞ்சம் சிக்கலான அறுவை சிகிச்சைதான். போதாக்குறைக்கு பாதி அறுவை சிகிச்சையில் எதிர்பாராத சிக்கல்களும் ஏற்பட, அவற்றையும் திறமையாகக் கையாண்டு வென்றிருக்கிறான் கார்த்திக். இதையெல்லாம் விட, சம்பந்தப்பட்ட நோயாளி ஒரு வி.ஐ.பி. பிறகென்ன?- அந்தப் பிரபலமும் கார்த்திக்கும் சேர்ந்திருக்கும் புகைப்படமும் செய்தியோடு வெளியாகி இருந்தது.

ராஜனுக்கும் இந்தச் செய்தியைப் படித்ததும் சந்தோஷம் தாங்கவில்லை. "சாயந்திரம் நாம நேரே போய் பாராட்டலாமா?... அல்லது ஒரு வேளை அவங்களே இங்கே வருவாங்களா?"

தான் தொலைபேசியில் இதைக் கேட்டு வைப்பதாக அனுஷா கூற, ராஜன் கிளம்பிச் சென்று விட்டான்.

இப்போது பாம்புக்கடிக்காக வந்தவர்கள் சென்றுவிட்டிருக்க, மீண்டும் அனுஷாவின் பார்வை செய்தித்தாளின் மீது பதிந்தது. 'என்ன இருந்தாலும் பழக்கமான டாக்டர்களை விட, விலங்கு நல டாக்டர்களை சமூகம் ஒருபடி குறைவாகத்தான் கருதுகிறது.'

அனுஷாவின் மனதில் புதியதொரு ஏமாற்றம் வாசம் செய்யத் தொடங்கியது.

கடிகாரத்தைப் பார்த்தாள். இன்னேரம் கார்த்திக் மருத்துவமனைக்குக் கிளம்பி இருப்பான். தங்கையைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

"ஸ்ரீ, பேப்பர் பார்த்தேன். ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இவரும் பாராட்டைத் தெரிவிக்கச் சொன்னார்."

''தாங்ஸ்க்கா. எல்லாம் உங்க நல்லெண்ணமும் ஆசியும்தான்.'' ஸ்ரீலதாவின் குரலில் நெகிழ்வு.

''சாயந்திரம் நானும் ராஜனும் அங்கே வரலாம்னு இருக்கோம்.''

மறுமுனையில் ஒரு சிறு தயக்கம். பிறகு "வாங்களேன்'' என்ற ஒற்றை வார்த்தை.

அந்தத் தயக்கம் எதையோ உணர்த்துவதுபோல் இருந்தது. ஒருவேளை தங்கள் மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், ஸ்ரீயும் கார்த்திக்குமே அன்று தங்கள் வீட்டுக்கு வருவதாக இருந்தார்களோ?

"ஸ்ரீ, ஒருவேளை நீங்க ரெண்டுபேரும் இன்னிக்கு இங்கே வருவதாக இருந்தீங்களா? நான் ஏதோ சொல்லி உங்க திட்டத்தை மாற்றிட்டேனா?"

"அவர் ரொம்ப பிஸிக்கா. சாயந்திரம் முழுவதும் க்ளினிக்கிலேயே நேரம் போய்விடும்''

"அப்ப நீ என்ன செய்யப்போறே? இங்கே வாயேன். கொஞ்சம் மனம் விட்டுப் பேசலாம்''

"அது முடியாதுக்கா''

"ஏன் முடியாது?''

கொஞ்சம் மௌனம். பிறகு மெலிந்த குரலில், "இவருக்கு அதெல்லாம் பிடிக்கலேக்கா'' என்றாள்.

(தொடரும்)

''வன்முறைல தனக்கு நம்பிக்கை கிடையாதுன்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே...ஏன்?''

''அவர் வச்சுருக்கற கூலிப்படை வேற கட்சிகளுக்கும் வாடகைக்குப் போறதால அப்படிச் சொல்லிருப்பார்!''

- அம்பை தேவா



"காற்றோட்டமா

"இந்தியாவிலேயே காதலுக்கு மரியாதை தர்ற ஒரே கவர்மெண்ட் நம்ம அம்மா கவர்மெண்டு மட்டுந்தான்" - அட, இது என்னப்பா விவகாரமான டயலாக்கா இருக்கேன்னு பார்க்கறீங்களா...? அது வேற ஒண்ணுமில்லே... ஸ்டாலின் மேயரா இருந்தப்போ 'சிங்காரச் சென்னை'ன்ற பேர்ல ஏகப்பட்ட பாலங்களைக் கட்டி, ரொம்ப ஷோக்கா வைச்சிருந்தாருல்ல...? அதே மாதிரி நம்ம அம்மா, 'எழில்மிகு சென்னை', 'என்றென்றும் சென்னை' அந்தச் சென்னை, இந்தச் சென்னைன்னு என்னென்னமோ பேர் வச்சு, சென்னையை தனக்குப் பிடிச்ச பச்சைக் கலர்ல மாத்திக்கிட்டு, அதாம்பா... பசுமையா மாத்திக்கிட்டு வர்றாங்க.

இதுக்காக அம்மா என்ன பண்ணினாங்க தெரியுமா? சென்னை மாநகராட்சி மூலமா சென்னை முழுக்க ஏகப்பட்ட பூங்காக்களை உருவாக்க ஆரம்பிச்சாங்க. அதனால இப்போ சென்னை முழுக்க கிட்டத்தட்ட 285 பார்க்குங்க செம போஷாக்கா இருக்குங்க... ஆனா இதுல சிக்கல் என்னன்னா, அம்மா அதை திறப்புவிழா பண்ணணும்ல? அது ஆகஸ்டு மாசம் 17ம் தேதி அன்னிக்கு நடத்தறா இருந்தது. திடீர்னு கேன்சல் ஆகி, அப்புறம் இந்த மாசம் 12ம் தேதி தெறக்கறதா இருந்து, அதுவும் கேன்சல் ஆகி... ஒரு வழியா அதுல முப்பதை மட்டும் போனவாரம் அம்மா தொறந்து வச்சுட்டாங்க.

எப்படியோ ஏகப்பட்ட பூங்காக்கள் வந்து சென்னையைப் பசுமையாக்கினா சரின்னுட்டு, அம்மா தொறந்து வச்ச சில பார்க்குகளை ஒரு விசிட் அடிச்சுட்டு வந்தேன். சும்மா சொல்லக் கூடாதுப்பா, அவ்ளோ அழகா, பசுமையா, கண்ணுக்குக் குளிர்ச்சியா உருவாக்கியிருக்காங்க. அதுலயும் இந்த நேரு பூங்கா, நுங்கம் பாக்கம் சுதந்திரதினப் பூங்கா, ஹாடோஸ் ரோடு பூங்கா, மெரீனா பீச் பூங்கான்னு ஒவ்வொண்ணும் பார்த்துப் பார்த்து செய்திருக்காங்க.

அழகா உட்கார்ந்து காத்து வாங்க இரும்பு சாய்வு பெஞ்சு, நீர்வீழ்ச்சி, பச்சைப் பசேல் புல்தரை, வயசானவங்க வாக் பண்ண சிமெண்ட் தரை, எக்சர்சைஸ் பண்ண தனி





விசிட்

இடம்னு எல்லாமே ரொம்ப நல்லா இருக்கு. அங்க பயன்படுத்தற தண்ணி கூட வேஸ்ட் வாட்டர்ல இருந்து சுத்திகரிச்சு எடுத்ததுதானாம். அதுமட்டுமில்லாம, அக்கம் பக்கத்து வீடுகள்ல இருந்து வர்ற கழிவு நீரைக்கூட சுத்திகரிச்சு பயன்படுத்தற ஐடியா இருக்குதாம்.

ஆமா, இன்ட்ரோவுல ஏதோ காதலுக்கு மரியாதை... அது... இதுன்னு பெரிசா பில்ட்-அப் கொடுத்தியே, அதைச் சொல்லுங்கறீங்களா...?

வெயிட்...வெயிட்...

எப்பவுமே பார்க்குன்னாலே லவ்வர்ஸ் வர்றதும் போறதும் சகஜம்தானே? முன்னால சிட்டில நிறைய பார்க்குங்க கிடையாது. அதனால லவ்வர்ஸ் பெரும் பாலும் தியேட்டர்லயே முடங்கிக் கிடந் தாங்க. இப்போ அம்மா புண்ணியத்துல நிறைய பார்க்குகள் வந்துட்டதால, இனிமே அவங்க காத்தோட்டமா லவ் பண்ணலாம்னு சில பேர் நேரு பார்க்ல உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தாங்க. அதைத் தான் 'காதலுக்கு மரியாதை'ன்னு பில்டப் கொடுத்தேன்.

சுதந்திர தினப் பூங்காவுல வந்து எதுனா மேட்டர் தேறுதான்னு காதைத் தீட்டிக்கிட்டு உட்கார்ந்தேன். கரெக்டா என் பக்கத்துல உட்காராம, தூரத்துல ரெண்டு மிடில் ஏஜ் ஆளுங்க வந்து உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தாங்க. அதைச் சொல்லலன்னா உங்களுக்குத் தலை வெடிச்சுடும். அதனால சொல்றேன்.

"ஏன் சார்... என்ன இப்படி பார்க் அது இதுன்னு சென்னைக்கு ஸ்பெஷல் கவனிப்பு...?"

"ஆமா சார்... எலெக்ஷன் வருது... ஏகப்பட்ட சலுகை களைக் கொடுத்து ஏழை ஜனங் களையும், கிராமத்து ஆட்களையும் கரெக்ட் பண்ணிட்டாங்க. ஆனா சிட்டி ஆளுங்களுக்கு இந்த மாதிரி எது கொடுத்தாலும் அசர மாட் டாங்க. அவங்களுக்குத் தேவை ஜாலியான லைஃப். அதுக்கு இந்த மாதிரி பார்க்கு பீச்சுன்னு ஏதாவது பண்ணிக் குடுத்தா போதும்... அதான் இப்படி..."

- ஒற்றன்

படங்கள்: கோகிலா

காதலிக்கலாம்!"





அமரர் கல்கி

"வரணும், வரணும்!"

அதற்கு முன்னாலெல்லாம் ராஜா ஸர் அவர்களைப் பற்றி என் அபிப்பிராயம் ஒருவிதமாயிருந்தது. சுருங்கச் சொன்னால், சில சமயம் அவரைப் புலி - சிங்கம் என்றும், வேறு சில சமயம் ராட்சதன் - போட்சதன் என்றும் நினைத்திருந்தேன். ராஜா சர் அவர்கள் எப்பொழுதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பிலேயே இருந்து வந்தவர்கள். ராவ் பகதூரிலிருந்து படிப்படியாக ராஜா ஸர் ஆனவர்கள். அதோடு மட்டுமல்லாமல், ராஜா ஸர் அவர்கள் தம்முடைய விரோதிகளை அதாஹதம் செய்துவிடுவார்கள் என்றும் ஒரு வதந்தி பரவியிருந்தது.

எனவே கொஞ்சம் தயக்கத்துடனேயே அவர்களை நெருங்கிச் சென்றேன்.

"தமிழிசையைப்பற்றி நீங்கள் எழுதியிருந்ததைப் படித்தேன். ரொம்ப சந்தோஷம்!" என்று வெகு சாத்வீகமான குரலில் ராஜா ஸர் சொன்னார்கள்.

"எனக்கும் ரொம்ப சந்தோஷந்தான். தாங்கள் தமிழிசை இயக்கம் ஆரம்பிப்பதற்கு ஏழெட்டு வருஷம் முன்னாலிருந்தே நான் தமிழிசையைப் பற்றி எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

ராஜா ஸர் அவர்கள் முன்னைவிட அதிக சாவதானமாக, "அப்படியா? ரொம்ப சந்தோஷம். நானும் சில வருஷங்களுக்கு முன்பே தமிழிசையைப் பற்றிப் பேசியிருக்கிறேன். மியூஸிக் அகாடமி மகாநாட்டை ஒரு வருஷம் என்னைத் திறந்து வைக்கச் சொன்னார்கள். அந்தப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன்!" என்றார்கள்.

"ஓஹோ! இருக்கலாம். எனக்குத் தெரியாமல் போயிற்று" என்று மழுப்பினேன்.

பிறகு ராஜா ஸர் அவர்கள் "சிதம்பரத்தில் தமிழ் இசை மகாநாடு நடத்துகிறோம். அதற்கு வர வேண்டும்" என்றார்கள்.

ராஜா ஸர் அவர்கள் அழைத்த முறையில், "ஆகட்டும்" என்பதைத் தவிர வேறு பதில் சொல்வது அசாத்தியமாயிற்று.

இதற்குப் பிறகு பல தடவை தமிழிசை இயக்கம் சம்பந்தமாக ராஜா ஸர் அவர்களை நான் சந்தித்துப் பேசும்படி நேர்ந்தது. அவர்களுடன் பழகப் பழக, அவர்களுடைய சிறந்த குணாதிசயங்களும், உயர்ந்த பண்பாடுகளும், அபூர்வமான ஆற்றல்களும் நன்கு புலனாகிக் கொண்டிருந்தன.

முதன்மையாகத் தெரியவந்தது அவர்களுடைய ஒப்பற்ற அடக்கம். பொதுவாக உலகமெங்கும் பணக்காரர் என்றாலே அவர்கள் மற்றவர்களைப் பார்க்கும் விதம் வேறுதான். அதிலும் அவசரமாகப் பணம் சம்பாதித்தவர்களும், திடீரென்று பணக்காரர் ஆனவர்களும் 'நான் பணக்காரன்' என்று நெற்றியில் எழுதி ஒட்டிக் கொள்வதுபோல் நடந்து கொள்வதை உலகத்தில் பார்த்திருக்கிறோமல்லவா?

ஆனால் ராஜா ஸர் அவர்கள் மற்றவர்

களிடம் நடந்து கொள்ளும்போது சம அந்தஸ்தில் உள்ளவர்களைப் போலவே நடந்து கொள்ளுவார்கள். அவர்களைப் பார்க்க வந்தவர்களுக்கு எந்தவிதமான தயக்கமும் ஏற்படுவதில்லை. அடையாறு மாளிகையில் சில சமயம் வெளி வாசற்படியில் வந்து நின்றும், சில சமயம் (உடம்பு அவ்வளவு சௌகரியமில்லா விட்டால்) மேல்மாடிப் படியில் வந்து நின்றும் அழைத்துப் போவார்கள். "வரணும்", "வரணும்" என்று அவர்களுடைய கம்பீரமான வரவேற்புச் சொற்களில் அன்பும், மரியாதையும் ததும்பி நிற்கும்.



"ரொம்ப சந்தோஷம்" என்று அவர்கள் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லும்போது, நம்முடைய வரவைக் குறித்து இவ்வளவு சந்தோஷப்படுகிறவர்களும் உலகத்தில் உண்டா என்று தோன்றும்.

விருந்தாளிகளை வரவேற்பது ஒருபுறம் இருக்கட்டும். வேலைக்காரர்களை அவர்கள் நடத்திய விதம் ஒரு பெரிய படிப்பினை. பலதடவை அவர்களைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில், ஒருமுறையாவது வேலைக்காரர்களை அதட்டுவதையோ, கோபித்துக் கொள்வதையோ நான் பார்த்ததில்லை. மோட்டார் டிரைவரிடமோ, மற்ற வேலைக்காரர்களிடமோ அவர்கள் பேசும்போது வார்த்தைகளில் அன்பும் ஆதரவும் கொட்டிக் கொண்டிருக்கும். கண்டிப்பான, உத்தரவைப் போடும்போதுகூட, அவர்களுடைய வார்த்தைகளில் இனிமை குறைவதில்லை.

ஒரு சமயம் அவர்கள் மோட்டார் டிரைவரின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "சாப்பிட்டு விட்டாயா, அப்பா?" என்று அன்போடு கேட்ட காட்சி இன்றைக்கும் என் மனக்கண் முன் நிற்கிறது.

- 'யார் இந்த மனிதர்கள்?' நூலிலிருந்து- வானதி பதிப்பகம்

(30.9.2005 ராஜா சர் அண்ணாமலை செட்டியார் 125வது பிறந்தநாள்)

'என் உடல்
இந்த தேசம்
என் மொழியோ
உபதேசம்!'
- ஸ்ரீ கிருஷ்ணன்



பளிச்சென்று தெரிந்த அந்த கர்ப்பிணிப் பெண்ணும், கூடவே நின்றிருந்த அந்த வயதானவரும் ராஜத்தை நொடியில் ஈர்த்துவிட்டனர்.

சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவார்னு சொல்லிச் சொல்லியே லேட் பண்ணிட்டா. கடைசில இன்னிக்குத்தாங்க நல்ல நாளா அமைஞ்சிச்சு. இப்பகூட தாய் வீட்டுக்கு வர இதுக்கு மனசில்ல..."

அவள் அப்பா இடையிட்டுப் பேசியதைக் கேட்டு, ராஜம் ஆச்சரிய பாவனையைக் காட்டினாள்.

"உங்க ஊர்?"

"சென்னைதாங்க... திருச்சில கட்டிக்

எங்கே என் கண்ணன்?

சீனுவும் அந்த கர்ப்பகோலத்துக்கு ஒரு வேகமான அங்கீகாரத்தை அளிக்கத் தொடங்கினார்.

"உங்களுக்கு அப்பர் பர்த்தாக்கும்? அம்மாடி, நீ முதல்ல உக்காரு, ராஜம் இப்படி வா. அந்தப் பொண்ணு சௌகர்யமா உட்காரட்டும்" என்று அவர் சொல்லவும், அந்த நொடியே ஒரு சகஜ பாவம் உருவாகிவிட்டது.

"இதுதான் மாசமாம்மா?" - இணக்கமாகக் கேட்டாள். ரயில் ஓட்டத்தில் ஒரு வித தாலாட்டு.

"ஆமாம் மாமி..."

"உன் முகத்தைப் பார்த்தா நாளைக்கேகூட உனக்குக் குழந்தை பொறந்துடலாம்னு தோணறது..."

"அப்படித்தான் டாக்டரம்மாவும் சொன்னாங்க. சீமந்தம் முடிஞ்ச உடனே வர வேண்டிய பொண்ணு. புருஷன் கொடுத்துருக்கேன். தங்கமான மாப்ளை. கல்யாணமாகி ஆறு வருஷமாயிடுச்சு. இப்பதான் எல்லாம் கூடி வந்துருக்கு..."

இந்திரா சௌந்தர்ராஜன்

- அவர் சொன்னதற்குள் ஒரு உள் சோகமும் ஒளிந்திருந்தது. அடுத்தகணம் ராஜத்திடம் பார்வை மாறிப் போனது.

"ஏம்மா... கொஞ்ச நாள் கழிச்சு பெத்துக்கலாம்னு நினைச்சுட்டியா...?"

"இல்ல மாமி... நடுவில நிறைய அபார்ஷனாயிடுச்சு" - அந்தப் பெண் தயக்கத்தோடு சொன்ன நொடி, ஒரு கீர் உணர்ச்சி சீனுவிடம்.

"ஒண்ணா இரண்டா... ஏழு குழந்தைங்க! வயித்துல மூணு மாசம் நாலு மாசத்துலையே போயிடுச்சுங்க. இது எட்டாவது... இதாவது தங்கணும்னு நாங்க வேண்டாத தெய்வம் இல்லை. பெங்களூர் பக்கத்துல தொட்டமளூர்னு ஒரு ஊர் இருக்குது. அங்க இருக்கற குழந்தை கிருஷ்ணனைக் கும்பிட்டுக்குங்க. நல்லபடியா குழந்தை பிறந்துடும்னு ஜோசியர் ஒருத்தர் சொன்னார்.

9

அங்க போய் நின்னு சன்னதி முன்னால கதறி அழுதுச்சு. என் வயிறு என்ன, உயிர் வாங்கற கல்லறையான்னு கேட்டு புலம்பித் தீர்த்திடுச்சு. அப்புறம்தாங்க இந்தக் கரு தங்கி, இவ்வளவு தூரம் வந்துருக்கு!''

- அவர் சொன்னதில் ஒரு கண்ணன் கதையே ஒளிந்திருப்பது போலக் தோன்றியது சீனுவுக்கு. அந்தக் கண்ணனும் தேவகி வயிற்றில் எட்டாவதாகத்தானே வந்து பிறந்தான்? அதுவும் இரும்புச்சிறையில்... இந்தப் பெண்ணும் கிட்டத்தட்ட அந்த



தேவகிதான் என்று நினைக்கும்போதே, டி.டி.ஆர் வந்து டிக்கெட்டுக்கு நின்றார். அந்த பெரியவர் முந்திக் கொண்டு நீட்டினார், வாங்கிப் பார்த்தவர், "உங்க பேர்தான் தாமோதரனா, தேவகி யாரு?" என்று கேட்க, அவர் மகளைக் காட்ட, சீனுவுக்கு சிலிர்த்து விட்டது உடம்பு.

'பெயரிலுமா இவள் தேவகி?' - என்று கேட்டுக் கொண்டவர் அப்படியே இரு பர்த்துக்கு நடுவே அடங்கிக் கிடக்கும் அந்த பிரம்புக் கூடையைப் பார்த்தார். 'கண்ணா, இது என்ன கணக்கு?' என்று மனதுக்குள் கேட்க, டி.டி.ஆர் அவர் பக்கம் கையை நீட்டினார். அதில் கலைந்து போனது அவரது சிலிர்ப்பு.

"அம்மாடி கவலைப்படாதே. உனக்கு சுகப்பிரசவம் ஆயிடும். பிள்ளைக் குழந்தை தான் பிறக்கும். எனக்கென்னவோ அந்தக் கிருஷ்ணனே பிள்ளையா வந்து பிறக்கப் போறாங்கற மாதிரி தோணுது. ஏழு போனதுக்காக வருத்தப்படாதே. அது ஒரு கர்மக் கணக்கு. எட்டுல நீ பெரிய ஒரு விஷயத்தையே எட்டிப் பிடிக்கப் போறே..."

- அவர் சொல்லி முடிக்கவும் ஓடிக் கொண்டிருந்த ரயில் திடீரென்று கிறீச்சிட, அந்த கேரேஜில் ஒரு எதிர்பாராத குலுக்கல்! அதில் அந்த பிரம்புக் கூடையும் அப்படியே புரண்டு விழுந்தது. விழும் போதே அதன் மேல் முகப்பு திறந்துகொள்ள, உள்ளே பட்டுத் துணிகளுக்குள் அடக்கமாகப் படுத்திருந்த கண்ணன், தாவிக் குதிக்கும் ஒரு குழந்தைபோல அந்தப் பெண்ணின் மடிமேல் போய் விழுந்தான்!

"பெருமாளே... நாராயணா..." - என்று ஓங்கிக் குரலெடுத்து விட்டார் சீனு. அந்தப் பெண்ணோ அந்த விக்ரகத்தை ஆசையுடன் பார்த்தாள். கண்டி இழுக்கும் சிரிப்பும், இடுப்பைப் பற்றத் துடிக்கும் கைகளுமாய், மடியில் விழுந்த கண்ணனால் அவளிடமும் ஒரு பரவசம்!

"அம்மாடி, அதை இப்படிக் கொடு... அது எங்க ஆத்து பெருமாள்... அதை கொடும்மா. கொடுத்துடு..." - சீட்டை விட்டு எழுந்து நின்றவராக, அடக்க முடியாதபடி பதறத் தொடங்கி விட்டார் சீனு.

ராஜமும் அந்தச் சம்பவத்தால் பதைத்துப் போய்விட்டாள். கண்ணனை கையில் வாங்கியவர், முதல் காரியமாக இரு கரங்களிலும் தூக்கி, காலிரண்டும் நெற்றியில் படும்படி பிடித்துக் கொண்டார். கண்களிரண்டும் கலங்கிவிட்டன.



அந்தப் பெண்ணும் பெரியவரும் அதை ஓர் அதிசயக் காட்சியாகத்தான் பார்த்தார்கள். ராஜம் மள மளவென்று பிரம்புப் பெட்டியை நிமிர்த்தி, உள்ளே துணியை அழகாய்ப் பரத்தி, சிதறி விட்ட அர்ச்சனைப் பூக்களையும் பொறுக்கி எடுத்து அந்தத் துணியில் தூவியவளாக அவரைப் பார்த்தாள். அவரும் பிரக்ஞை மீண்டவராக, கண்ணனை அந்தப் பெட்டிக்குள் படுக்க வைத்தார். கண்ணனோடு கூடவே இரண்டு சாளக்கிராம கற்கள். ஒன்றில் சங்கு, இன்னொன்றில் சக்கரம்! இரண்டும் பத்திரமாக இருந்தன. பிரம்புப் பெட்டி விழுந்ததில் சிலை

"டி.வி.யிலே இன்னிக்கு வைச்ச எல்லா எபிசோடும் படு திண்டம்."
"எப்படி?"
"ஒண்ணுல கூட யாருமே அழல!"
- பம்மல் நாகராஜன்

தான் உருண்டு ஓடியிருக்க வேண்டும். ஆனால் அவை பத்திரமாக இருந்தன. எல்லாமே ஏதோ ஒரு ரகசியச் செய்தியை அவருக்குச் சொல்வது போலத்தான் இருந்தது. அப்படியே அந்தப் பெண் கைபட்டதில் தீட்டு பட்டிருக்குமோ என்றும் துளி லஜ்ஜை. 'சீச்சீ... இவள் தேவகி! நான் சொன்னது கண்ணன் காதில் விழுந்திருக்கிறது. அதுதான் அம்மாவிடம் தாவிவிட்டான்' என்றும் நினைத்துக் கொண்டார்.

"சாமி, நீங்க சொல்லி வாய் மூடவும், உங்க பெட்டில இருக்கற சாமி என் பொண்ணு மடியில விழவும் ஏதோ ஒரு கணக்கு இருக்குதுங்க. முதல்ல நாங்க இந்த வண்டில வர்றதாவே இல்லை. எதுலையும் டிக்கட் கிடைக்கலை. இதுலதான் கிடைச்சுச்சு. இது வடக்க போற வண்டியாம்ல? காலைல நாலு மணிக்கெல்லாம் வேற எக்மோர் போயிடும்னாங்க. அந்த நேரம் போய் இறங்கி எப்படிப் போறதுன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்பத்தாங்க புரியுது... உங்களப் பாக்கணும். இப்படி நடக்கணும்னு இருக்கு. அப்ப அதுக்குத் தகுந்தமாதிரிதானே எல்லாரும் ஆடியாகணும்?"

- அவர் சொல்லச் சொல்ல, கண்களை இறுக்கி மூடிக்கொண்டார் சீனு.

வாரணாசி! அந்த மடத்து சத்திர அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் ஜோசியர். வெறும் கையை வீசிக் கொண்டு போனவர், ஒரு ஜோல்னாப் பையோடு வரவும், அவரையே பார்த்தபடி இருந்த விஸ்வநாதன் என்பவர் "என்ன ஜோசியரே... கைய வீசிண்டு போனீர், ஒரு பெரிய பையோட வர்றீரே?" என்று வாயைப் பிடுங்க ஆரம்பித்தார்.

"ஏய்யா... நீ இந்த மடத்து சிப்பந்தியா, இல்ல. சி.ஐ.டியா... யார் எப்படிப் போறா எப்படி வரான்னு பாக்கறதுதான் உன் வேலையா?"

"அட என்ன ஜோசியரே, கோவிச்சுக்கிட்டீங்களாக்கும். எனக்குத் தெரியாம இந்த ஊர்ல எதையாவது வாங்கிடப் போறீங்களோன்னு ஒரு பயம்தான்..."

- பதிலுக்கு அதிர்ச்சியோடு பார்த்தார் ஜோதிடர்.

"என்ன பாக்கறீங்க...? சுத்தமான கங்கை தண்ணில இருந்து பாணலிங்கம், ஒரிஜினல் காசிக்கயிறு, அன்னபூரணி விக்ரகம், ஒரிஜினல் காசிச் சொம்புன்னு இங்க பல ஐட்டம் இருக்கு. அதை எங்க வாங்கினா நல்லா இருக்கும், எது ஒரிஜினல்னு எனக்குத் தானே தெரியும்?"

"ஏய்யா, இதுல எல்லாம் கூடவா டூப்ளிகேட்டு?"

"என்ன ஜோசியரே அப்படிக் கேட்டுட்டீங்க. இங்க மனுஷான்லயே பலர் டூப்ளிகேட், அது தெரியுமா உங்களுக்கு...?"

"போதும் விஸ்வநாதா. க்ஷேத்ரம்னா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும். நீ எதையாவது சொல்லி, என் மனசை இலேசப் படுத்திடாதே. நீ இடத்தைக் காலி பண்ணு..." - ஜோதிடர் அவரைத் துரத்தியவராக அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

பின் பயபக்தியோடு அந்த பையைப்



"பக்கத்து வீட்டுக்காரி எடுத்திருக்கற பட்டுப்புடைவைக்கும், பச்சை மிளகாய்க்கும் என்ன ஒற்றுமை தெரியுமா?"

"பச்சை நிறமா..?"

"இல்ல... இரண்டுமே வயித்தெரிச்சலை ஏற்படுத்துது!"

- குட்டி பிரசன்னா



பார்த்தபடியே உள்ளிருந்து ஒவ்வொன் றாக எடுக்க ஆரம்பித்தார். கறுப்பாய், உருண்டையாய், மொழுமொழு வென்றும், பலவித ரூபங்களிலும் சாளக் கிராமங்கள். ஒன்று இரண்டு, மூன்று என்று எண்ணினார். சரியாக எட்டு! எட்டாவதில் ஒரு கட்டை விரல் போன்ற ரூபம்... விசித்திரமாக இருந்தது! அப்புறமாய் ஏட்டுக்கட்டுகள். பிரியைப் பிரிக்கவே நெடுநேரமாயிற்று... உள்ளே சமஸ்கிருதத்தில் வரிகள். மிக பழைமை யானது என்பது அதன் பழுப்பு நிறத்தில், முனைகளின் நொறுங்கலில் உணர முடிந் தது. ஜோதிடருக்கு சுமாராக சமஸ்கிரு தம் தெரியும். ஆனாலும் முழுமையாகப் படிக்க முடியவில்லை.

'க்ருஷ்ணானந்த சாகர த்ரஷ்டுமவ்யா கதோரக...' - என்று தடுமாறிப் படித்த வரால் அதற்குமேல் படிக்க முடிய வில்லை. யாரோ மகான் கிருஷ்ணன் மேல் ஸ்லோகமோ, பாடலோ எழுதி யிருக்கிறார் என்பது போல விளங்கிக் கொண்டவர், திரும்பவும் நூலால் கட்டத் தொடங்கினார்.

அப்படியே ஜோல்னாப் பைக்குள் வேறு ஏதாவது இருக்கிறதா என்றும் பார்த்தார். ஒரு குயர் நோட்டு ஒன்று மடங்கிய நிலையில் கண்ணில் பட... எடுத்தார். பிரித்தார். உள்ளே பக்கத்துக் குப் பக்கம் 'ஓம் நமோ நாராயணாய' என்கிற அஷ்டாக்ஷர திவ்யநாமம் ஆயிரக்கணக்கில் எழுதப்பட்டிருந்தன. புரட்டிக் கொண்டே வந்தவருக்கு, ஒரு பக்கத்தில் அது முடிவடைந்துவிட மறு பக்கத்தில் யுகங்களின் கணக்கு என்று விபரங்கள்.

கிருதயுகம் = 17,28,000 வருஷங்கள்

திரேதாயுகம் = 12 96,000 வருஷங்கள்

துவாபர யுகம் = 8, 64,000 வருஷங்கள்

கலியுகம் = 4,32,000 வருஷங்கள்.

நான்கு யுகங்களும் சேர்ந்து ஒரு சதுர் யுகம்.


இப்படி 71 சதுர்யுகம் ஒரு மன்வந்தர மாகும். ஆயிரம் சதுர்யுகம் ஒரு கற்பகா லமாகும் என்று வரிசையாக விளக்கங்கள்.

படித்துக் கொண்டே போன ஜோதி டருக்கு இலேசாகத் தலையைச் சுற்றி யது... இருந்தும் தொடர்ந்து படித்தார்.

'1000 சதுர்யுகத்திற்கு ஒரு முறை வருவது கல்பகாலமாகும். இதுவரை 12 கல்ப காலங்கள் சென்றுவிட்டன. இறுதி யாக முடிந்தது விநாயக கல்பம்... அடுத்து வரும் கல்ப முடிவில் பிரளயம் ஏற்பட்டு பூமி அழியும். இக்கால கட்டத்தில் ஸ்ரீவிஷ்ணுவின் கல்கியவதாரம் நிகழப் போகிறது...'

- என்ற குறிப்புகளை எல்லாம் வாசித்து முடித்தவர் 'இந்தக் குறிப்புகள் புண்ணியன் ஒருவன் கை சென்று, பின் ஜோதிடன் ஒருவன் கரத்தை அடைந்து அவன் இதை வாசிக்கும் நாளிலிருந்து சொல்ப நாட்களில் இந்தப் புண்ய பூமிக் குக் கண்ணன் வருவான். அவனை வர வேற்க நான் முன் செல்கிறேன்!' என்கிற குறிப்பை வாசிக்கவும் அப்படியே ஆடிப் போனார்!

(தொடரும்)



அத்வானி Vs கங்கூலி!

பா.ஜ.க கூட்டம் முடிந்து, வழக்கம்போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு, ஏர்போர்ட் வி.ஐ.பி. லவுஞ்சில் உட்கார்ந்திருக்கிறார் அத்வானி. மெல்லிய ஃபிரேம் போட்ட கண்ணாடி அணிந்து ஓர் இளைஞர் அங்கே வருகிறார்.

அத்வானி: *(நிமிர்ந்து பார்த்து)* ஓ, மிஸ்டர் கங்கூலி, வெல்கம்... வெல்கம்!

கங்கூலி: நமஸ்தே அத்வானிஜி, நமஸ்தே!

அத்வானி: ம்...ம்... எத்தனை விசித்திர மாக இருக்கிறது! இரண்டு பேரும் பதவி விலகணும்னு பிரஷர் வந்துட்டிருக்கிற போது, நாம் சந்திக்கறது வேடிக்கையா யில்லை?

கங்கூலி: உங்களுக்கு வேணா வேடிக் கையா இருக்கலாம். எனக்கு வேத னையா இருக்கு! யு நோ, நான் காப்டனா இருந்து அதிகபட்ச மாட்ச்சஸ் வின் பண்ணிக் கொடுத்திருக்கேன். ஏதோ ஒரு சில சமயம் 'டக்'கும் போட்ருக்கேன்... அதுக்காக...

அத்வானி: வொய் ஓர்ரி அபவுட் த பாஸ்ட் மிஸ்டர் சௌரவ்? யூ நோ ஜின்னா?

கங்கூலி: அப்படின்னா என்னா? ஜின் தெரியும். ஜின்னா ஹூ?

அத்வானி: லீ, நான் அவரைப் பத்தி ஏதோ சொல்லப்போக, என் தலை யையே இப்போ விலையாக் கேக்க றாங்க!

கங்கூலி: உங்களுக்குப் பரவாயில் லையே, ஒரு வாஜ்பாய் இருக்கார். பயங்கர ஃபீல்டர். பிரமாதமான

அம்பயர். நீங்க செமயா மாட்டிக்கிட்டா கூட அவுட் கொடுக்காம உங்களைத் தப்ப வச்சிடறார். எனக்கு அப்படி யாருமில்லியே!

அத்வானி: யு ஆர் ராங். மாட்டிக்கறதுக்காகவே ஏதாவது சொல்லணும். தட்'ஸ் மை பாலிஸி. அப்போதான் நாலு பேர் பிலுபிலுன்னு பிடிச்சுப்பாங்க. ஹெட் லைன் நியூஸ் ஆகும். யு வில் பி இன் த லைம் லைட். யு வில் என்ஜாய் த ஃபன்! சரி வாட் ஹேப்பன்ட் டு கய்ஃப்?

கங்கூலி: (முறைத்துக் கொண்டு) நீங்க யாரோ ஜின்னான்னு சொன்னீங்களே, ஹூ'ஸ் தட் மேன்?

அத்வானி: அவரைப் பத்தி எதுக்கு நாம பேசணும்! அதான் எல்லாரும் பேசறாங்களே! ஓகே, உங்க டெப்யுடி ராகுல் திராவிட் எப்படி? கிரிக்கெட்டுல பரவாயில்லே. கூடவே ஒரு வைஸ்-காப்டன் இருப்பார்.

கங்கூலி: பட் தேர் இஸ் எ பிராப்ளம்! வைஸ்-காப்டன்தான் ரெடியா இருக்காரேன்னு கேப்டனைக் கழட்டி வுட்டுடப் பார்க்கறாங்க.

அத்வானி: சேப்பலுக்கும் உங்களுக்கும் என்ன தகராறு...? சொல்ல வேண்டாம்னா ஓகே.

கங்கூலி: காட்சஸ் வின் மாச்சஸ்; நாட் கோச்சஸ்! இது அவருக்குப் புரிய மாட்டேங்குது அத்வானிஜி! அதான் பிரச்னை.

அத்வானி: அதே கேஸ்தான் இங்கேயும்! யு ஸீ, ஆர்.எஸ்.எஸ் எனக்கு கோச் என்கிறதுக்காக, அவங்க ட்யூனுக்கு நான் டான்ஸ் பண்ண முடியுமா?


கங்கூலி: இனஃப் ஈஸ் இனஃப்னு ஒரேயடியா அடிச்சுச் சொல்லிற வேண்டியதுதானே? என்கிட்டே இந்த வழவழா எல்லாம் கிடையாது. அடிச்சா செஞ்சுரி. இல்லியா டக்கு! வாயைத் திறந்தா மீடியாவுக்குத்தான்!

அத்வானி: சொல்லியாச்சு. அவங்களுக்கு வேண்டியது எல்லாம் என்னோட தலை. டிசம்பர் வரை தலைவர் பதவியில் இருப்பேன்.

கங்கூலி: (முணுமுணுப்பாக) அது வரை உங்களை வுட்டு வைக்கணுமே?

அத்வானி: என்னவோ சொன்னீங்களே...

கங்கூலி: ஒண்ணும் இல்லே. உங்களுக்காவது டிசம்பர் வரை டயம் கொடுத்திருக்காங்க. எனக்கு பாதி டெஸ்ட்டுலயே காப்டன்ஷிப்பை உட்டுடுங்கறாங்க. சீரிஸ் முடியணும்கிற சீரியஸ்னெஸ் கூட இல்லே.



அத்வானி: எல்லாம் அந்த ஆர்.எஸ்.எஸ். காரங்க பண்ற வேலையோன்னு தோணுது. எதுக்கும் ஜாக்கிரதையா இருங்க!

கங்கூலி: இத்தோட 48 டெஸ்ட் ஆடியாச்சு. அதுல 20 டெஸ்ட் வின் பண்ணின ஒரே காப்டன் நான்தான். சேப்பலுக்கு இந்த ஸ்டாடிஸ்டிக்ஸ் எல்லாம் யார் சொல்லுவாங்க?

அத்வானி: பட், என்னதான் சொல்லுங்க. எங்க உமா பாரதி, மதன்லால் குரானா, யஷ்வந்த் சின்ஹா மாதிரி எல்லாம் உங்க ஸைடுல ஆள் யாரும் இல்லே. அது ஒரு வசதி உங்களுக்கு.

கங்கூலி: சரியாப் போச்சு! அதுக்குத்தான் நிறைய பழைய காப்டன்கள்

"ஆட்டோ டிரைவருக்கும், ரேஷன் கடைக்காரருக்கும் என்ன தகராறு?"

"அவர் வீட்டுக்கு மேலே கேட்கறாரு. இவர் எதுவானாலும் குறைச்சுத்தான் கொடுப்பேங்கறாரு!"

- என். உஷாதேவி

இருக்காங்களே! எப்படாப்பா சரியான சான்ஸ் கிடைக்கும், கங்கூலியோட காலை வாரலாம்னு காத்துக்கிட்டு இருக்காங்களே! அவங்களைத் தூண்டி விட்டறதுக்கு, க்ரிடிக்ஸ் ஒரு படையே இருக்கு!

அத்வானி: நீங்க ஒரு தப்புப் பண்ணிட்டீங்க...

கங்கூலி: போச்சுடா, நீங்கதான் பாக்கி இருந்தீங்க...

அத்வானி: நீங்க சச்சினை ஃபாலோ பண்ணியிருக்கணும். நிறைய கம்பெனி பிராடக்ட்ஸ் எண்டார்ஸ் பண்ணி இருக்கணும். வெறும் பிரிட்டானியா பிஸ்கட்டோடு நின்னுட்டீங்க. அப்புறம் டோ இஞ்சுரி, நீ இஞ்சுரி, நான் இஞ்சுரின்னு பேப்பர்ல பேர் வர்றாப்பல அப்பப்ப பேட்டி கொடுத்திருக்கணும்.

கங்கூலி: ஆகா, இந்திய கிரிக்கெட்டை நல்லாவே புரிஞ்சுவச்சுக்கிட்டிருக்கீங்க! நிறைய எஸ்கேப் ரூட்டைத் தெரிஞ்சு வச்சுட்டிருக்கீங்க!

அத்வானி: மீடியா உங்க பக்கமா இருக்கிற மாதிரி நீங்கதான் பார்த்துக்கணும். கான்ட்ரவர்ஸி இல்லேன்னா, சுவாரசியம் இல்லே - அரசியல் ஆனாலும் சரி, கிரிக்கெட் பாலிடிக்ஸ் ஆனாலும் சரி! புரிஞ்சுதா?

கங்கூலி: கங்கூலின்னாலே கான்ட்ரவர்ஸின்னு ஏற்கெனவே பெயர் வாங்கியாச்சு. இன்னமுமா...?

அத்வானி: ஓகே, கான்ட்ரவர்ஸின்னு வந்துட்டீங்க. எப்போ பாலிடிக்ஸ்ல என்டர் பண்ணப் போறீங்க? பா.ஜ.க உங்களை இரு கரம் நீட்டி வரவேற்கிறது. பீகார் எலக்‌ஷனுக்கு முன்னால நீங்க பார்ட்டில சேர்ந்துட்டா...

கங்கூலி: (அவசர அவசரமாக) மன்னிக்கணும் அத்வானிஜி, நான் ஏற்கெனவே கிரிக்கெட் பாலிடிக்ஸ்ல மாட்டிக்கிட்டு இருக்கேன். ரியல் பாலிடிக்ஸ்ல வேற தலையைக் கொடுக்கணுமா? நீங்க வேணா பி.சி.சி.ஐக்குத் தலைவரா போட்டி போடுங்க. இந்திய கிரிக்கெட்டே படு சுவாரசியமா ஆயிடும்!

(அத்வானி செக்-இன் செய்ய ஓடுகிறார்)

கற்பனை: **சாருகேசி**

பிட்டா பிடிங்க

தேறியாச்சு!

வெறுமனே மழை பெய்யுமா.... பெய்யாதா என்று பேசிக் கொண்டிருந்த மோனிகா, தற்போது மெல்ல பேட்டி, காம்பியரிங் என்று தேறிவிட்டார்.

இளமை காமெடி!

இளமையை புதுமையாக வழங்க தற்போது சொர்ணமால்யாவுக்குப் பதிலாக மீண்டும் அர்ச்சனாவே களமிறங்கியுள்ளார். அதனால் இப்போது நிகழ்ச்சியில் காமெடி சற்றுத் தூக்கலாகவே இருக்கிறது.

அங்கும் இங்கும்!

சினிமாவுக்கு இசையமைத்த ஏ.ஆர். ரைஹானா, இமான், விஜய் ஆன்டனி போன்ற இசையமைப்பாளர்கள் சின்னத் திரைக்கும் இசையமைத்து வருகிறார்கள்.

உஷார்!

பேட்டிக்காக தீபா வெங்கட்டை யாரும் அணுகினால் "சின்ன பேட்டியா... பெரிய பேட்டியா... என்ன டாபிக்... எத்தனை பக்கம்?" என்று 1008 கேள்விகள் கேட்ட பிறகுதான் அவரிடம் லைன் கொடுக்கிறார்கள் அவரது வீட்டிலுள்ளவர்கள்.



* மோனிகா

குட்டு

Deepu....I love you Da..., Sheela: I miss you pa...! இப்படித்தான் சன்மியூசிக்கில் sms என்ற பெயரில் எதற்கும் உதவாத வகையில் ஸ்க்ரோல் ஆகும். இந்த உயர்ந்த கலாசாரத்தை தற்போது ராஜ் டி.வியும் கையிலெடுத்து சமூகசேவை (!) செய்யத் துவங்கியுள்ளது.

"பொறுப்பான, அமைதியான தங்கை கேரக்டரா... கூப்பிடு ரேவதி ப்ரியாவைன்னு எல்லாரும் என் பக்கம் கை நீட்டிடறாங்க" என்று செல்லமாகச் சிணுங்குகிறார் ரேவதி ப்ரியா... 'மெட்டிஒலி', 'கோலங்கள்', 'நிம்மதி' என்று நீள்கிறது இந்தப் பட்டியல். இந்த சைலன்ட் பாப்பாவிடம் சில குண்டக்க - மண்டக்க கேள்விகள்:

அதிரடியான ரோலெல்லாம் கொடுத்தா திருதிருன்னு முழிப்பீங்க போலிருக்கே...?

சேச்சே... இப்போ எனக்கு சாஃப்ட் ரோல் மட்டும்தான் தர்றாங்க... போகப் போக அதிரடி ரோலும் கிடைக்கும். அப்போ பாருங்க, நான் எப்படி அதிரடியா கலக்குறேன்னு...

அதிகம் பேசாம 'உம்' மென்று இருக்கறவங்களுக்குத் 'திமிர்' ஜாஸ்தியா இருக்கும்னு சொல்றாங்களே...?

நான் அதிகமா பேச மாட்டேன்னு யார் சொன்னா? எனக்குத் தெரிஞ்சவங்ககிட்ட பயங்கரமா பேசுவேன். தெரியாதவங்க பழகறவரைக்கும் இலேசா ஒதுங்கி இருப்பேன். அவ்வளோதான். மத்தபடி இந்தத் திமிர், பந்தா... இதெல்லாம் எனக்கு



* சொர்ணமால்யா



* தீபா வெங்கட்



என்னன்னே தெரியாது(!)

நீங்க ரொம்ப விளம்பரத்துக்கு ஆசைப்படுவீங்களாமே?

ஆஹா... அது உங்களுக்கும் தெரிஞ்சு போச்சா... அது ஒண்ணுமில்ல... சீரியல்ஸைப் பார்த்துட்டு, ரெண்டு மூணு கம்பெனிகள்ல விளம்பரத்துல நடிக்கக் கூப்பிட்டாங்க. நல்ல கம்பெனிங்கறதால ஓ.கே சொல்லிட்டேன்.

“டாஸ்மாக்குக்குப் பூட்டுப் போடுவேன்!”

கோபம் வந்தா கத்தியே ஆளைக் கொன்னுடுவீங்களாமே?

ம்ஹூம்... சான்ஸே இல்ல... கோபம் வந்தா சட்டுன்னு கண்ணை மூடி சாமி கும்பிட ஆரம்பிச்சுடுவேன். அப்புறம் கோபம் போகலைன்னா உங்க டெக்னிக்கை இனிமே யூஸ் பண்றேன்.

மேக்கப் போடாம நடிச்சு எல்லாரையும் பயமுறுத்த ஐடியா உண்டா?


ஏற்கெனவே பயமுறுத்திட்டேனே... ஸாரி.... நடிச்சுட்டேனே. ஆனா எனக்கு யாரையும் பயமுறுத்தவே பிடிக்காது. அதனாலதான் நான் பேய் வேஷம் வந்தா ஒத்துக்கறதில்ல...

உங்களை திடீர்னு ஒருநாள் முதல்வராக்கிட்டா, உங்களோட முதல் டியூட்டி எது...?

ம்... வேறென்ன... எல்லா டாஸ்மாக் கடைகளுக்கும் பூட்டு போடறதுதான்.

- **இரா. முத்துக்குமார்**

படம் : **ஸ்ரீஹரி**



பாலஸ்தீனியர்களுக்கு 'ஷூட்டிங்' ஒன்றும் புதிது கிடையாது. ஆனால் ஹானி அபு - ஆஸாத் சமீபத்தில் நடத்தியிருக்கும் ஷூட்டிங் அவர்களை வெகுவாக ஆச்சரியப்பட வைத்திருக்கிறது. படத்தின் பெயர் 'பாரடைஸ் நௌ'!. (Paradise Now).

காலித், சையத் இருவரும் கிழக்குக் கரையிலுள்ள நாப்லஸ் எனும் இடத்தில் ('இது எங்களுடையது' என்கிறார்கள் இஸ்ரேலியர்கள்) ஆட்டோ மெக்கானிக்காக வேலை செய்கிறார்கள். இருவரில் சையத்தின் வாழ்க்கை சற்றுப் பிரகாசமானது. காரணம், சுஹா எனும் அழகிய இளம் பெண் இவனுடைய வாடிக்கையாளராக முதலில் அறிமுகமாகி, பிறகு காதலியாக மாறுகிறாள். (இந்த இடத்தில் ஒரு டூயட் வைக்க வேண்டும் என்றுகூட அபு-ஆஸாத்துக்குத் தோன்றவில்லை. என்ன மனிதர் இவர்?)

ஒரு பெண்ணைக் காதலிப்பது, வாழ்க்கையில் உருப்படுவது இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பற்ற சங்கதிகள் என்று புரிந்து கொள்கிறான் சையத். காலித்தோ, காதலிக்கவேயில்லை என்பதால் கூடுதல் தெளிவுடன் இருக்கிறான். மேற்படி நண்பர்கள் இருவரும் வாழ்க்கையில் எதையாவது உருப்படியாக சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். நிறைய யோசித்துவிட்டு, இறுதியில் பாலஸ்தீனிய கோரிக்கைக்காக ஏதாவது செய்யலாம் என்று தீர்மானிக்கிறார்கள். அந்த 'ஏதாவது' எது என்பதில்தான் பிரச்னையே.

இஸ்ரேலியர்களிடமிருந்து பாலஸ்தீனத்தைப் பிரித்து எடுக்க இவர்கள் தேர்ந்தெடுத்த வழி - இவர்களைப் பொருத்தவரை இதுதான் ஒரே வழி! - மனித வெடிகுண்டுகளாக மாறுவது. முகங்களை மறைத்துக் கொண்டு ஜோடியாக வீடியோவில் தோன்றுகிறார்கள். இறுதிப் பேட்டியும் கொடுத்து விடுகிறார்கள். (பாலஸ்தீன் ஜிந்தாபாத்! பாலஸ்தீன் ஜிந்தாபாத்!) திட்டமிட்டபடி நாப்லஸை வந்தடைகிறார்கள். கைகளைக் கோத்தபடி இரும்பு வேலியைக் கடக்கிறார்கள். வெடிக்க வேண்டியதுதான் பாக்கி. அப்பொழுது பார்த்து திடீரென்று தோன்றும் இஸ்ரேலிய ரோந்துப் படை இருவரையும் துரத்த, குழப்பத்தில் கைகளை உதறிவிட்டுப் பிரிந்து விட நேர்கிறது. (பாலஸ்தீனத்தில் வயலினே கிடையாதா? ஒரு சோக - ஹம்மிங்கூட வைக்கவில்லை மனிதர்)



பிறகு? வெடிக்காமல் இருந்துவிட்டோமே என்று காலித்திற்கு ஒரே அவமானமாகப் போய்விடுகிறது. வேறோரிடத்தில், சையத் ஒரு கூட்டம் நிறைந்த பேருந்தைத் தேர்ந்தெடுக்கிறான். பொத்தானை அழுத்த விரல்கள் நீள்கின்றன. அப்பொழுது பார்த்து அவசர அவசரமாக ஓடி வந்து படியில் ஏறுகிறாள் ஒரு சிறுமி. அவ்வளவுதான். கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு வெடிக்காமல் இருந்துவிடுகிறான் சையத். ஆக மொத்தம், இருவருமே தங்களது பணிகளைச் செய்யாமல் இருந்து விடுகிறார்கள். இந்த வேலைக்கு நாம் லாயக்கற்றவர்கள் என்று உணர்ந்து கொள்கிறார்கள். சோகமாக நாப்லஸிற்குத் திரும்புகிறார்கள், மறுபடியும் கைகளைக் கோத்தபடி. இப்படிச் செல்கிறது கதை.

மனித வெடிகுண்டுகள் தோன்றுவது 'ஏன்? எதற்கு? எப்படி?'யை ஆழமாக



வெடிகுண்டுகளின் கதை!

ஆராய்ந்திருக்கும் அபு - ஆஸாத், தற்பொழுது வசிப்பது ஆம்ஸ்டர்டாமில். (இப்படி ஒரு படத்தை எடுத்துவிட்டு பாலஸ்தீனத்தில் தங்கியிருக்க முடியுமா என்ன?) "நீங்கள் மனித வெடிகுண்டுகளை ஆதரிக்கிறீர்களா?" என்று இவரிடம் கேட்டால் "காட்ஃபாதர் படம் மாஃபியாவை ஆதரிக்கிறதா?" என்று எதிர்க்கேள்வி வீசுகிறார். படம் எதிர்பார்த்தபடியே சர்ச்சைக்கு உள்ளாகியிருப்பதால், கட்டாயமாக வெற்றி பெற்றுவிடும் என்று நம்புகிறார்.

ஏலக்காய் டீ, முந்திரிப் பருப்பு பகோடா, காராபூந்தி இவற்றைச் சுற்றி வட்டமாக அமர்ந்துகொண்டு 'கதை டிஸ்கஷன்' செய்து இந்தப் படத்தை இவர் உருவாக்கவில்லை. வெடித்துச் சிதறியவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களது குடும்பத்தாருடனும், நண்பர்களுடனும் பேசியிருக்கிறார். சையத் போல வெடிக்காமல் மாட்டிக் கொண்டவர்கள் அளித்த வாக்குமூலங்களை வாசித்திருக்கிறார். விளைவு? 'பாரடைஸ் நௌ' மளமளவென்று உருவாகிவிட்டது.

பாலஸ்தீனியர்களின் பிரச்னை - 'வாழ்வா? சாவா?' என்றால் ஆல்ப்ஸ் மலையையொட்டி உள்ள விகநெல்லா (Viganella) பகுதி வாசிகளின் பிரச்னை 'இரவா? பகலா?' என்பதுதான். காரணம், சரிவரப் பார்க்கவே முடிவதில்லை. பூதம் போல ஆல்ப்ஸ் தடுத்துவிடுவதால், நிறையப் பேருக்கு சூரியன் எப்படி இருக்கும் என்பதே மறந்து போய்விட்டதாம்.

விகநெல்லா-வாசிகள் ஆல்ப்ஸ் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். பூத மலைக்கு சவால் விடுமளவுக்கு பிரமாண்டமான கண்ணாடி ஒன்றை விரைவில் ஊருக்குள் நிறுவப் போகிறார்கள். இந்தக் கண்ணாடியை இயக்க, ஒரு புத்திசாலி மோட்டார் பொருத்தப்படும். 'தலே, எங்கேயிருந்தாலும் அந்தப் பக்கமா திரும்பிக்கோ' என்று இந்த மோட்டார், கண்ணாடிக்கு உத்தரவிடும். கண்ணாடியும் ஜாக்கி சான் போல சுழன்று சுழன்று சூரியக் கதிர்களை சிந்தாமல் சிதறாமல் பிடித்து 'இந்தா அள்ளிக்கோ' என்று கீழே அனுப்பி வைக்கும். விசித்திரம்தான். அடுத்தமுறை கறுப்புக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு 'ஷைன் ஷைன் கோ அவே' என்று பாடத் தொடங்கும் முன், இந்த ஜாக்கிசான் கண்ணாடியை ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

- **மருதன்**

• பியானோ வாசிக்கும் மார்ட்டின்

"நான் உறங்கும் பொழுது கூட காற்றலைகள் என் காதில் இசையை வழங்கிக் கொண்டே இருக்கும். மனிதர்கள் ஏற்ற இறக்கங்களோடு பேசும்போது, அவை ஓர் இசைக்கோர்ப்பாகவே எனக்குத் தெரியும்."

'பீட்டில்ஸ், லார்ட் ஆஃப் த ரிங்க்ஸ்' போன்ற புகழ்பெற்ற ஒலிநாடாக்களின் இதயமாகச் செயல்பட்டவர் சவுண்ட் இன்ஜினியரான மார்டின் பெஞ்ச். இசைத்துறையில் 43 வருடங்கள் அனுபவமுடைய பழுத்த பழம். லெனான், ஹாரிசன் போன்ற பிரபல இசையமைப்பாளர்களிடம் பணி புரிந்தவர். ஹைதராபாத் ராமோஜிராவ் ஃபிலிம் சிட்டியிலுள்ள ரெக்கார்டிங் ஸ்டுடியோவை உலகத் தரத்துடன் வடிவமைத்தவர். எஸ்.ஏ.இ. கல்லூரி சார்பாக சென்னை வந்திருந்தவர்,



இசை எந்தளவுக்கு தம் அணுவில் கலந்துள்ளது என்பதைச் சொன்னார்.

இசைத்துறையில் 'இசையமைப்பாளர்' என்கிற ஹாட் சீட்டைத் தவிர வேறு பிரிவுகளும் உண்டு என்கிற

இளமை கல்கி

இந்தக் கட்டுரையைப் படிக்கறதுக்கு முன்னாடி ஒரே ஒரு சிம்பிள் கண்டிஷன்! 'என்ன கதை?' அப்படின்னு கேட்கக் கூடாது. புரியலையா...? தொடர்ந்து படிங்க!

யு.எஸ்ல டெலிவிஷன் துறைக்காரங்க ரொம்ப 'யம்மி'யா நினைக்கறது 'எம்மி அவார்ட்ஸ்!'

எம்மி? அமெரிக்காவில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக வருடந்தோறும் வழங்கப்படும் விருதுதான் எம்மி! முக்கியமாக கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக. டே டைம் அவார்ட்ஸ் & பிரைம் டைம் அவார்ட்ஸ் என அதிலேயே இரண்டு பிரிவுகள் உண்டு. 1949 முதல் எம்மி அவார்ட்ஸ் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

'Everybody Loves Raymond'-னு ஒரு சீரியல். அது இந்த வருடம் எம்மி அவார்ட் வாங்கியுள்ளது. அப்படின்னா அது சாதாரண நியூஸ். 1997ல் ஆரம்பித்த அந்த சீரியல், ஒன்பது வருடங்களாகத் தொடர்ந்து ஒளிபரப்பாகிக் கொண்டுள்ளது. இந்த வருடம் 2 எம்மி விருதுகளை வாங்கியுள்ளது. இதன் மூலம் 12 எம்மி விருதுகளைக் கைப்பற்றி உள்ளது. இது எப்படி இருக்கு!

நம்ம ஊர் சீரியல்கள் மாதிரி, இந்த மெகா சீரியலின் மூலப்பொருள் கிளிசரின் அல்ல! பழிவாங்குதல், புரட்சிப்

எல்லோரும் ரேமண்டைக்

துளைத்தெடுக்கும் கேள்வி!

சிற்றறிவு இப்பொழுதுதான் அனைவருக்கும் வந்திருக்கிறது. அரை நூற்றாண்டுக்கு முன்பே, "ஆனால், சவுண்டு இன்ஜினியராதான் ஆவேன்'' என்று வீட்டில் அடம்பிடித்து, அதற்கான படிப்புகள் படித்து இன்று இசைக் கோர்ப்புகளுக்கான சர்வதேச கன்சல்டண்ட்டாக முன்னேறியிருக்கிறார் மார்ட்டின் பெஞ்ச்.

இரண்டு நாட்கள்தான் சென்னையில் இருந்தார். ஒரு நிமிடம் இளைப்பாற விட வில்லை. இசை பயிலும் மாணவர்கள் எழுப்பும் சந்தேகங்கள் ஒருபுறமிருக்க, நகரத்தின் அத்தனை ஆடியோ இன்ஜினியர்களும், இவர் வந்திருப்பதை அறிந்து ஓடோடி வந்து விட்டார்கள்.

"இசைக்கு மயங்காத மானிடர் உண்டா? இது நமக்குச் சாதகமான விஷயம்'' என்று குதூகலமாகப் பேசியவரிடம் இளையராஜா - ஏ.ஆர்.ரஹ்மான் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டதற்கு, அவர், "இந்தியா வந்திறங்கியவுடன் என்னைத் துளைத்தெடுக்கும் கேள்வி இது. சவுண்ட் இன்ஜினியரான நான், இவ்விருவரின் ஆர்கஸ்ட்ரேஷன் அருமை பெருமைகளைப் பற்றி அறியாமல் இருக்க முடியுமா? உலகெங்குமுள்ள இசை ஆர்வலர்களை கிறங்கடிப்பவர்கள். இந்தியா உலகுக்கு அளித்த அற்புத இசைக்கலைஞர்கள் அல்லவா இருவரும்!'' என்று சிலாகித்திருக்கிறார்.

- சநகன்

பெண், மாமியார் - கொடுமைஸ் போன்ற கொடுமைஸ் கிடையாது. ரேமண்ட் ஒரு முழுநீள காமெடி சீரியல் என்பது அதன் ப்ளஸ்!

சீரியலின் பிரதான கதாபாத்திரத்தில் நடிக்கும் நடிகர் ரே ரோமனோ. ரே 1984ல் நியூயார்க் காமெடி க்ளப்பில் நடிகராக வாழ்க்கையைத் தொடங்கியவர். அந்த வாழ்க்கை பிடித்துப் போகவே, காமெடிதான் தம் வாழ்க்கை எனத் தீர்மானித்து, மெல்ல மெல்ல தொலைக்காட்சி பக்கம் வந்து... இன்று சில பல சிறந்த காமெடியன் விருதுகளை அள்ளிவிட்டு, நெம்பர்-1 காமெடியனாக புன்னகை செய்கிறார். ரெமெண்ட் சீரியலின் நாயகியான ஹீட்டனும், இந்த சீரியல் மூலம் நெம்பர் - 1 காமெடி நடிகை என்ற புகழை, விருதுகளை அள்ளியுள்ளார். சீரியலில் குட்டீஸாக நடித்தவர்கள், இப்போது வளர்ந்து விட்டார்கள். கதையும் அவர்களுக்கேற்பவே வளர்ந்து விட்டது.

இந்த சீரியலின் டி.விடிக்களும் வெளி வந்து, அவையும் விற்பனையில் சந்தோஷமாகச் சிரிக்கின்றன என்பது நோட் பண்ண வேண்டிய விஷயம்!

- முகில்



காதலிக்கிறாங்க!



"என் போஸ்டர் எங்கே?"

'ம்ஹூம்... பாலிடிக்ஸுக்கும் யூத்ஸுக்கும் சம்பந்தமே கிடையாது. நோ சான்ஸ்' என்று தலையை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் ஆட்டுபவர்களின் அதி முக்கிய கவனத்திற்கு, ஆப்கானிஸ்தானில் சென்ற வாரம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் (அங்கே அப்படி ஒன்று நடக்கிறதா என்ன?) 500 பெண் வேட்பாளினிகள் 68 இடங்களில் போட்டியிட்டிருக்கிறார்கள்.

கறுப்பு நிற பர்தா அணிந்த 25 வயதே ஆன சாப்ரினா சாகேப், ஒரு பாராளுமன்ற வேட்பாளினி என்று சொன்னால் நம்ப முடிகிறதா? ஆப்கன் வரலாற்றிலேயே இவ்வளவு கொஞ்சூண்டு வயதில் தேர்தலில் நிற்கும் முதல் நபர் இவர்தான். (ச்சே, பாவம் ரொம்ப நேரம் நின்னா கால் வலிக்குமே!) காபூல் முழுக்க அலைந்து திரிந்து சிரமப்பட்டு (ச்சே, ரொம்ப பாவம்பா) வோட்டு சேகரித்திருக்கிறார். 'நான் ஆட்சிக்கு வந்தால் ஆப்கனைக் கொள்ளையடிக்கும் துப்பாக்கி-வாலாக்களை தைரியமாக எதிர்கொள்வேன்' என்று படபடவெனப் பொரிகிறார்.



"ஐய்யய்யோ, உங்களுக்கு ஏதாவது பிரச்னை வந்துச்சுன்னா?' என்று கரிசனத்தோடு கேட்டால், "ஏற்கெனவே ஆரம்பிச்சாச்சுப்பா" என்கிறார் கவலை மிதக்கும் கண்களோடு. "போன வாரம் தான்பா என்னோட போஸ்டரை இதோ இங்கேயிருக்கிற எல்லா சுவத்திலேயும் ஒட்டினோம். இப்போ வந்து பார்த்தா ஒண்ணு கூடக் காணோம்.'' ஏன்? "த்சொ, என்ன செய்யறது. இந்தப் பசங்க கிழிச்சிட்டுப் போய் அவங்க ரூம்ல ஒட்டிக்கிறாங்க."

சாப்ரினா சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை தான். ஒட்டிய கோந்து காய்வதற்குள், ஆப்கன் யுவன்கள் கிழித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். விளைவு? டாக்ஸியின் பின்னாலும், புத்தக அட்டைகளிலும் அமைதியாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார் சாப்ரினா. சாப்ரினாவின் செல்ஃபோன் விநாடிக்கு விநாடி கூவிக் கொண்டேயிருக்கிறது. பத்திரிகையாளர்கள் மைக்கைத் தூக்கிக் கொண்டு "மேடம் மேடம்" என்று அவர் பின்னாலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற வாரம் முழுக்க முகம்மது நசீன் எனும் 20 வயது இளைஞன், சாப்ரினாவின் அலுவலக வாசலில் நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்தான். ஏனாம்? "ச்சும்மா, அவங்களைப் பார்த்துட்டு அப்படியே ஒரு போஸ்டர் கிடைச்சா வாங்கிட்டுப் போலாம்னு வந்தேன்". சாப்ரினா தோற்றுவிடுவார் என்று யாருக்காவது கடுகளவு சந்தேகமாவது இருக்கிறதா?

- மல்லி

தொண்டன்: தலைவா! சன் டீ.வி மேலே நாம கேஸ் போடணும்! போட்டே ஆகணும்!

விஜய்காந்த் : - எதுக்கு?

தொண்டன் : நம்ம முதல் மாநில மாநாடு பத்தின செய்தியை, விளையாட்டுச் செய்திகள்ல காட்டிட்டாங்க தலைவா!

- மதுரை மாநாடு முடிந்த மறுநாள், தமிழக செல்ஃபோன்களில் டிராபிக் ஜாம் ஏற்படுத்திய ஹாஸ்யக் கற்பனை எஸ்.எம்.எஸ் இது. உண்மையில் ஒட்டுமொத்த விஜய்காந்த் ரசிகர்களும், அனுதாபிகளும் கொதித்துப் போய்விட்டார்கள். "வைகோவுக்கு என்ன நடந்ததோ, நடக்குதோ, அதே நிலைமைதான் நமக்கும் நடந்து போச்சி! இதை இப்படியே விடக்கூடாது" என்று விஜய்காந்த் கட்சி அலுவலகத்துக்கு ஃபேக்ஸ் மழை பொழிந்து தள்ளி விட்டார்களாம்.

"இது நாம் எதிர்பார்த்ததுதானே! இதற்காக உணர்ச்சி வசப்படுவதை விட்டுவிட்டு காரியத்தில் இறங்குவோம். விரைவில் நமக்கொரு டீ.வி கைகொடுக்கும், அதுவரை காத்திருங்கள்" என்று விஜயகாந்த் உற்சாக பூஸ்ட் அளித்திருப்பதாகத் தகவல்கள் வருகின்றன!


பாரம்பரியமிக்க தினசரிப் பத்திரிகை 'பூ' பெயரால் சாடிலைட் டீ.வி தொடங்க ஒளிபரப்பு உரிமம் கேட்டு விண்ணப்பித்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை கிடைக்காமல், வெறுத்துப் போய்க் கிடக்கிறார்கள். இன்னொரு பக்கம் தனது செய்தியைப் பறிகொடுத்துவிட்டு, 'ராஜ' கம்பீரத்தை இழந்த நிலையில் தவிக்கும் டீ.வியும், தனது உரிமத்தைப் புதுப்பிப்பதில் தொடர்ந்து முக்கி முனகிக் கொண்டிருக்கிறது. "டெல்லியின் தகவல், ஒளிபரப்புத் துறையில் இந்த அளவுக்கு சுயநல அரசியல் புகுந்து விளையாடும்போது,



விஜய் டீ.வியை விலை பேசும் விஜயகாந்த்?

எங்கள் கேப்டன் 'புதுச்சேனல்' தொடங்க, அவர் என்ன முட்டாளா?" என்று கோபமாகவே கேட்கிறார் சென்னைக்கு உட்பட்ட ஒரு மாவட்ட நிர்வாகி.

"எங்கள் தலைவர் சினிமாவுக்கு நடிக்க வந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பாக எந்த தனியார் தொலைக்காட்சிக்கும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக பேட்டி தராத அவர், சூரிய டீ.வியோடு இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்போம் என்ற கண்ணோட்டத்தில், மாநாடு சமயத்தில் அந்த டீ.விக்கு பேட்டி தருவதாக தூது அனுப்பினார். ஆனால் அந்த டீ.வி மருந்துக்குக்கூட சட்டை செய்யவில்லை. எனவேதான் விஜய் டீ.விக்கு அந்தப் பேட்டி இடம் மாறியது! கேப்டனின் பேட்டிக்கு தமிழகம் முழுவதும் எந்த அளவு டி.ஆர்.பி ரேட்டிங் இருக்கிறது என்பதைக் கண்டறிய, தமிழகம் முழுவதும்



தமது ஆய்வாளர்களை அனுப்பிய விஜய் டி.வி, ரிசல்ட்டைப் பார்த்து மிரண்டு போய்விட்டது. முதலாளிகள், நிர்வாகிகள் மட்டத்தில் உடனடியாகக் கூட்டம் போட்ட விஜய் டி.வி "எங்களுக்கு மட்டும் 'செய்தி' ஒளி பரப்பும் சக்தி இருந்திருந்தால், விஜய்காந்த் மாநாட்டை 'லைவ்' நிகழ்ச்சியாகப் பிரமாதப்படுத்தியிருப்போம். கணிசமான மக்கள் சக்தியை கைவசம் வைத்திருக்கும் கேப்டனை, விஜய் டி.வியின் பங்குதாரர் ஆக்கி, ஸ்டார் நிறுவனத்தின் ஷேர்களைக் குறைத்துவிட்டால், அதன் பிறகு நாங்கள் செய்தியும், லைவ் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பலாம். உங்கள் தொண்டர் பலம், எங்கள் நிகழ்ச்சி பலம், இரண்டும் இணையட்டும். இருவரும் சேர்ந்தே வளரலாம். என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டு தூது அனுப்ப எங்கள் கேப்டன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறார்'' என்று கேப்டனுக்கு நெருக்கமான மீடியா ஆலோசகர் நம் காதைக் கடித்தார்.

''இது பரபரப்பான கற்பனை'' என்று எடுத்ததுமே மறுத்தார் தே.மு.தி.க பொதுச்செயலாளர் ராமு வசந்தன். ''நடு நிலையான தொலைக்காட்சி என்று மார் தட்டிக் கொள்கிறவர்கள் எல்லோருமே, இன்று கட்சி சார்ந்து செயல்படுகிறார்கள். எந்த டி.வி எந்தக் கட்சியின் பிரசார ஊடகம் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த விழிப்புணர்வு மக்களுக்கு வந்து நீண்ட காலமாகிவிட்டது. ஆனால் இந்த வகை டி.விக்கள் நீண்ட காலம் இப்படியே பிழைப்பு நடத்த முடியாது. மக்கள் பிரச்னைகள், பொதுப்பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அனைத்து கட்சித் தலைவர்களின் கருத்துகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததால்தான், இவர்களால் முதல் இடத்துக்கு வளர முடிந்தது. இதை இன்று சுலபமாக மறந்து விட்டார்கள். இதே போக்கு நீடித்தால்- இந்த டி.விக்களுக்கு மாற்றாக நிச்சயம் ஒரு தீர்வு எதிர்காலத்தில் வரலாம்.

''இப்போது எங்களுடைய கண்டனமெல்லாம்... மாநாடு குறித்து விளம்பரம் கொடுத்ததை மட்டும் வாங்கி ஒளிபரப்புச் செய்தவர்கள்... எங்கள் முதல் மாநாட்டு நிகழ்ச்சியை இருட்டடிப்பு செய்து விட்டார்களே, என்பதுதான்'' என்று சாடினார்.

- குட்டி ஜெயா

படம்: டிஜி சண்முகம்

• ராமு வசந்தன்



"பிளஸ் ஒன் படிக்கிற பையன், வாரா வாரம் வந்து தவறாம கல்கி வாங்கிட்டுப் போவான் சார். அவன் சிவகங்கைக்கு ஆறாவது படிக்க வந்ததுலேருந்து வாங்கிட்டு இருக்கான். அவன் தாத்தாவும், அவனும் தீவிர வாசகர்கள். ஆனா, அவங்க பேர் எனக்குத் தெரியாது. கூத்தாண்டான் கிராமத்துல போயி விசாரிச்சுப் பாருங்களேன்!" சிவகங்கை நகர பெட்டிக் கடையொன்றில் நமக்குக் கிடைத்த துருப்புச் சீட்டு. நமது மனக் குதிரையில் ஏறியமர்ந்து, அதனை வேகமாய்த் தட்டினோம். மருது பாண்டியர் சீமை அல்லவா? மூன்று கி.மீ. தூரத்தை ஐந்தே நிமிடங்களில் கடந்து வந்து, நம்மை அந்த கிராமத்து மண்ணில் இறக்கிவிட்டது அந்த மாயக் குதிரை. (இதெல்லாம் சும்மா பீலான்னு நெனைக்காதிங்க. நம்ப டி.வி.எஸ். கம்பெனிக்காரங்க விட்ட முதல் இரும்புக் குதிரைங்க அது. பெயர் டி.வி.எஸ். ஃபிப்டி!)

நல்லாவே டிரில் வாங்கிட்டு, கடைசி ரவுண்டுலே அந்த மூணாவது தெரு முக்குல க்ளூ கிடைச்சது. " அந்தப் பட்டாளத்துக் கல்கியார் வூடுதானுங்களே? அப்படியே மேக்கால போயி, அப்பிடியே வடக்கால திரும்புங்க. தெக்குப் பார்த்த மச்சு வூடு". இது போதாதா நமக்கு! எழுந்து வந்து உபசரித்தார் ஓய்வு பெற்ற மேஜர் கு. மதுரைவீரன், வயது 76.

இருபத்தியெட்டு ஆண்டுகள் ராணுவப்பணியில் அவர் எங்கெங்கு தங்கி பணி புரிந்தாரோ, அந்த இடங்களுக்கெல்லாம் கல்கி வார இதழ் தவறாது தபாலில் சென்று சேர்ந்துள்ளது. அதனால்தான், அவரது பூர்விக கிராமத்திலேயே 'பட்டாளத்துக் கல்கியார்!' என்கிற பட்டப் பெயர் நிலைத்துப் போனது. "முதன் முதலாக 1956ல் வருடச் சந்தா பன்னிரண்டு ரூபாய் கட்டி, தபால் மூலமாகப் பெற்று கல்கி வாசித்தவன் நான். தொடர்ந்து அதன் ஐம்பதாண்டுக் கால வாசகன். என்னுடைய ராணுவப் பணியில் நான் எங்கெங்கு தங்கிப் பணிபுரிய நேர்ந்ததோ, அங்கெல்லாம் கல்கியைத் தவறாது தபால் வாயிலாக வரவழைத்துப் படித்தவன். இராணுவக் கேம்ப்புகளில் என்னை 'கல்கி பைத்தியம்' என்றே குறிப்பிடுவார்கள். நல்ல விஷயத்தில் பைத்தியமாக இருப்பதில் என்ன தப்பு?" என்று தோளைக் குலுக்குகிறார் மதுரை வீரன்.

"ஒவ்வொரு வாரமும் தாத்தாவுக்கு அப்புறமா நாந்தான் 'கல்கி' படிப்பேன்!" என்று அறிமுகம் செய்து கொண்டார் எம்.செல்வேந்திரன். கு. மதுரை வீரனின் மகன் வழிப் பேரன்.



நள்ளிரவில்

சிவகங்கை ராஜா பள்ளி மாணவன். செவ்வாய் மாலை பள்ளி விட்டதும் கடைக்குச் சென்று, கல்கி வாங்கிய பிறகே பேருந்தில் ஏறுபவன். அவனது அம்மா விஜயராணியும் கல்கி வாசகியே. கு. மதுரைவீரனின் உடன் பிறந்த தம்பி பி.கே. கணேசன் (66). விவசாயத்துறையில்

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

வேளாண்மை அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். ஒரே வீட்டில் இரண்டாக பாகம் பிரித்து கட்டிக் கொண்டு வசித்து வருகின்றனர். இவர் முப்பதாண்டுக் கால கல்கி வாசகர்.

ஒரு முறை, 1967ல் குடும்பத்துடன் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருந்தோம். நாக்பூர் தாண்டி பல்லார்ஷா என்னுமிடத்தில், எக்ஸ்பிரஸ் ரயிலில் எஞ்சின் மட்டும் தனியாகக் கழன்று போய்விட்டது. எஞ்சின் கப்ளிங் கழன்று தெறித்தது 'டமால்' என்ற




• பட்டாளத்து கல்கியார் குடும்பம்!

ஓசையுடன் எஞ்சின் கழன்றபோது, தூக்கத்தில் இருந்த அனைவரும் பதறியடித்து விழித்துக் கொண்டனர். அப்போது இரவு மணி ஒன்றரை. அந்த நள்ளிரவு நேரத்திலும், அக்கம்பக்கத்து கிராமத்து மக்கள் அங்கே ஒன்று திரண்டு வந்துவிட்டனர். டீ, காபி போட்டுக் கொண்டு வந்திருந்தனர். அவரவர் வீடுகளிலிருந்து கொண்டு வந்த கொழுக்கட்டையை ரயில் பயணிகளுக்கு மிகுந்த அன்புடன் கொடுத்து உபசரித்தனர். நட்ட நடுக்காடு. அவர்கள் உபசரிப்பில் திக்குமுக்காடிப் போனோம். அன்று விநாயக சதுர்த்தி. அதனால்தான் எங்கள் எல்லோருக்கும் கொழுக்கட்டை கிடைத்தது. இதில் ரயிலுக்கும் சரி, ரயில் பயணிகளுக்கும் சரி, எந்த பாதிப்பும் இல்லை. ''பிள்ளையார்தான் உங்கள் அனைவரையும் காப்பாற்றி உள்ளார். என்றனர் அந்த கிராம மக்கள். அவர்கள் சொன்னதும் மெய் சிலிர்த்துப் போனது எனக்கு. அந்தப் பரபரப்பான நேரத்திலும் நான் பைண்ட் செய்யப்பட்ட 'கல்கி' இதழ்களைப் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் பார்த்துக்கோங்களேன்'' என்கிறார் கு. மதுரை வீரன்.

கொழுக்கட்டை!

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

போட்டுத் தாக்கு!



சானியா மிர்சாவிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள்

1. ஒரே சர்வீஸ்ல கிரிக்கெட்டை க்ளீன் போல்டு ஆக்கினீங்களே, எப்படிம்மா?

2. மீடியாவுக்குத் தொத்தியிருக்கிற 'சானியா மேனியா' நோய்க்கு என்ன தெரபி செய்யணும்?

3. மரியா ஷரபோவாகிட்ட 'வாழ்க்கை ஒரு வட்டம்; இங்கே ஜெயிச்சவ தோற்பா; தோக்கிறவ ஜெயிப்பா'ன்னு ஆக்ரோஷமா 'பஞ்ச்' டயலாக் விட்டீங்களாமே?

4. வாரத்துக்கு ஒருமுறை (அழகான) மூக்கு பிடிக்க 'ஹைதராபாத் பிரியாணி' சாப்பிடாட்டி உங்களுக்குக் கைகால் அசையாதாமே?

5. ஸ்கூல்ல 34வது ரேங்க் எடுத்தா அடி பின்னிடறாங்க. ஆனா உங்களை மட்டும் உச்சி முகர்றாங்களே?

6. மூக்குத்திக்கு வாழ்வளிச்சீங்களே, அதுமாதிரி பாவாடை, தாவணி, ஒட்டியாணம், குஞ்சலம் இதுக்கெல்லாம் ஆதரவளிக்கக் கூடாதா?

7. 'யக்கா, டென்னிஸையெல்லாம் தூக்கி எறியுங்க. என்கூட கடிக்க ஸாரி... நடிக்க வந்துடுங்க'ன்னு எங்கூரு தொட்டி ஜெயா அழைக்கிறாராமே?

8. 'சானியா விளம்பரத்துல நடிக்கக்கூடாது'ன்னு ஷாருக்கான் - விளம்பரப் படப்பிடிப்பு இடைவெளியில பேட்டி தர்றாராமே!

9. நீங்க மட்டும் 'லவ் ஆல்' சொல்றீங்க? ஆனா லவ் பண்ண வந்தா மட்டும் ஓடறீங்களே!

10. குட்டைப் பாவாடையை எதிர்க்கறாங்களே. 'பம்பாய்' மனிஷா கொய்ராலா டிரஸ் சும்மாதானே இருக்கு? இரவல் வாங்கிக்கக் கூடாதா?

- பரமு


ஒரு முறை நீங்கள் வந்தால் போதும் - உங்கள்
தலைமுறை எல்லாம் எங்களை நாடும்.
சாரதா'ஸ்
Sk-301
Sm-403
Sk-310
சாரதா'ஸ்
சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45, என்.எஸ்.பி. ரோடு, திருச்சி–2. போன்:2702077
தன்பில்டிங், 827, மவுண்ட் ரோடு, சென்னை–2. போன்:28521177

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 972 / 03 - 05
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Sri Lanka